செந்தமிழ்ப் பொழில்

ஐந்தாம் படிவம்

சிறப்புப் பகுதி

பொன்னு. ஆ. சத்தியசாட்சி, B.O.L.,
தமிழாசிரியர்,
ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(In association with the United Society for Christian Literature)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.
COPYRIGHT
First printed, 1955

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1955. B4443

முகவுரை

பசுமையும் தண்மையும் அருமையும் அழகும் வழங்குவது பொழில். ஈண்டு இச் 'செந்தமிழ் பொழில்' அத்தகைய இன்பத்தினை யெல்லாம் கருத்துக்கு வாரி வழங்குகின்றது. மாணவர் நெஞ்சத்தை அள்ளும் பண்பு வாய்ந்த கவிதைகளும் கட்டுரைகளுமே இப்பாட நூலுள் அடங்கி யுள்ளன.

கவிதைகளும் கட்டுரைகளும் அரசியலார் விதித்துள்ள அளவுக்கு அதிகமாகவே இந்நூலுள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அரசியலார் அளவுப் படியும் தங்களுக்கு ஏற்கும் வண்ணமும் திட்டம் தயாரித்துக்கொள்ள இம்முறை உதவும். குறிப்புரைகள், வினாக்கள், பயிற்சிகள் ஆயன வேண்டும் அளவுக்குத் தரப்பட்டுள்ளன. உரைநடைப் பகுதிக்கெனப் பிற்சேர்க்கையாக ஓர் அருஞ்சொல் அகராதியும் அமைக்கப் பட்டுள்ளது. இந்நூல் மாணவர்களைத் தாய்மொழி இலக்கியங்கட்கு அழைத்துச் செல்லுமென்பது ஒருதலை.

பாடப்பகுதிகள் பலவற்றினை இந் நூலுள் சேர்த்துக் கொள்ள இசைவு வழங்கிய பெருமக்கட்கு என் உளமார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகும். ஏற்ற இடங்களில் உரிமை வழங்கியவர், ஆசிரியர், இன்னார் இன்னார் எனக் காட்டி யுள்ளேன்.

பழம் பெரும் பண்ணையாகிய 'கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்' இந்நூலை அச்சியற்றி வெளியேற்றும் பணியினை ஏற்று என்னை ஊக்குவித்தமைக்கு அச்சங்கத்தின்பால் யான் என்றென்றும் மாறாத நன்றி யுணர்வு கொண்டுள்ளேன்.

ஆசிரியர்களும் அரசியலாரும் ஆதரிப்பார்களாக.

போ. ஆ. ச.

கவிதை

I. அஞ்சலி

பக்கம்

1. இரட்சணிய மனோகரம் : பாளையங் கோட்டை மகா வித்துவான் எய்ச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை அவர்கள் ... 1
2. குறுந்தொகை : பாரதம் பாடிய பெருந்தேவனார் 1
3. பெருமாள் திருமொழி : குலசேகர ஆழ்வார் 2

II. பழம் பாடல்

1. புறநானூறு : பிசிராந்தையார், நெடுஞ் செழியன் 3
2. கலித்தொகை : குறிஞ்சிக் கலி : கபிலர் ... 5

III. கதை

1. கம்பராமாயணம் : திருவடி தொழுத படலம் 7
2. வில்லிபுத்தூரார் பாரதம் : கடோற் கசன் தூது 16
3. திருவிளையாடற் புராணம் : இந்திரன் பழி தீர்த்த படலம் : பரஞ்சோதி முனிவர் 23
4. கலிங்கத்துப் பரணி : போர் பாடியது, களம் பாடியது : சயங்கொண்டார் ... 30
5. மனோன்மணீயம் : வீரச் சுவை : பெ. சுந்தரம் பிள்ளையவர்கள், M.A. ... 34

IV. சிறு நூல்களும் பிறவும்

1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்: செங்கீரை, வருகை : குமர குருபர அடிகள் 38
2. திருவேங்கடத் தந்தாதி : பிள்ளைப் பெருமாள் ஐயங்கா ரவர்கள் ... 40
3. முத்தொள்ளாயிரம் 40
4. சிலேடை : காளமேகப் புலவர் ... 41
5. ஒருநாள் மாலை : பொ. ஆ. ச. ... 41

உரை

பக்கம்

1. இறையனார் அகப்பொருள் உரை 47
நக்கீரர்

2. அழகு 50
திருவாரூர் திரு. வி. கலியாணசுந்தரனார்

3. தமிழர் போர் முறை 56
வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், M.A., B.L.

4. வாரணம் பொருத மார்பன் 63
பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள், B.A., B.L.

5. வாட்போர் 68
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி யவர்கள், B.A.

6. கிறிஸ்துபெருமான் உவமைத்திறம் 74
பொ. ஆ. ச.

7. ஆசிரியர் இரஸ்கின் கற்பித்த ஓர் அறிவுரை ... 82
வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

8. தென்னிந்தியாவின் பழமைக்கான சான்றுகள் ... 91
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரைப் பிள்ளை யவர்கள், M.A., L.T.

அருஞ்சொல் அகராதி 98

நன்றி

தங்களுக்கு உரியனவாகிய கட்டுரைகளையும் கவிதைகளையும் இந் நூலுள் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய இப் பெருமக்கட்கு எம் என்றும் மறவா நன்றி உரியதாகும்.

இசைவு பெற்றவை	இசைவு அருளியவர்கள்
1. மனோன்மணீயத்துள் ஒரு பகுதி. 2. தென்னிந்தியாவின் பழமைக்கான சான்றுகள்.	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1
3. அழகு.	சாது அச்சுக்கூட உரிமையாளர், சென்னை 14.
4. தமிழர் போர் முறை.	வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், M.A., B.L., அண்ணமலை நகர்.
5. வாரணம் பொருத மார்பன்.	பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை யவர்கள், B.A., B.L., சென்னை 20.
6. வாட்போர்.	வி. எஸ். சுவாமிநாதன் அவர்கள், மதுரை.
7. ஆசிரியர் இரஸ்கின் கற்பித்த ஓர் அறிவுரை.	செயலாளர், The Educational Society, திருநெல்வேலி.

கவிதை : சிறப்புப் பகுதி

I

அஞ்சலி

1. இரட்சணிய மனோகரம்

கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப்
பெருங் கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை உயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக்
கண்டேனே.

காயொளியில் கதிர்பரப்புங் களங்கமினீ தியின்சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னைப் பணிக்கருஞ்சிந்
தாமணியைத்
தூயொளிகொள் நித்திலத்தைத் தூண்டாத
சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக்
கண்டேனே.

—எய்ச். ஏ. கிருஷ்ணபிள்ளை யவர்கள்.

2. குறுந்தொகை

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்.

3. பெருமாள் திருமொழி

தருதுயரம் தடாயேல் சரணல்லால் சரணில்லை;
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்(டு)
அம்மானே,
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி யதுவேபோன் றிருந்
தேனே!

—குலசேகர ஆழ்வார்.

குறிப்புரை

அஞ்சலி :

1. இரட்சணிய மனோகரம் : *கிறிஸ்துவின் வாயிலாக வருகின்ற இரட்சணியத்தைப்பற்றிப் பாடப்பெற்ற மனத்துக் கினிய பாடல்களைக் கொண்ட நூலாதலின் இப்பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் பாளையங் கோட்டை மகா வித்துவான் எச். ஏ. கிருட்டின பிள்ளை என்பவர். பத்தொன்பதாம் நூற்றாண்டினர்.*

விமல லோசனம் – குற்றம் அற்ற கண். உலவாத – அழியாத.

பணிக்கருஞ் சிந்தாமணி – குறைத்தற்கு முடியாத சிந்தாமணி. சிந்தாமணி என்பது வேண்டுவன வழங்கும் தேவ மணி என்பர். நித்திலம் – முத்து. சேய் – சிவப்பு; இளமை.

2. குறுந்தொகை : *இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. குறைந்த அடிகளையுடைய செய்யுட்களைக் கொண்ட நூலாதலின் இப் பெயர் பெற்றது. இருநூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் பாடிய பாடல்கள் இதன்கண் உள.—ஆசிரியர் பாரதக் கதையை உரையிடையிட்ட பாட்டுச் செய்யுளாக இயற்றியவராதலின் 'பாரதம் பாடிய' என்ற அடைமொழி அவர்தம் இயற்பெயருடன் சேர்வதாயிற்று.*

'சேவடியையும் மேனியையும் உடுக்கையையும் வேலினையும் கொடியினையும் உடைய முருகன் காப்ப' என்க. புரையும், அன்ன, ஏய்க்கும்: உவம உருபுகள். குன்றி – குன்றிமணி. குன்று – கிரவுஞ்ச மலை. ஏமம் வைகல் – இன்பமாகிய நாட்கள். ஆல்: அசைநிலை.

பகைவனாகிய சூரபன்மன் கிரவுஞ்ச மலையைத் தனக்கு அரணாகக் கொண்டு அசைத்து வர அம்மலையையும் அசுரனையும் கவேலிடம் பிளந்து முருகன் கொன்றனன் என்க.

3. பெருமாள் திருமொழி : *இது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளது. பிரபந்தத்தில் இப்பகுதியின் ஆசிரியர் குலசேகராழ்வார். இவர் சேரநாட்டு அரசர்; திருமால் பத்தியில் சிறந்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.*

நாடாயேல் – நீக்காயாயின். விரை – நறுமணம். வித்துவக்கோடு என்பது விஷ்ணு சமயத் தலங்கள் நூற்றெட்டனுள் ஒன்று. அரிசினம் – வருத்துகின்ற கோபம்.

அரிசினம் : வினைத்தொகை.

வினாக்கள்

1. இரட்சணிய மனோகரம், குறுந்தொகை, பெருமாள் திருமொழி குறிப்பு வரைக.
2. கிருஷ்ணபிள்ளை யவர்கள் சிலுவைமீது கண்ட காட்சி யாது?
3. பெருந்தேவனார் முருகனை எவ்வாறு வருணிக்கிறார்?
4. 'தாய் அகற்றிடினும் அவள்தன் அருள் நினைந்து அழும் குழவி'— இஃது எதற்கு உவமையாக்கப்பட்டது என விளக்குக.

II

பழம்பாடல்

1. புறநானூறு

[புறப்பொருளைப்பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் புறநானூறு. புறமாவது அறம் பொருள் இன்பம் என்னும் இம்மூன்றனுள் முன்னவாகிய இரண்டும்பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கம்.

புறநானூறு: இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரி பாடல், கலித்தொகை, அகநானூறு என்பன அத்தொகையுள் பிற நூல்கள் ஆம்.]

1

(கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் பாடியது)

அன்னச் சேவல் அன்னச் சேவல்
ஆடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின், இடையது

சோழநன் ஞட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க, இரும்பிசிர்
ஆந்தை யடியுறை·யெனினே, மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
அன்புறு நன்கல நல்குவன் நினக்கே.

திணை: பாடாண்டிணை துறை: இயன்மொழி

2

(பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற
நெடுஞ்செழியன் பாட்டு)

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்;
இளையன் இவன்"என வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரு மாவும்
படையமை மறவரும் உடையம் யாம்என்(று)
உறுதுப் பஞ்சா துடல் சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ(டு)
ஒருங்ககப் படேஎ னாயின், பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை;
புறப்போர் புன்கண் கூர,
இரப்போர்க் கீயா வின்மையான் உறவே!

திணை: காஞ்சி துறை: வஞ்சினக் காஞ்சி

2. கலித்தொகை

[கலித்தொகையும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. கலிப்பா வினத்துச் சிறந்த செய்யுளால் யாக்கப்பெற்றதனால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

இந்நூலுள் பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலி என ஐந்து கலிப்பகுதிகள் உள. இவற்றிற்கு ஆசிரியர்கள் முறையே சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ, கபிலர், மதுரை மருத னிளநாகனார், சோழன் நல்லுருத்திரன், மதுரை யாசிரியர் நல்லந்துவனார் என்பவர்கள்.]

குறிஞ்சிக் கலி

இடியுமிழ் பிரங்கிய விரவுபெயல் நடுநாள்·
கொடிவிடு(பு) இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயுஞ் செய்புன் யானை
அடியொதுங்(கு) இயக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை யேறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
தேன்செய் இருஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழி!........

—கபிலர்.

குறிப்புரை

பழம்பாடல் :

1. புறநானூறு : முதற் செய்யுள்:

கோப்பெருஞ் சோழன் என்பான் உறையூரிலிருந்து ஆட்சி செலுத் திய வேந்தன்; செந்தமிழ்ப் புலவன். இவற்கும் பிசிராந்தையார்க்கும் ஒரு வரை யொருவர் காணாமலே உணர்ச்சியால் நட்பு வளர்ந்தது.

பிசிர் என்பது பாண்டி நாட்டில் இருந்ததோ ரூர். ஆந்தையார் அவ் வூரினர். ஆகவே பிசிராந்தையார் எனவே அப்பெரும் புலவர் வழங்கப்பட்ட னர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறக்கத் தாமும் ஆங்குச் சென்று அவனோ டுயிர் நீத்தனர்.

பாடாண்டிணை யாவது பாடப்படுகின்ற ஆண்மகனின் கீர்த்தி, வலி, கொடை, தண்ணளி ஆயவற்றை ஆராய்ந்து பாடுவது.

இயன்மொழித்துறை யாவது பாடப்படுகின்ற தலைவனின் சிறந்த இயல்பினைப் பாராட்டிக் கூறுவது.

ஆடு கொள் – கொல்லுதலைப் பொருந்திய. தலையளித்தல் – அன்புடன் காத்தல். கோடு கூடு மதியம் – இரண்டு பக்கும் வந்து பொருந்திய மதியம். யாம் கையறுபு இனைய – யாம் செயலற்று வருந்த. அயிரை – சிறு மீன் வகை. இடையது – வடமலைக்கும் குமரிக்கும் இடையே யுள்ளதாகிய. கோழி – உறையூர். குறும் பறை அசைஇ – இளமையான பெடையொடு தங்கி. வாயில் விடாது – வாயிற் காவலற்குச் சொல்லாமல். இரும் பிசிர் – பெரிய பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்த. அடியுறை – அடிமை.

புறநானூறு, இரண்டாஞ் செய்யுள்:

சிற்றரசரும் பேரரசருமாகிய எழுவரைத் தலையாலங்கானம் என்னுமிடத்தில் வென்றனதலின் இவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என வழங்கப்பட்டனன். இவன் ஆண்டில் இளையான் என்று இகழ்ந்தார் அவ்வரசர் எனக் கேள்வியுற்றபோது கனன்று இந்நெடு மொழிகளைப் புகலலுற்றனன். இவன் அரிய புலமையும் மாங்குடி மருதனார் முதலிய சான்றோரின் கேண்மையும் பெற்றுத் திகழ்ந்தவன்.

காஞ்சித் திணையாவது போர் செய்தற்குத் துணிந்த பகைவர்க்கு எதிர் சென்று ஊன்றுதல். இத்திணை இருபத்தொரு துறைகளை யுடையது.

அவற்றுள் வஞ்சினக் காஞ்சி என்னும் துறையாவது வெய்ய கோபத்தையுடைய மன்னவன் போருக்கெழுகையில் பகைவரை இவ்வாறு செய்வேன் எனச் சூளுரை செய்வது.

நாடு மீக் கூறுநர் நகு தக்கனர் – இவன் ஆளும் நாட்டை மிகுத்துச் சொல்லுவார் நம்மால் சிரிக்கப்படத் தக்கவர். உளைய – வெறுப்ப. படு – ஒலிக்கின்ற. பா அடி – பரந்த பாதங்கள். பணைத் தாள் – பெரிய கால்கள். மறவர் – வீரர். உறு துப்பு அஞ்சாது – எனது மிக்க வலிமைக்கு அஞ்சாமல். உடல் சினம் – மாறுபடு சினம். அகப்படேஎ னாயின் – கொண்டிலே னாயின். செல் நிழல் – சென்று அடைதற்குரிய நிழல். குடி – குடிமக்கள். மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புலவர் யாவரும் என்க. புலவர் பாடாது என் நில வரையை நீங்குக. புன்கண் – துயரம். இன்மை – வறுமை.

உறு: உரிச்சொல். உடல்சினம்: வினைத்தொகை.

2. கலித்தொகை: பிரங்கிய – ஒலிக்கின்ற. விரவு பெயல் – எங்கும் கலந்த மழையினால். இருளிய நடுநாள் – இருண்டிருந்த நடுப்பகலிலே. விளக்கம் – விளக்கு. 'பிடியொடு புன்செய் மேயும் யானை' என்க. ஆசினிப் பணவை – ஆசினிப் பலாவின்மேல் அமைக்கப்பட்ட பரண். கை விடுதல் – எறிதல். இறு – முறிந்த. வீ சிதறி – பூக்களைச் சிதறி. உதிரா – உதிர்த்து. இறால் – தேனடை. நறு வடி – நறிய வடுவினையுடைய. வடு – மாம்பிஞ்சு. தளிர் – கொழுந்து. உழக்கி – கலக்கி. இழியா – இழிந்து.

கானவன் எறிந்த கல்லானது தெறி, உதிர்த்து, போகி, உழக்கி, ஒழிந்து, தங்கும் என்க.

நெடுவரை, கொழுமடல்: பண்புத் தொகைகள். பாடுகம்: உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று. வாழி: முன்னிலை யசை.

வினாக்கள்

1. புறநானூறு; கலித்தொகை : குறிப்பு வரைக.

2. பாடாண்டிணை காஞ்சித் திணை யாவை யாவை?

3. பிசிராந்தையார் அன்னச் சேவலிடம் கூறியவற்றை நும் சொந்த சொற்களில் வரைக.

4. அவர் பாடல் இயன்மொழி யாமாறு எங்ஙனம்?

5. 'நகு தக்கனரே' என்று வரும் பாட்டு எழுந்த வரலாற்றைத் தெரிவிக்க.

6. அப்பாடலை அடிப்படையாகக்கொண்டு நெடுஞ்செழியனின் சிறந்த பண்புகளை வரைக.

7. கானவன் கல் வீச்சுக்குக் காரணம் என்ன?

8. கானவன் எறிந்த கல்லின் போக்கினைத் தெரிவிக்க.

8. கோடிடப்பட்டுள்ளவற்றிற்கு இலக்கணப் பெயர் தருக.

(அ) நன்கலம் நல்குவன் நினக்கே.

(ஆ) உறு துப்பு அஞ்சாது உடல்சினம்.

(இ) உலகமொடு நிலைஇய.

(ஈ) பாடுகம் வா வாழி தோழி.

III

கதை

1. கம்பராமாயணம்

சுந்தர காண்டம்—திருவடி தொழுத படலம்

[கம்பராமாயணம்: ஆறாம் வேற்றுமைத் தொகை. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனினும் அமையும்.

வான்மீகி வடமொழியில் எழுதிய ராமாயணம் இதற்கு முதனூல் ஆகவே இது வழிநூல். கம்பர் இதற்கு இட்ட பெயர் இராம கதை என்பதே.

கம்பர் உவச்சர் குடியினர்; கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர். 9-ஆம் நூற்றாண்டினர் எனவும் சொல்லுவர். ஒட்டக் கூத்தர், ஒளவையார், புகழேந்தி ஆகிய புலவர்கள் இவர் காலத்திருந்தவர்கள். திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் என்பவரால் இவர் ஆதரிக்கப் பெற்றார். சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதியந்தாதி ஆகியன இவர் எழுதிய வேறு நூல்களாகும்.

கம்பராமயணத்துள் காண்டம் பெரும் பகுதி; படலம் அதனுட் பகுதி.

கம்பராமாயணத்துக் காண்டங்கள் பாலகாண்டம், அயோத்தியா கண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் உத்தர காண்டம் ஆயன.

பாடப் பகுதி சுந்தர காண்டத்துள் வருவது. பிற காண்டங்களினும் இதுவே மிக அழகாக அமைந்திருத்தலாலும் இதனுள் அதிகமாய்ப் பேசப் படுகிற அனுமனுக்குச் சுந்தரன் என்று ஒரு பெயர் உண்மையாலும் இக் காண்டத்துக்கு இப்பெயர் இடப்பட்டது என்பர்.

இலங்கை யெங்கணும் திரிந்து, இறுதியில் அசோக வனத்துள் சீதையைக் கண்டு மீண்ட அனுமன், இராமனுடைய திருவடிகளைத் தொழுது நின்று, செய்தி கூறுகின்றானதலின் இப்படலம் திருவடி தொழுத படலம் எனப்பட்டது]

(இராமபிரான் சுக்கிரீவனை அனுகித் 'திரும்பி வந்த வானரத் தானையர் சீதையைத் தப்பறக் கண்டனம் என்பரோ' என வினவுகின்றனன். அவ்வாறு உரையாடுகையில் அனுமன் வரவை இராமபிரான் நோக்குகின்றான்.)

1. என்புழி அனுமனும் இரவி என்பவன்
தென்புறத் துளனெனத் தெரிவ தாயினான்;
பொன்மொழி தடக்கையப் பொருவில் வீரனும்
அன்புறு சிந்தையன் அமைய நோக்கினான்.

(அனுமன் பிராட்டியின் இருப்பைக் குறிப்பாக உணர்த்துதல்)

2. எய்தினன் அனுமனும், எய்தி ஏந்தறன்
மொய்கழல் தொழுதிலன், முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
'வையகந் தழீஇநெடி திறைஞ்சி' வைகினான்.

(அனுமன் செயல் கண்டு இராமன் குறிப்பாலுணர்தல்)

3. திண்டிறல் அவன்செயல் தெரிய நோக்கினான்,
வண்டுறை யோதியும் வலியள்; மற்றிவன்
கண்டதும் உண்(டு;)அவள் கற்பு நன்றெனக்
கொண்டனன், குறிப்பினால் உணரும் கொள்கையான்.

(இராமன் கொண்ட உவகை)

4. ஆங்கவன் செய்கையை அளவை யாமென
ஓங்கிய வுணர்வினுல் விளைந்த துன்னினன்;
வீங்கின தோள்;மலர்க் கண்கள் விம்மின;
நீங்கிய தருந்துயர்; காதல் நீண்டதே.

(அனுமன் சீதையைக் கண்ட செய்தியைக் கூறுதல்)

5. கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகடல் இலங்கைத் தென்னகர்;
அண்டர்நா யக, இனித் தவிர்தி ஐயமும்
பண்டுள துயருமென்(று) அனுமன் பன்னுவான்.

வேறு

6. உன்பெருந் தேவி யென்னும்
உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும்
வாய்மைக்கும், மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னுந்
தகைமைக்கும் தலைமை சான்ருள்
என்பெருந் தெய்வம், ஐயா!
இன்னமுங் கேட்டி, என்பான்.

7. பொன்னல தில்லைப் பொன்னை
யொப்பெனப் பொறையில் நின்ருள்
தன்னல தில்லைத் தன்னை
யொப்பெனத் தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை
யொப்பென நினக்கு நேர்ந்தாள்
என்னல தில்லை என்னை
யொப்பென எனக்கும் ஈந்தாள்.

8. உன்குலம் உன்ன தாக்கி
உயர்புகழ்க் கொருத்தி யாய
தன்குலம் தன்ன தாக்கித்
தன்னையித் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக் கீந்தவ்
வானவர் குலத்தை வாழ்வித்(து)
என்குலம் எனக்குத் தந்தாள்;
என்னினிச் செய்வ தெம்மோய்!

9. விற்பெருந் தடக்கை வீர
வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்;
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்.

10. வேலையுள் இலங்கை யென்னும்
விரிநகர் ஒருசார் விண்டோய்
காலையு மாலை தானும்
இல்லது கனகக் கற்பச்
சோலையங் கதனுள் உம்பி
புல்லினாற் றொடுத்த தூய
சாலையின் இருந்தாள், ஐய,
தவஞ்செய்த தவமாந் தையல்.

11. மண்ணொடுங் கொண்டு போனான்
வானுயர் கற்பி னாள்தன்
புண்ணிய மேனி தீண்ட
அஞ்சுவான்; உலகம் பூத்த
தண்ணகல் கமலத் தண்ணல்
'கருத்திலாள் தொடுதல் கண்ணின்
எண்ணருங் கூறாய் மாய்தி'
என்றதோர் மொழியுண் டென்பான்.

12. இலங்கையை முழுது நாடி
இராவணன் இருக்கை எய்தி
பொலங்குழை யவரை யெல்லாம்
பொதுவுற நோக்கிப் போந்தேன்
அலங்குதண் சோலை புக்கேன்;
அவ்வழி அணங்க ளூளக்
கலங்குதெண் டிரையிற் றூய
கண்ணினீர்க் கடலிற் கண்டேன்.

13. தையலை வணங்கற் கொத்த
இடம்பெறுந் தன்மை நோக்கி,
ஐய,நான் இருந்த காலை
அலங்கல்வே லிலங்கை வேந்தன்
எய்தினன் இரந்து கூறி
இறைஞ்சினன் இருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக்
கோறன்மேற் கொண்டு விட்டான்.

14. ஆயிடை அணங்கின் கற்பும்
ஐயநின் அருளுஞ் செய்ய
தூயநல் லறனும் என்றிங் (கு)
இனையன தொடர்ந்து காப்பப்
போயின னரக்கி மாரைக்
'கொல்லுமின் போமின்' என்றாங்(கு)
ஏயினன்; அவரெ லாம்என்
மந்திரத் துறங்கி யிற்றார்.

15. அன்னதோர் பொழுதில் நங்கை
ஆருயிர் துறப்ப தாக
உன்னினள் கொடியொன் றேந்திக்
கொம்பொடும் உறைப்பச் சுற்றித்
தன்மணிக் கழுத்திற் சார்த்தும்
அளவையிற் றடுத்து நாயேன்
பொன்னடி வணங்கி நின்று
நின்பெயர் புகன்ற போழ்தில்

16. வஞ்சனை யரக்கர் செய்கை
இதுவென மனக்கொண் டேயும்
"அஞ்சன வண்ணத் தான்றன்
பெயருரைத் தளியை என்பால்
துஞ்சுறு பொழுதிற் றந்தாய்
துறக்கல்" என் றுவந்து சொன்னாள்
மஞ்செ்ன வண்ணக் கொங்கை
வழிகின்ற மழைக்க ணீராள்.

17. அறிவுறத் தெரியச் சொன்ன
பேரடை, யாளம் யாவும்
செறிவுற நோக்கி, நாயேன்
சிந்தையில் திருக்க மின்மை,
குறியுரை யெண்ணி, வண்ண
மோதிரம் காட்டக் கொண்டாள்;
இறுதியி னுயிர்தந் தீயும்
மருந்தொத்த தனைய(து), எந்தாய்!

18. வாங்கிய வாழி தன்னை
வஞ்சரூர் வந்த தாமென்(று)
ஆங்குயர் மழைக்க ணீரால்
ஆயிரங் கலசம் ஆட்டி
ஏங்கினள் இருந்த தல்லால்
இயம்பலள்; எய்த்த மேனி
வீங்கினள் வியந்த தல்லால்
இமைத்திலள்; உயிர்ப்பு விண்டாள்.

19. இங்குள தன்மை யெல்லாம்
இயைபுழி யியம்பக் கேட்டாள்;
அங்குள தன்மை யெல்லாம்
அடியனேற் கறியச் சொன்னாள்;
"திங்களொன் றிருப்பென் இன்னும்;
திருவுளந் தீர்ந்த பின்னை
மங்குவன் உயிரொ(டு)" என்றுன்
குரைகழற் றலைக்கண் வைத்தாள்.

(இவ்வனம் கூறி அனுமன் சீதை கொடுத்த சூளாமணியை
இராமபிரானிடம் கொடுத்தனன்)

20. பொடித்தன வுரோமம்; மேன்மேற்
பொழிந்தன கண்ணீர்; பொங்கித்
துடித்தன மார்புந் தோளும்;
தோன்றின வியர்வின் றுள்ளி;
மடித்தது மணிவாய்; ஆவி
வருவது போவ தாகித்
தடித்தது மேனி; என்னே!
யாருளர் தன்மை தேர்வார்?

குறிப்புரை

1. என்புழி – என்றிவ்வாறு இராமன் வினவிய பொழுது. இரவி – சூரியன். பொருவு இல் – ஒப்பு இல்லாத. சிந்தையன் – சிந்தையனாக.

2 ஏந்தல் + தன் = ஏந்தற்றன்; ஏந்தறன். மொய் – வலிமை. மூளரி நீங்கிய தையல் – தாமரை மலரை நீங்கி(ப் பூமியில் பிறந்துள்ள) இலக்குமியாகிய சீதை. தையல் – பெண். வையகம் தழீஇ – பூமியில் விழுந்து.

ஏந்தல்: ஆண்பாற் சிறப்புப் பெயர்.

3. நோக்கினன் – நோக்கி. நுதி – கூந்தலை யுடையவளான பெண்; சீதை.

நோக்கினன்: முற்றெச்சம்.

4. அளவை ஆம் – அளக்கும் கருவி ஆகும்.

5. சீதையைக் கண்டானென எண்ணி நிற்கும் இராமனுக்கு மகிழ்ச்சி யுண்டாக 'கண்டனன்' என அனுமன் கூறினன். இனிக் கண்டேம் பயனென், கற்புளதோ என்பது விளக்குதற்குக் 'கற்பினுக்கு அணியை' எனவும், பிறர் அலர், யானே கண்டேன் என்பதனைக்கக் 'கண்டனன்' எனவும் அனுமன் கூறினன் என்க. தெண்மை + திரை = தெண்டிரை: பண்புத் தொகை. அலை கடல் வினைத்தொகை.

6. தலைமைசான்றான் – சிறப்பு மிகுந்திருக்கிறான். கேட்டி: கேள் + (ட்) இ; 'ட்' எழுத்துப் பேறு.

7. 'தன் அலது இல்லை தன்னை ஒப்பு எனப் பொறையில் நின்றான்' என்க. பொறை – பொறுமை. நினக்கு நேர்ந்தான் – உனக்குப் புகழ் அளித்தான்..

பொறை: தொழிற் பெயர். 'பொறு' பகுதி. 'ஐ' விகுதி.

8. தனிமை செய்தான்: இராவணன். 'வன்குலம் கூற்றுக்கு ஈந்து' என நடந்ததாகக் கூறியது இராவணன் விரைவில் அழிந்தே தீர்வன் என்பது புலப்படுத்திற்று.

உயர் புகழ்: வினைத்தொகை. செய்தான்: வினையாலணையும் பெயர். ஈந்து, வாழ்வித்து என்பன காலவழுவமைதிகள்.

9. வீங்கு நீர் — மிக்க நீரையுடைய கடலால் சூழப்பட்ட. இலங்கை வெற்பில் — திரிகூட மலையில் உள்ள இலங்கையின். இல் பிறப்பு — உயர்ந்த குடிப் பிறப்பு.

நடக்கை: உரிச்சொற்றொடர். வீங்கு நீர்: வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இங்ஙனம் பண்பையுடைய பொருளை விலக்கிப் பண்பையே கண்டதாகக் கூறுவது பொருள் விலக்கணி எனப்படும்.

10. வேலை — கடல். விரிகர்: வினைத்தொகை. உம்பி: உன் தம்பி என்பதன் மரூஉ.

11. உலகம் பூத்த — உலகங்களை உண்டாக்கிய. அண்ணல் — பிரமன். கருத்து இலாள் — உன்னுடன் அன்புகொள்ளக் கருத்து இல்லாத எவளையும். கண்ணின் — கருதினால்.

அஞ்சுவான்: முற்றெச்சம். கமலத் தண்ணல்: ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

'கமலத்தண்ணல்......மொழியுண்டு': ஒரு சமயம் புஞ்சிகஸ்தலை என்னும் பெண் ஒருத்தி பிரமனை வணங்கச் சென்றாள். அவளைக் கண்ட இராவணன் அவள்பால் காமுகனாகி முறை கேடாக நடந்துகொண்டான். அவள் பிரமனிடம் செல்லவும், அவள் நிலையுணர்ந்த பிரமன், 'இராவணன் இனி அவன்பால் கருத்தில்லாத பெண்ணைத் தொட்டால் அவன் தலை நூறாக வெடித்து இறப்பானாக' எனச் சாப மிட்டனன் என்பர்.

12. பொலம் குழையவர் — பொன்னால் செய்யப்பட்ட குழை என்னும் காதணி யணிந்த பெண்கள். அலங்கு — காற்றினால் அசைகின்ற: கலங்கு தெண் திரையிற்று — காற்றினால் அலைகின்ற தெளிந்த அலைகளையுடைய.

தண்சோலை, தெண்டிரை: பண்புத்தொகைகள். கலங்குதிரை: வினைத்தொகை.

13. அலங்கல் வேல் — வெற்றி மாலை அணியப்பெற்ற வேலாயுதத்தையுடைய. கோறல் — கொல்லுதல்.

எய்தினன், இறைஞ்சினன்: முற்றெச்சங்கள். கொல் + தல் = கோறல்.

14. செய்ய — செம்மையானதாகிய. உறங்கி இற்றார் — தூங்கிவிட்டனர். இற + ஆர் = இற்றார். பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது.

15. கொம்பு — மரக்கிளை. உறைப்ப — உறுதியாக. இச்செய்யுள் அடுத்த செய்யுளுடன் தொடர்ந்து முடிவது. இது குளகம்.

16. மனக் கொண்டேயும் – துணிவாக மனத்தில் எண்ணியும் அஞ்சன வண்ணத்தான்: இராமன். அஞ்சனம் – மை. துறக்கல் தந்தாய் – உயிர் நீக்கும் எண்ணத்தை யான் துறந்துவிடச் செய்தனை. மஞ்சு – மழை. மழைக் கணீர் – மிக்க கண்ணீர்.

அனையை – முன்னிலை ஒருமை வினைமுற்று.

17. செறிவு உற நோக்கி – பொருத்தமாக இருத்தலை ஆய்ந்து. திருக்கம் – மாறுபாடு, வஞ்சகம். குறியுரை – அடையாள மொழிகள்.

18. ஆழி – மோதிரம். ஆயிரம் கலசம் ஆட்டி – ஆயிரம் குட நீரால் கழுவுவதுபோல் நீராட்டி. எய்த்த – இளைத்த. உயிர்ப்பு விண்டாள் – பெருமூச்செறிதலும் நீங்கப் பெற்றாள். இங்குப் பயின்றது தற்குறிப்பேற்ற வணி.

19. திருவுளம் தீர்ந்த பின்னை – (அதற்குள் என்னை வந்து மீட்டுக் கொண்டு செல்லப் பிராற்கு) மனமில்லை யாகுமாயின் அதன் பின்பு. உயிரொடு மங்குவன் – இறந்துவிடுவேன். குரை – ஒலிக்கின்ற. குரை கழல் தலைக்கண் வைத்தான் – வணங்கினான்.

குரைகழல்: வினைத்தொகை.

20. பொடித்தன – சிலிர்த்தன.

வினாக்கள்

1. சுந்தர காண்டம், திருவடி தொழுத படலம்: பெயர்க் காரணம் தருக.

2. 'இரவி என்பவன் தென் புறத்து உளன்' – இவ்வுவமை ஆளப் பட்ட இடத்தினை யுரைக்க.

3. அனுமன் செயல் கண்டு இராமன் குறிப்பா லுணர்ந்தன யாவை?

4. 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்' – நயங் காட்டுக.

5. சீதையைக் கண்டு வந்த மாருதி இராமனிடம் அப்பிராட்டியின் சிறப்பினை விரித்துக் கூறியதைத் தொகுத் துரைக்க.

6. சீதை கற்புடனேயே இருக்கின்றாள் என்றற்கு அனுமன் காட்டிய துணைகள் யாவை?

7. சீதையை வணங்குதற்கு ஒத்த சமயம் பார்த்துக்கொண்டிருந்த அனுமன் கண்ட காட்சி யாது?

8. சீதை ஆழி பெற்று ஆனந்தக் கண்ணீர் விட்டதனைக் கவிஞர் எவ்வாறு புனைந்துரைக்கின்றனர்?

9. சீதை அனுப்பிய சூளாமணியைக் கண்ட இராமபிரான் நிலையினைப் புலப்படுத்துக.

10. இவற்றிற்கு விளக்கம் தருக.

(அ) காதல் நீண்டது.

(ஆ) தன்னை இத் தனிமை செய்தான் — வன்குலம் கூற்றுக் கீந்து அவ் வானவர் குலத்தை வாழ்வித்து.

(இ) மேனி தீண்ட அஞ்சுவான்.

(ஈ) இறுதியின் உயிர் தந்து ஈயும் மருந்து ஒத்தது அனையது.

11. இடம் சுட்டுக.

(அ) திங்கள் ஒன்று இருப்பன் இன்னும்.

(ஆ) துஞ்சுறு பொழுதிற் றந்தாய் துறக்கல்.

12. அனுமன் 'சொல்லின் செல்வன்' என்பதனைப் புலப்படுத்துக.

13. உறுப்பிலக்கணம் தருக: நோக்கினன், கோடி, கோறல், இமைத்திலள், இற்றூர்.

14. பொருள் விலக்கணி, தற்குறிப் பேற்றவணி ஆயவற்றிற்கு இப் பகுதியிலிருந்து சான்று காட்டுக.

---

2. வில்லிபுத்தூரார் பாரதம்

கடோற்கசன் தூது

[பாரதக் கதையினைத் தமிழில் பாடினருள் வில்லிபுத்தூராரும் ஒருவர். இவருடைய பாரதமே பெரு வழக்கில் இருப்பது. இவர்தம் தந்தையார் வீரராகவாசாரியார் என்பார். விஷ்ணு சமய அந்தணர். புலவரது ஊர் திருமுனைப்பாடி நாட்டி லுள்ள சனியூர் என்பது. இவரை ஆதரித்த வள்ளல் வக்கபாகை வரபதி யாட்கொண்டான் என்பான். இவரது காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி.

இந்நூல் ஒரு வழிநூல். வடமொழியி லுள்ள வியாசபாரதம் இதற்கு முதனூல்.

பதின்மூன்றாம் நாட் போரில் சயத்திரதன் என்பான் அருச்சுனன் மகன் அபிமன்னியுவைக் கொன்றான். அதனை யுணர்ந்த அருச்சுனன், "மைந்தனை மௌலி துணித்தவனை, எத்துணைக் காவல் மிகுப்பினும் வெயிலவன் வீழ்வதன்முன் கொன்றிடுவேன்; தப்பின் கனலிற் குதித்திடுவேன்" என வஞ்சின முரைத்து, உரிய படைக்கலம் பெறுதற்குக் கண்ணனுடன் கயிலை சென்றனன். இச்செய்தியைத் துரியோதனற்குத் தெரிவித்துவிடும் படி தருமர் வீமன் மகன் கடோற்கசனை அனுப்புகின்றனர்.]

(வாயிற் காவலர் 'யார்' என வினவியமைக்குக் கடோற்கசன் கொடுத்த விடை)

1. எதிரெதிர் கொற்றவன் வாயிலின்
நின்றவர் யாரென வெய்துதலும்
'அதிர்முர சக்கொடி யோன்அர
வக்கொடி அரசனி டைப்பகர்வான்
முதிரவு ரைத்ததொர் மொழியுள
தச்சொன்மொ ழிந்திட வந்தனன்யான்
எதிரறு வெற்றிய ரிக்கொடி
யோன்மகன்' என்றனன் விக்ரமனே.

(கடோற்கசன் அவையுட் புகுதல்)

2. அம்மொழி தீயுரும் ஏறென
நீடவை அரசர்செ விப்படலோர்
செம்மொழி யற்றவன் மொழிவழி
சென்றொரு சிறிதும தித்தருளான்
'நும்மொழி விட்டொரு மெய்ம்மொழி
கேள்'என நோதகு நெஞ்சினனும்,
'வெம்மொழி வித்தக எம்மொழி
நுந்தைதன் மெய்ம்மொழி' என்றனனே.

(செய்தியினைச் சொல்லுதல்)

3. 'தன்றிரு மைந்தனை மௌலிது
ணித்தசய த்திர தன்றனைவாள்
வென்றிகொள் காவலர் காவல்மி
குப்பினும் வெயிலவன் வீழ்வதன்முன்
கொன்றிடு வேன்;அது தப்பின்அ
ருங்கன லூடுகு தித்திடுவேன்,
என்றுமொ ழிந்தரன் வாழ்கயி
லாயமும் எய்தினன் வில்விசயன்.

4. 'வஞ்சனை யால்அம ரிற்பகை
தன்னைம லைப்பது பாதகமென்(று)
அஞ்சின னாதலின் நீயறி
யும்படி ஐயன்வி டுத்தனனால்,
எஞ்சினன் நானையுன் மைத்துனன்
என்றுகொள்' என்றனன் வன்றிறல்கூர்
நெஞ்சினில் வேறொரு சஞ்சல
மற்றநி சாசரன் மாமருகன்.

வேறு

(துரியோதனன் கூற்று)

5. மன்மைந்தர் பலரொடும்போய் மறித்தொருவர் மீளாமல்
மலைந்து வீழ
என்மைந்தன் இறந்திடவும் யாதொன்றும் புகலாமல்
இருக்கின் றேன்யான்;
தன்மைந்தன் இறந்தனனும், தான்தழலின் மூழ்குவனும்;
சபதங் கூறி
வின்மைந்தின் மிகுந்தவருக் கழுதிரங்கி அரற்றுவது
வீரந் தானோ?

6. பயத்திரவின் நடுங்கியரன் பருப்பதம்புக் கவன்கொடுத்த
படையும் வாங்கி
வயத்திரத மால்கடவ வந்தெதிர்தோன் றுவனாகில்
மகர மோதுங்
கயத்திரவி விழுவதன்முன் கையறுதன் புதல்வனைப்போர்
களத்தில் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையால் தான்படுதல் உறுதியெனச்
சாற்று வாயே.

7. என்னினும்பார் தனக்குரியன்; சிலைத்தொழிலில் சிலைக்குருவாய்
எவரும் போற்றும்
மன்னினுந்தான் மிகவலியன்; தண்டெடுத்தால் உந்தையினும்
வலியன்; சால
உன்னினுந்தோள் உரனுடையன்; மதியாமல் இப்படிநீ
உரைக்கல் ஆமோ?
தன்னினும்போர்க் கெளியனோ சயத்திரதன் தானென்று
சாற்று வாயே.

8. ஆளையா ணிலையறிவ தல்லதுமற் றறிபவர்யார்? அணிந்த போரின்
நாளையார் வெல்வரெனத் தெரியுமோ? எனநவின்று
நகைத்தான் மன்னோ,
பாளைவாய் நெடுங்கமுகின் மிடறொடியக் குலைத்தெங்கின்
பழங்கள் வீழ
வாளைபாய் குருநாடும் எந்நாடு முழுதாளும்
மன்னர் கோமான்.

(அங்கர் கோமான் கன்னனின் கூற்று)

9. தாரரசன் மகன்,துச்சா தனன்மகன்,சல் லியன்மகன்,வேல்
சகுனி என்னும்
பேரரசன் மகன்முதலா எத்தனைபேர் பட்டாலும்
பெரிய தன்றே
பாரரசா ளுதற்கிருந்த பார்த்தன் மாமகன்ஒருவன்
பட்டா னகில்
'ஆரரசுக் கினியுரியார், அந்தோ!என் றுரைத்தான்மற்
றங்கர் கோமான்.

10. அங்கிருந்து சயத்திரதன் ஆவிகவர்ந் திடுவலென
ஆண்மை கூறி
பங்கிருந்த உமாபதிபால் பணிந்துவரம்
பெறச்சென்ருன்
பார்த்த ஞகில்,
கொங்கிருந்த தாராய்! நின் குடைநிழற்கீழ்
இதுகாலங்
கூட்டங் கூடி
இங்கிருந்த வேழையரேம் என்செயமற்
றிருக்கின்றேம்?
என்று சொன்ஞன்.

(கடோற்கசன் வீர மொழிகள்)

11. இவன்மொழிந்த இகல்உரைகேட் டிடிப்பன்மரு
மகன்வெகுளுற்
றென்சொன் ஞலும்
அவனிதல முழுதுமினி அரசாள நினைந்திருந்தீர்
அறிவி லீர்காள்,
சிவனெரிசெய் புரம்போலும் பாடிவீ டழலூட்டிச்
சேனை யாவும்
பவனன்மகன் மகன்என்னும் பரிசறியத்
தொலைத்திடு
படுத்து வேனே!

12. தசைகுருதி மிசையொழுகத் தனித்தனியே
எதிர்த்தவரைத்
தலைகள் சிந்த
விசையன்வர வேண்டுமோ?மற் றுள்ளார்தி
ரண்டுவர
வேண்டு மோதான்?
திசைபுலரு முனமுனைந்து நீருக்கி விடுகுவன்,என்
திருபன் சொன்ன
அசைவில்மொழி மறுத்துடற்றல் ஆகாதென்
றிருக்கின்றேன்,
அறிகி லீரே.

13. இருவரெதி ரெதிர்தம்மில் இகல்பொருதல்
உலகியற்கை;
யாருங் கூடிப்
பருவமுறாத் தனிக்குதலைப் பாலகனுக் காற்றாமல்
பறந்து போனீர்;
ஒருவனெடுந் தேரழிக்க ஒருவன்மலர்க் கைதுணிக்க
ஒருவன் பின்னைப்
பொருவனென அறைகூவிப் பொன்றுவித்தான்;
இதுகொண்டோ,
புகல்கின் றீரே!

(துரியோதனன் சீற்றம்)

14. வரைக்குவமை பெறுந்தடந்தோள் வீமன்மகன்
இப்படியே
மதியான் ஆகி
உரைக்குமொழி கேட்டிருந்த உரகமணி
கொடிவேந்தன்
உருத்து நோக்கி,
இருக்குமெழில் அவைக்கேற்ற இயம்பாமல்
தன்மதத்தால்
இயம்பு கின்ற
அரக்கிமக னுடனென்றுங் கழறேலென்
றனன்இருந்த
அரசர் யார்க்கும்.

(பின்பு கடோற்கசன், சயத்திரதன் உயிர்போதல் உறுதி எனக் கூறி மீண்டனன் என்க)

குறிப்புரை

1. நின்றவர் – நின்றுகொண்டிருந்த காவலர். முரசக் கொடியோன்: தருமன். அரவக் கொடி அரசன்: துரியோதனன். முதிர – மேன்மையுற. அரிக்கொடியோன்: வீமன். விக்ரமன் – பராக்கிரமனாகிய கடோற்கசன்.

2. தீ உகும் ஏறு என – தீயை உமிழும் பேரிடி போல. செம்மொழியற்றவன்: துரியோதனன். சேர் தரு – புதல்வனை இழந்ததால் வருந்துகின்ற. வித்தகன் – தூதன்.

செம்மொழி, வெம்மொழி: பண்புத் தொகைகள்.

3. மௌலி – தலை. மைந்தன் – அபிமன்னியு. வில் விசயன்: அருச்சுனன்.

4. மலைப்பது – கொல்லுவது. ஐயன்: தருமன். எஞ்சினன் – இறந்தனன். நிசாசரன் – இரவில் சஞ்சரிக்கும் அரக்கனாகிய இடிம்பன். எஞ்சினன்: கால வழுவமைதி.

5. வில் மைந்தில் மிகுந்தவருக்கு – வில் வலிமையில் மிக்கவருக்கு. ஆற்றுவது – கதறுவது.

6. பயத்த இரவின் – அச்சந்தரும் இரவில். பருப்பதம் – கயிலை மலை. மால்: கண்ணன். மகரம் மோதும் கயத்து – மகர மீன்கள் மோதுகின்ற கடலில்.

7. பார்தனக்கு உரியன் – பூமியை ஆளுதற்கு வலிமை யுடையன்.

8. நிலை அறிவது – உருவத்தை (மாத்திரம்) அறிவது. பாளை வாய் – பாளையை யுடைய. மிடறு – கழுத்து.

இறுதி யிரண்டடிகளில் உயர்வு நவிற்சியணி பயின்றது. குலைத் தெங்கு: இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

9. தார் அரசன்: துரியோதனன். அங்கர் கோமான்: கன்னன்.

10. பார்த்தன் – அருச்சுனன். கொங்கு – பூந்தாது, வாசனை. கவர்ந்திடுவல்: தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று. பாடி வீடு – பாசறை. பவனன் – வாயு. பரிசு – தன்மை.

11. நிசை புலரும் முனம் – இவ்விரவு கழிந்து பொழுது விடிவதற்குள். நிருபன் – அரசன், தருமன். உடற்றல் – போர் செய்தல்.

12. பொன்றுவித்தான் – கொன்றான். உரகம் அணி – பாம்பின் உருவத்தையுடைய.

வினாக்கள்

1. வில்லிபுத்தூராரைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. வாயிற் காவலர் 'யார்' என வினவியமைக்குக் கடோற்கசன் கூறி(யது) தென்னை?

3. 'நக்கை மெய்ம்மொழி எம்மொழி?' என்ற வினாவிற்குக் கடோ(ற்)கசன் சொல்லியன யாவை?

4. அருச்சுனன் சென்ற செய்தி கேட்ட துரியோதனன் கூறியவ(ற்)றைத் தொகுத்து எழுதுக.

5. குருநாட்டு வளம் எவ்வாறு புனைந்து கூறப்பட்டது?

6. கடோற்கசன் மொழிந்ததைக் கேட்ட கன்னன் யாது கூறினன்?

7. கன்னனுரை கேட்டதும் கடோற்கசன் கனன்று கூறியன யாவை?

8. 'அரக்கி மகனுடன் ஒன்றுங் கழறேல்'—இடம் சுட்டி விளக்குக.

9. தொகை யிலக்கணம் தருக:
அதிர்முரசம், அரிக்கொடி, செம்மொழி, வன்திறல்.

3. திருவிளையாடற் புராணம்

இந்திரன் பழி தீர்த்த படலம்

[சிவனார் மதுரைப் பதியிலே நிகழ்த்திய திருவிளையாடல்களைச் சொல்லும் நூலாதலின் திருவிளையாடற் புராணம் எனப் பெயர் பெற்றது இந் நூல்.

இந்நூலின் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் ஆவர். சோழ மண்டலத்திலுள்ள திருமறைக்காடு என்பது இவரூர். வழி வழிச் சைவர்களாகிய அபிடேகத்தர் மரபில் மீனாட்சி சுந்தர தேசிகர் என்பவரின் மைந்தராகப் பிறந்தவர். இவரது காலம் 17-ஆம் நூற்றாண்டு.

இந்திரனை ஒரு காலத்தில் கொலைப்பழி பிடித்துக்கொண்டதென்பது புராணம். அதனை அவன் தீர்த்துக்கொண்ட கதையைச் சொல்வது 'இந்திரன் பழி தீர்த்த படலம்' எனப்பட்டது.]

(துவட்டா என்பவனின் மகனை இந்திரன் கொன்றனன். உடனே துவட்டா ஒரு வேள்வி செய்ய, அவ்வேள்விக் குண்டத்திலிருந்து விருத்திராசுரன் என்னும் ஒரு கொடிய அரக்கன் தோன்றலானான். அவ்வரக்கனை இந்திரன் மீது ஏவினான் துவட்டா. அவ்வரக்கனோடு போருடற்ற ஆற்றாத இந்திரன் பிரமனிடம் சென்று முறையிடுகின்றனன். பிரமன் சொல்லுகின்றனன்)

1. ஆற்றவும் பழையதுன் அங்கை வச்சிரம்;
மாற்றவர் உயிருண வலியின் னாதலால்
வேற்றொரு புதியது வேண்டு மால்;இனிச்
சாற்றுதும் அதுபெறும் தகைமை, கேட்டியால்.

2. தொடையகன் மார்ப,நாம் தூய பாற்கடல்
கடையுநாள் அசுரருஞ் சுரரும் கையில்வெம்
படையொடும் அடையன்மின்; பழுதென்(று)
அப்படை
அடையவுந் ததீசிபால் அடைவித் தாமரோ.

3. சேட்படு நாள்நனி செல்லத் தேவரா,
வாட்படை யவுணரா, வந்து கேட்டிலர்;
ஞாட்படை படையெலா ஞான நோக்கினால்
வேட்புடை வென்றவன் விழுங்கி னானரோ!

4. விழுங்கிய படையெலாம் வேற றத்திரண்(டு)
ஒழுங்கிய தான்முது கந்தண் டொன்றியே;
எழுங்கதிர்க் குலிசமாம்; அதனை யெய்துமுன்
வழங்குவன் கருணையோர் வடிவ மாயினான்.

(பிரமன் இவ்வாறு கூறலும் இந்திரன் ததீசி முனிவனிடம் சென்று வேண்டுகின்றனன்)

5. அடிகணீர் மருதறொன்(று), அதனை வேண்டியிம்
முடிகொள்வா னவரொடு முந்தி னேன்,அது
செடிகொள்கா ரிருளுடல் அவுணர்த்
தேய்த்தெமர்
குடியெலாம் புரப்பதோர் கொள்கைத் தாயது.

6. யாதெனின் இனையதுன் யாக்கை யுள்ளதென்(று)
ஓதலும், யாவையும் உணர்ந்த மாதவன்
ஆதவற் கண்டதா மரையின் ஆனனப்
போதலர்ந்(து) இன்னன புகல்வ தாயினன்.

(ததீசி மொழிந்ததும் செய்ததும்)

7. 'நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வ னேயெனின்,
எடுத்தயாக் கையின்பயன் இதனின் யாவதே?'

வேறு

8. என்றனன் கரணம் ஒன்றி
எழுகருத் தறிவை யீர்ப்ப
நின்றனன் பிரம நாடி
நெறிகொடு கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச்
சேர்ந்தனன் உலகை நோன்பால்
வென்றவன் துறக்கம் புக்கு
வீற்றினி திருந்தா னம்மா!

(இந்திரன் முனிவனின் முதுகந்தண்டினை வச்சிரப்படையாகச் செய்து வானோர் சேனையொடு அரக்கரை எதிர்க்கப் புறப்பட்டனன். இரு சேனைக்கும் பெரும்போர் நடந்தது)

9. தாளொடு கழலும் அற்றார்
தலையொடு முடியு மற்றார்
தோளொடு வீர மற்றார்
தும்பையோ டமரு மற்றார்

வாளொடு கரமு மற்றார்
மார்பொடு கவச மற்றார்
கோளொடு மாண்மை யற்றார்
குறைபடக் குறையா மெய்யர்.

10. தொக்கன கழுகு சேனஞ்
சொரிகுடர் பிடுங்கி யீர்ப்ப,
உக்கன குருதி மாந்தி
யொட்டல்வாய் நெட்டைப் பேய்கள்
நக்கன பாடல் செய்ய,
ஞாட்பினுட் கவந்த மாடப்
புக்கன; பிணத்தின் குன்றம்
புதைத்தபார் சிதைத்த தண்டம்.

(இந்திரன் குலிசம் விடுதலும் அசுரன் செயலும்)

11. வீங்கிருளொதுங்க மேக
மின்விதிர்த் தென்னக் கையில்
ஓங்கிருங் குலிச வேலை
யொல்லென விதிர்த்த லோடும்
தீங்குளம் போன்றி ருண்ட
திணியுடற் கள்வ னஞ்சி
வாங்கிருங் கடலில் வீழ்ந்தான்
மறைந்தமை நாக மொத்தான்.

(இந்திரன் அகத்திய முனிவனிடம் சென்று நிகழ்ந்தது கூறி வேண்டி நின்றனன்)

12. 'யாவையு முணர்ந்த வெந்தைக்
கியானெடுத் துணர்த்து கின்ற
தாவதென்? அமருக் காற்றா[து]
ஆழிபுக் கொளித்தா னவி
வீவது மவனால் வந்த
விழுமநோ யெல்லா மின்று
போவதுங் கருதி நும்பாற்
புகுந்தனம் அடிகள்,' என்றான்.

(அகத்தியரின் செயல்)

13. கைதவன் கரந்து வைகுங்
கடலைவெற் படக்குங் கையிற்
பெய்துழுந் தெல்லைத் தாக்கிப்
பருகினான்; பிறைசேர் சென்னி
ஐயன தருளைப் பெற்றார்க்
கதிசய மிதென்கொல்! மூன்று
வையமுத் தொழிலுஞ் செய்ய
வல்லவர் அவரே யன்றோ!

(வற்றிய கடலின் காட்சி)

14. அறந்துறந் திட்டு வார்தம்
அரும்பெறற் செல்வம் போல
வறந்தன படுநீர்ப் பௌவம்;
வடவைகட் புலப்பட் டாங்கு
நிறைந்தசெம் மணியும், அத்தீ
நீண்டெரி சிகைபோல் நீண்டு
சிறந்தெழு பவளக் காடும்
திணியிருள் விழுங்கிற் றம்மா!

15. வறந்தநீர் தன்னின் மின்னு
வாள்விதிர்த் தென்னப் பன்மீன்
எறிந்தன, நெளிந்த நாகம்,
இமைத்தன வளையும் முத்தும்,
செறிந்தன கரந்த யாமை,
சேர்ந்தபல் பண்டஞ் சிந்தி
முறிந்தன வங்கம், கங்க
முக்கின சிறுமீ னெல்லாம்!

(ஆங்கொரு மலைமீது விருத்திராசுரன் தோற்றம்)

16. செருவினி லுடைந்து போன
செங்கண்வா ளவுணன் அங்கோர்
அருவரை முதுகிற் கார்போல்
அடைந்துவா னுடர் செய்த

உருகெழு பாவந் தானோர்
உருவெடுத் திருந்து நோற்கும்
பரிசென நோற்றா னின்னும்
பரிபவ விளைவு பாரான்.

(அசுரனின் அழிவு)

17. கைதவ நோன்பு நோற்கும்
கள்வனைக் கண்டு வானோர்
செய்தவ மனையான் யாணர்
வச்சிரஞ் சீரிப் பான்போற்
பொய்தவன் றலையைக் கொய்தான்;
புணரிவாய் நிறையச் சோரி
பெய்தது; வலாரி தன்னைப்
பிடித்தது பிரமச் சாயை.

வேறு

(பிரமச் சாயை சூழவும், அஞ்சிய இந்திரன், அது தீர்ப்பான் வேண்டி, வியாழ பகவானின் கட்டளைப்படி, பூலோகம் போந்து கடம்பவனத்தை யடைதலும் அவன் பழி நீங்குவதாயிற்று)

18. தொடுத்தபழி வேறாகி விடுத்தகன்ற(து);
இந்திரன்றான் சுமந்த பாரம்
விடுத்தவனோத் தளவிறந்த மகிழ்வெய்தித்
தேசிகன்பால் விளப் பப் பாசங்
கெடுத்தவன்'மா தலம்புனித தீர்த்தமுள;
இவணமக்குக் கிடைத்தல் வேண்டும்;
அடுத்தறிக' வெனச்சிலரை விடுத்தவ்வே
றாநிலைநின் றப்பாற் செல்வான்.

(கடம்பவனக் காட்சி)

19. அருவிபடிந் தருவியெறி மணியெடுத்துப்
பாறையிலிட் டருவி நீர்தூய்க்
கருவிரல்கொய் தலர்சூட்டிக் கனியூட்டி
வழிபடுவ கல்லா மந்தி;
ஒருதுறையில் யாளிகரி புழைக்கைமுகந்(து)
ஒன்றற்கொன் றூட்டி யூட்டிப்
பருகுவன; புலிமுலைப்பால் புல்வாய்க்கன்(று)
அருந்தியிடும் பசிநோய் தீர!

20. நெளியராக் குருளைவெயில் வெள்ளிடையிற்
கிடந்துயங்கி நெளியப் புள்ளே(று)
ஒளியருச் சிறைவிரித்து நிழல்பரப்பப்
'பறவைநோ யுற்ற தேகொல்
அளியவா யச்சோ'வென் றேறுதியயன்
மடமந்தி யருவி யூற்றுந்
துளியநீர் வளைத்தசும்பின் முகந்தெடுத்துக்
கருங்கையினுற் சொரிவ மாதோ!

(ஆங்கொரு சிவலிங்கம் உளதென ஒற்றர் கூறக் கேட்டு, அதனைக் கண்டு, பணிந்து இந்திரன் தன் கவலை தீரப்பெறுகின்றனன்)

குறிப்புரை

1. வச்சிரம் – வச்சிரப் படை. மாற்றவர் – பகைவர். 'ஆல்' இரண்டும் அசை நிலைகள். அகம் + கை = அங்கை. கேள் + (ட்) இ = கேட்டி; 'ட்' எழுத்துப் பேறு.

2. அப் படை அடையவும் – அவ் வாயுதங்கள் அனைத்தையும். ததீசி: ததீசி முனிவன். அரோ: அசைநிலை.

3. சேண் படு நாள் – மிக நீண்ட காலம். தேவரா – தேவராகிலும். அவுணர் – அசுரர். ஞாட்பு படை அடை எலாம் – போருக்குப் பொருந்திய அப்படைகள் யாவற்றையும். வேள் படை – மன்மதனுடைய அம்புகளை. அரோ: அசைநிலை.

4. ஒழுங்கியது – ஒழுங்குபட்டது. குலிசம் – வச்சிரப் படை. எய்தும் முன் – கேட்பதற்கு முன்.

5. மருதது – மறுக்காமல் அளிக்க வேண்டுவது. செடி கொள் – முடை நாற்றத்தை யுடைய. மருதது: ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். புரப்பது: தொழிற்பெயர். அடிகள் + நீர் = அடிகணீர்.

6. ஆனனப் போது – முகமாகிய பேரரும்பு.

7. நடு தயா இலார் தமை நலிய – நடுவு நிலைமையும் கருணையும் இல்லாதவர்கள் தம்மை வருத்துதலால். 'அடுத்த யாவரும்' என்க. திரு – இன்பம். 'கொடுத்து, (அயா,) அறம் புகழ்' என்க. 'அயா': ஐயா என்பது தன் போலி. ஐயா – இந்திரனே.

8. ஈர்ப்ப – இழுத்து அடக்கிக் கொள்ள. பிரம நாடி நெறி கொடு – பிரம நாடி என்னும் சுழுமுனை நாடியின் வழியாக.

என்றனன், நின்றனன், சென்றனன், சேர்ந்தனன்: முற்றெச்சங்கள், இருந்தான்: முற்று.

9. தும்பை – தும்பை மாலை. போருடற்றும்போது தும்பை யணிவர் வீரர். இதனைத் தும்பைத் திணை என்பர். கோள் – வலிமை. குறைபடக் குறையா மெய்யர்: தேவர்.

10. உக்கன குருதி – சொரிவனவாகிய இரத்தம். ஒட்டல் வாய் – ஒட்டிய வாய்களையுடைய. நக்கன – சிரித்து. ஞாட்பு – போர்க்களம். கவந்தம் – தலை யிழந்த உடல்கள். ஈற்றடியை 'பார் புதைத்த பிணத்தின் குன்றம் அண்டம் சிதைத்தது' எனக் கொள்க.

11. ஒல்லென விதிர்த்தலோடும் – விரைவாக அசைத்த வுடனே. வாங்கு – வளைந்த. மைநாகம் என்பது இந்திரன் வச்சிரத்தால் மலைகளின் சிறகுகளை யறுத்து வீழ்த்திய ஞான்று வாயுவின் துணையினால் கடலுள் ஒளித்த ஒரு மலை.

12. ஒளித்தான் – ஒளித்தவனாகிய விருத்திரனுடைய. ஒளித்தான்: வினையாலணையும் பெயர். ஆழி: காரணப் பெயர்.

13. கைதவன் – வஞ்சகனாகிய விருத்திரன். வெற்பு அடக்கும் கையில் – விந்த மலையை அடக்கிய கையில். உழுந்து எல்லைத்து ஆக்கி – உழுந்தின் அளவினதாகச் செய்து. ஐயன் – சிவன். மூன்று வையம் முத்தொழிலும் செய்ய – மூன்றுலகத்தும் முத்தொழிலும் செய்ய.

இங்குப் பயின்றது வேற்றுப்பொருள் வைப்பணி.

14. படு நீர்ப் பௌவம் – மிக்க நீரினை யுடைய கடல். வடவை – வடவைத் தீ. சிகை – கொழுந்து.

உவமை யணி இங்குப் பயின்றது.

15. வளை – சங்கு. 'யாமை செறிந்தன காந்த' என்க. கங்கம் – பருந்து. மூக்கின – விழுங்கின. வங்கம் – கப்பல்.

செளித்த, காந்த: 'அன்' பெறாத பலவின்பால் வினைமுற்றுகள். செறிந்தன: முற்றெச்சம்.

16. கார் – மேகம். உரு கெழு பாவம் – அஞ்சத் தக்க பாவம். பரிபவம் – துன்பம். இங்கும் உவமை யணி வந்தது.

17. யாணர் – புதிய. சீரிப்பான்போல் – பழக்குவான்போல். புணரி – கடல். வலாரி – இந்திரன். சாயை – கொலைப் பழி.

புணரி: காரணப் பெயர்.

18. (கடம்பவனத்தை நெருங்கியபோது) பழி அகன்றது. தேசிகன் – இந்திரனொடு வந்த வியாழன். அவ்வேறு ஆம் நிலை நின்று – அப்பழி நீங்கிய இடத்தினின்றும்.

19. கல்லா மந்தி – அறிவில்லாத குரங்குகள். படிந்து – நீராடி. அருவி நீர் தூய் – அருவி நீரால் ஆட்டி. யாளி கரி – யாளிகளும் யானைகளும். இவை இயல்பில் பெரும் பகை யுடையன. புழைக் கை முகந்து – துளையை யுடைய கைகளால் நீரை முகந்து. புல்வாய் – மான்.

குரங்குகள் மணியைச் சிவலிங்கமாகப் பாவித்தன என்க.

20. குருளை – குட்டி. உயங்கி – வருந்தி. புள் ஏறு – பறவை ஏறிய கருடன். சிறை – சிறகு. துளிய நீர் – துளிகளை யுடைய நீரினை. வளை தசும்பில் – சங்காகிய குடத்தில்.

அச்சோ – ஐயோ: இரக்கக் குறிப்பு.

வினாக்கள்

1. திருவிளையாடற் புராணம்: குறிப்பு வரைக.

2. விருத்திரனை அழிக்கப் பிரமன் இந்திரனுக்குச் சொன்ன வழி யாது?

3. ததீசியின் முதுகெலும்பு வலியுற்ற தெங்ஙனம்?

4. இந்திரன் வேண்டியதும் ததீசி உற்ற நிலையும் உரைத்த மொழியும் யாவை?

5. அசுரர்க்கும் தேவர்க்கும் நிகழ்ந்த போரில் வீரர்க்குற்ற இன்னல்கள் யாவை?

6. 'ஐயன தருளைப் பெற்றார்க்கு அதிசயம் இது என்கொல்'—இடம் காட்டி விளக்குக.

7. வற்றிய கடலின் காட்சியினைத் தெரிவிக்க.

8. கடம்பவனக் காட்சியினை வரைக.

9 இவ்வுவமைகள் எவற்றிற்கு ஆளப்பட்டன?
   அ. அறந் துறந்து ஈட்டுவோர்தம் அரும்பெறல் செல்வம்.
   ஆ. தீ நீண்டெரி சிகை.
   இ. அருவரை முதலில் கார்.

10. இலக்கணக் குறிப்பு எழுதுக:
   அ. படையொடும் அடையன்மின்.
   ஆ. நான் நனி செல்ல.
   இ. தோக்கன கழுகு சேனம்; பேய்கள் நக்கன பாடல் செய்ய.
   ஈ. நீண்டு எரிசிகை.
   உ. திணியிருள் விழுங்கிற் றம்மா.

---

4. கலிங்கத்துப் பரணி

[முதற்குலோத்துங்கன் என்னும் சோழன் கலிங்கத்தின்மீது தன் படையினை யனுப்பி வெற்றி கண்ட செய்தியினைச் சிறப்பித்துப் பாடும் நூல் இது.]

பரணி என்பது தொண்ணூற்றாறு வகைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று. போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவது இந் நூலாகும். ஈரடித் தாழிசைகளால் புறப்பொருள் இலக்கணம் அமையப் பாடப்படுவது.

பரணி நாளில் பேய்கள் கூழட்டு மகிழ்தலென்னும் காட்சி கூறப்படு மாதலின் 'பரணி' எனப் பெயர் பெற்றதென்ப. வேல் வாள் ஆயனவற்றால் அமைக்கப்பட்டதோர் பரண்மேலிருந்து புலவன் இந்நூலைப் பாடுவதனால் பரணி எனப் பெயர்பெற்றது எனவுங் கூறுப.

கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் சயங்கொண்டார் என்னும் புலவராவர். இவர் சோழநாட்டுத் தீபங்குடி என்னு மூரிற் பிறந்தவர். சிவ சமயத்தினர். இவர்தம் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

குலோத்துங்கனின் சேனைக்குத் தலைமை தாங்கிக் கலிங்க வெற்றியைக் கொணர்ந்தவன் கருணாகரத் தொண்டைமான் என்னும் பல்லவ சிற்றரசனாவன்.]

போர் பாடியது

(அஃதாவது படைகள் போருடற்றும் காட்சியினைப் பாடுவது. கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் ஒன்று காளியைப் பார்த்து இச்செய்தியினைக் கூறுவதாகப் பாடப்பட்டது இப்பகுதி)

1. எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
   இகலொலி கடலொலி யிகக்கவே!
   விடுவிடு விடுபரி கரிக்குழாம்
   விடும்விடு மெனுமொலி மிகைக்கவே!

2. வெருவர வரிசிலை தெறித்தநாண்
   விசைபடு திசைமுகம் வெடிக்கவே!
   செருவிடை யவரவர் தெழித்ததோர்
   தெழியுல குகள்செவி டெடுக்கவே!

3. எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
   இருபடை களுமெதிர் கிடைக்கவே!
   மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
   வருபரி யொடுபரி மலைக்கவே!

4. கனவரை யொடுவரை முனைத்தபோற்
   கடகரி யொடுகரி முனைக்கவே!
   இனமுகின் முகிலொடு மெதிர்த்தபோல்
   இரதமொ டிரதமு மெதிர்க்கவே!

5. பொருபுலி புலியொடு சிலைத்தபோற்
   பொருபட ரொடுபடர் சிலைக்கவே!
   அரியினொ டரியின மடர்ப்பபோல்
   அரசரு மரசரு மடர்க்கவே!

6. விளைகனல் விழிகளின் முளைக்கவே!
மினலொளி கனலிடை யெறிக்கவே!
வளைசிலை யுருமென விடிக்கவே!
வடிகணை நெடுமழை படைக்கவே!

7. குருதியி னதிவெளி பரக்கவே
குடர்நிறை நுரையென மிதக்கவே!
கரிதுணி படுமுட லடுக்கியே
கரையென விருபுடை கிடக்கவே!

களம் பாடியது

(அஃதாவது போர் முடிவுற்ற பின்பு அக்களத்துக் காட்சியைப் பற்றிப் பாடியது. கலிங்கப் பேய் சொலக் கேட்ட காளிதேவி தன் பேய்க் கணங்களோடு சென்று, அப்பேய்களுக்கு அக்களக் காட்சியைக் 'காண்மின் காண்மின்' எனக் காட்டியதாகப் பாடப்பட்டது இப்பகுதி)

8. உடலின்மேற் பலகாயஞ் சொரிந்து பின்கால்
உடன்பதைப்ப உதிரத்தே யொழுகும்
யானை
கடலின்மேற் கலந்தொடரப் பின்னே
செல்லுங்
கலம்போன்று தோன்றுவன காண்மின்,
காண்மின்!

9. நெடுங்குதிரை மிசைக்கலணை சரியப் பாய்ந்து
நிணச் சேற்றில் கால்குளிப்ப நிரையே
நின்று
படுங்குருதிக் கடும்புனலை யடைக்கப் பாய்ந்த
பலகுதிரைத் தறிபோன்ற பரிசு
காண்மின்!

10. விருந்தினரும் வறியவரு நெருங்கி யுண்ண
மேன்மேலு முகமலரு மேலோர் போலப்
பருந்தினமுங் கழுகினமுந் தானே யுண்ணப்
பதுமமுக மலர்ந்தாரைப் பார்மின்,
பார்மின்!

வேறு

11. நெருங்காக வச்செங்க ளத்தேத
யங்குந்நி ணப்போர்வை மூடிக்கொள
கருங்காகம் வெண்காக மாய்நின்ற
வாமுன்பு காணாத காண்மின்களோ!

12. மிடையுற்ற தேர்மொட்டு மொட்டொக்க
வெஞ்சோரி நீரொக்க வீழ்தொங்கல்பா
சடையொக்க வடுசெங்க ளம்பங்க
யப்பொய்கை யாமாறு காண்மின்களோ!

குறிப்புரை

1. எழும் – தொடங்குங்கள். இகக்க – வெல்லவும்.

2. வெருவர – அஞ்சும்படி. வரிசிலை – கட்டு அமைந்த வில்லி லிருந்து. நாண் – நாணோசை. 'விசை தெறித்த நாண்' என்க. தெழித்தது – ஆரவாரித்தது. தெழி – முழக்கம்.

இச்செய்யுள் உயர்வு நவிற்சி யணி.

3. மிடைத்தல் – எதிர்த்தல். மறிதிரை – சுருண்டு விழும் அலைகள். மலைத்தல் – போரிடுதல்.

இங்குப் பயின்றது இல்பொருள் உவமை யணி.

எறிகடல், மறிதிரை, வருபரி: வினைத்தொகைகள்.

4. வரை – மலை. முகில் இனம் – மேகக் கூட்டங்கள். இதுவும் இல்பொருளுவமை யணி.

5. சிலைத்தபோல் – முழங்கிப் போரிடுதல் போல். சிலைத்தல் – முழங்குதல். படர் – வீரர்கள். இஃது உவமை யணி.

6. வினை கனல் – மிக்க நெருப்பு, (சினம்). கனல் இடை – அந் நெருப்பிடை. உரும் – இடி. வடி கணை – கூரிய அம்புகள். உருவகமும் உவமையும்.

7. கரி – யானை. உருவகமும், உவமையும் வந்தன.

8. காயம் சொரிந்து – காயங்களிலிருந்து இரத்தம் சொரிந்து. ஒழுகும் – நீந்தும்.

9. தலைவை – தவிசுகள். பாய்ந்தும் நிலைச்சேற்றில் கால் புதைந்து கிடத்தலால் நிரையே நிற்கின்றன வென்க. படும் – ஒலிக்கும். 'குதிரைத் தறி' என்பது குதிரை மரம். நீர்ப்பெருக்கை அடைத்து வைக்க உதவும் கட்டைகளைக் குதிரை மரங்கள் என்பர்.

10. பதுமம் – தாமரை.

11. நெருங்கு – பிணங்கள் நெருங்கிக் கிடக்கின்ற. ஆகவம் – போர். 'செம் ஆகவம் களத்தே தயங்கும்' என்க. தயங்கும் – விளங்கும். நின்றவா–நின்ற ஆ(று) – நின்ற வகை. இங்கு புதுவணி பயின்றது.

12. மிடை யுற்ற – நெருங்கி யிருக்கின்ற. மொட்டு (இரண்டாவது) – தாமரை யரும்பு. வீழ் தொங்கல் – அறுந்து வீழும் பீலிக் குடைகள். பாசடை – பசிய இலைகள். பங்கயம் – தாமரை. உவமை யணி.

வினாக்கள்

1. பரணி: குறிப்பு வரைக.

2. கலிங்கத்துப் பரணி எழுதப்பட்ட வரலாறு தருக.

3. சேனைகள் போரிட்ட காட்சியினை நும் சொந்த சொற்களில் வரைக.

4. நதி, துறை, கரை எனப் புனையப்பட்ட காட்சி யாது?

5. போர் முடிந்த பின்னை அக்களங் கண்ட காட்சியினைத் தொகுத்து உரைக்க.

6. இவ்வொப்பனைகள் எவற்றிற்காக ஆளப்பட்டன?
(அ) அரியினொ டரியினம் அடர்ப்ப.
(ஆ) கடலின்மேல் கலம் தொடரப் பின்னே செல்லும் கலம்.
(இ) குதிரைத் தறி.

7. கருங்காகம் வெண்காக மாயினமையும், போர்க்களம் கமலப் பொய்கையாயினமையும் எங்ஙனம்?

8. உவமை யணி, உயர்வு நவிற்சி யணி, இல்பொருளுவமை யணி, புதுவணி என்பன யாவை? இப்பகுதியிலிருந்து உதாரணம் காட்டுக.

9. இலக்கணக் குறிப்பு எழுதுக.
(அ) எடுமெடு மெடுமென...
(ஆ) எறிகடல், மறிதிரை, வருபரி.
(இ) தோன்றுவன காண்மின்.

---

5. மனோன்மணீயம்

[பாண்டி நாட்டு இளவரசி மனோன்மணி என்பாளின் கதையினைக் கூறுவதால் இந்நூல் மனோன்மணீயம் எனப்பட்டது. இங்ஙனம் பெயர் அமைவதை வடமொழியில் தத்திதாந்த நாமம் என்பர்.

இந்நூலின் ஆசிரியர் ராவ்பகதூர் P. சுந்தரம் பிள்ளை யவர்கள் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்கள். ஆலப்புழை என்னும் ஊரினர். வேளாளர் மரபினர். ஆங்கில மொழியிலும் நல்ல புலமை வாய்ந்தவர். திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தவா

இந்நூல் ஆங்கிலக் கவியரசர் 'ஷேக்ஸ்பியர்' என்பாரின் முறையினைத் தழுவி எழுதப்பட்டது.

சீவகன் பாண்டி நாட்டை ஆண்டுவருகின்றனன். தீயமைச்சன் குடிலன் என்பவனது சூழ்ச்சியால், சேர வேந்தன் புருடோத்தமன் என்பான் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வந்து நின்றான். சீவகன் உடனே தன் படைவீரரைத் திரட்டி வீரவுரை பகர்கின்றனன்.]

ஜீவகன்:

போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்கது வாய்க்கும்! ஆஆ நோக்குமின்!
அனந்தந் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினந் தாமனு பவிக்குஞ் சுதந்தரம்

தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்,
என்றால் அப்புண் 'இறந்துகோட் டக்க(து)'
அன்றோ அறைவீர்: ஐயோ! அதுவும்
புண்ணோ, புகழின் கண்ணே! எவரே

புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்?
புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்?
கணங்கணந் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம்பல. இவரெலாம் பிறந்தா ரென்பவோ!
உதும்பர தருவில் ஒருகனி யதனுட்

பிறந்திறு மசகம் இவரினுங் கோடி.
பிறந்தா ரென்போர் புகழுடன் சிறந்தோர்.
அப்பெரும் புகழுடம் பிப்படி யின்றிதோ
சுலபமாய் நுமக்கெதி ரணுகலால் துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம்!

ஒழுக்கமற் றன்றது வெனினும், உம்மேல்
அழுக்கா றுஞ்சிறி தடைந்தோம். நும்மோடு
இத்தினம் அடையும் இணையிலாப் பெரும்புகழ்
எத்தனை ஆயிர மாயிரங் கூறிட்(டு)
ஒத்ததோர் பங்கே யுறுமெனக் கெனவே

ஓடுமோர் நினைவிங் கதனால், வீரர்காள்!
நீடுபோர் குறித்திவண் நின்றோர் தம்முள்
யாரே யாயினும் சீராந் தங்கள்
உயிருடம் பாதிகட்(கு) உறுமயர் வுன்னிச்
சஞ்சலம் எய்துவோர் உண்டெனிற் சாற்றுமின்.
வஞ்சக மில்லையென் வார்த்தையீ துண்மை.
மானமோ டவரையிம் மாநக ரதனுட்
சேமமா யின்றிருத் திடுவம் திண்ணம்.
உத்தம மாதர்க ளுண்டுமற் றாங்கே
எத்தனை யோபேர்: இவர்க்கவர் துணையாம்.

படைகள்:

இல்லை! இல்லையிங் கத்தகைப் புல்லியர்!

ஜீவகன்:

குறைவெனக் கருதன்மின். எம்புகழ்க் கூறு
சிறிதாம் எனவுனிச் செப்பினோம், அதனாற்
பிறிதுநீர் நினையீர். பேசுமின் உண்மை.

படைத் தலைவர்:

இல்லையெம் மிறைவ! இந்நா டதனுள்
இல்லையத் தகையர்.

யாவரும்:

இல்லையில்லை இல்லையே!

ஜீவகன்:

நல்லதப் படியேல், நாமே நுஞ்சுய
நாட்டினல் லுரிமையா ராட்டும் பெரிய
மேன்மையும் அதனால் விளைபுக ழதுவும்
மறக்கிலம்; பொறுக்குமின், வம்மின், விஜய
இலக்குமி காத்திருக் கின்றாள்! அன்றியும்
ஒலிக்குறும் ஜயபே ரிகைகேட் டலதுமற்(று)
ஓய்கிலள் நோன்புநந் தாய்மனோன் மணியே.

படைவீரர்:

மனோன்மணிக்கு ஜே! ஜே! ஜே!

யாவரும்:

இளவரசிக்கு ஜே! ஜே! ஜே!

(குறளடி வஞ்சிப்பா)

ஜீவகன்:

நந்தாய்தமர் நங்காதலர்
நஞ்சேய்பிறர் நந்தாவுறை
நந்தேயமேல் வந்தேநனி
நொந்தாழ்துயர் தந்தேஇவண்
நிந்தாநெறி நின்றாரிவர்
தந்தாவளி சிந்தாவிழ,
அடிப்போமடல் கெடுப்போமுகத்
திடிப்போங்குட லெடுப்போமிடுப்
பொடிப்போஞ்சிர முடைப்போம்பொடி
பொடிப்போம்வசை துடைப்போமுயிர்
குடிப்போம்வழி தடுப்போம்பழி
முடிப்போமினி நடப்போம்நொடி,
எனவாங்கு
பெருமுர சதிரப் பெயருமின்
கருமுகி லீர்த்தெழு முருமென வார்த்தே.

குறிப்புரை

7. கோட்டக்கது – கொள்ளத் தக்கது. 'கொள்' என்னும் பகுதி 'கோள்' எனத்திரிந்து தொழிற் பெயராயிற்று.

14. உதும்பர தரு – அத்தி மரம்.

15. இறும் மசகம் – இறக்கும் கொசு.

20. அழுக்காறு – பொறாமை.

50. தமர் – சுற்றத்தவர்.

51. நந்தா – கெடுதலின்றி.

54. நிந்தா நெறி – நிந்தித்தலாகிய வழி. தந்தா, வளி – பல் வரிசை. சிந்தா விழ. – சிந்தி விழ.

57. அடல் – (பகைவருடைய) வலிமை.

வினாக்கள்

1. மனோன்மணீயம்: குறிப்பு வரைக.
2. 'அப்புண் இறந்து கோட்டக்கது' – விளக்கம் தருக.
3. 'புகழின் கண்' எனப்பட்டது எது? ஏன்?
4. சேவகன் தன் படைஞரிடம் சொற்ற வீரவுரையினை நும் சொந்த சொற்களில் வரைக.
5. சேவகன் அழுக்காறு கொண்ட தேன்?
6. 'இவர்க்கு அவர் துணையாம்' – எவர்க்கு எவர்?
7. சேவகன் இறுதியாகக் கூறும் வஞ்சினம் யாது?
10. உறுப்பிலக்கணம் தருக: சிந்துவர், எய்துவோர், வம்மின்.

IV

சிறு நூல்களும் பிறவும்

1. முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்

[கடவுளையேனும் ஆசிரியரையேனும் வள்ளல்களையேனும் குழந்தையாக வைத்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்கள் அமைத்துப் பாடப்படுவது பிள்ளைத் தமிழ் இலக்கணம் அமைந்த நூலாகும். பத்துப் பருவங்களாவன: காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, (இவற்றிக்குமேல் ஆண்பாலாயின்) சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன; பெண்பாலாயின் ஈற்று மூன்றும் அம்மானை, நீராடல், ஊசல் என்பன.

இப் பிள்ளைத் தமிழ் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.

ஆசிரியர் குமர குருபரர் ஆவர். இவர் தமிழ்ப் புலமை செறிந்த ஒரு சிவ சமயத் துறவி. 17-ஆம் நூற்றாண்டினர்.]

செங்கீரைப் பருவம்:

(இது பொருள் தெரியாத ஒலியை எழுப்பும் பருவம். மழலைக்கும் முந்தியது. 'சீர்' என்பது சொல். சொல்லுக்குரிய அமைதி இல்லாத ஒலியைச் 'செங்கீர்' என்றனர் போலும்!)

செம்பொன டிச்சிறு கிண்கிணி யோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி
திகழரை வடமாடப்

பைம்பொ னசும்பிய தொந்தியொ டுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக்
கதிர்முத் தொடுமாட
அம்பவ ழத்திரு மேனியு மாடிட
ஆடுக செங்கீரை,
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை.

வருகைப் பருவம்

(அஃதாவது தளர்நடை யிட்டுவரும் குழந்தையை 'வா' என்று அழைப்பது)

இழுமெ னருவி சொரியு மிமய முதல்வி புதல்வன்
வருகவே,
இயலு நடையும் வடிவு மழகு மெழுத வரியன்
வருகவே,
ஒழுகு கருணை முழுகு கமல வதனன் வருக; வருகவே,
ஒருவ னிருவ ரொடுகை தொழுந லுபய சரணன்
வருகவே,
விழுது விடுவெ ணிலவு பொழியு நகையன் வருக,
வருகவே,
விளரி பயிலு மளியு ஞிமிறும் விரவு குரவன்
வருகவே,
மழலை முதிர முதிரு மதுர வசனன் வருக, வருகவே,
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன்
வருகவே.

2. திருவேங்கடத்தந்தாதி

[ஒரு செய்யுளின் ஈற்று எழுத்தாவது அசையாவது சீராவது அடுத்த செய்யுளின் முதலில் வரும்படி யமைத்துப்பாடுவது 'அந்தாதி' எனப்படும். ஒன்றன் அந்தம் அடுத்து வருவதன் ஆதியாக அமைவது இது.

திருவேங்கடத்தின்கண் வீற்றிருக்கும் திருமாலின் சம்பந்தமான நூல் திருவேங்கடத்தந்தாதி எனப்பட்டது.

இதன் ஆசிரியர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்பவர்; சிறந்த வைணவர்; திருமலை நாயகர் காலத்தவர்.]

வேங்கட மாலை அவியா மதிவிளக் கேற்றியங்கம்
ஆங்கட மாலைய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே!
தீங்கட மாலைக் கவிபுனைந் தோமிதிற் சீரியதே
ஆங்கட மாலையி ராவத மேறி யிருக்குமதே?

இருக்கா ரணஞ்சொலு மெய்பொரு ளின்பமும் எப்பொருட்கும்
கருக்கா ரணமுநற் றுயுநற் றந்தையுங் கஞ்சச்செல்வப்
பெருக்கா ரணங்கின் தலைவனும் ஆதிப் பெருந்தெய்வமும்
மருக்கா ரணவும் பொழில்வட வேங்கட மாயவனே!

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும்விண்ணும்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்திரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே!

---

3. முத்தொள்ளாயிரம்

[மூன்று + தொள்ளாயிரம் = முத்தொள்ளாயிரம்.

சேர சோழ பாண்டியர் ஒவ்வொருவரைப் பற்றியும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் வெண்பாக்களால் பாடி முடிக்கப் பெற்ற பழம் பெரு நூல் இது. ஆசிரியர் இன்னார் எனத் திட்டமாகத் தெரியவில்லை. இந்நூலுள் 108 பாடல்கள் மட்டுமே இப்போது கிடைத்துள்ளன.]

பாண்டி நாட்டுச் சிறப்பு

நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்தர் இளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு.

---

4. சிலேடை

(சிலேடை என்பது இருபொருள்படப் பாடுவது. 'சிலேஷம்' என்ற வடமொழி சிலேடை எனத் தமிழில் வழங்குகின்றது.

இங்கு வந்துள்ள செய்யுட்களின் ஆசிரியர் காளமேகப் புலவர் என்பவர். இவர் சிலேடை பாடுவதில் சமர்த்தர். திருமலை ராயன் காலத்தவர்)

சந்திரனுக்கும் மலைக்கும்

நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று—தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

நாய்க்கும் தேங்காய்க்கும்

ஓடுமிருக்கு மதனுள்வாய் வெளுத்தி ருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது—சேடியே
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுமெனச் செப்பு.

---

5. ஒருநாள் மாலை

1. ஊருக் குள்ளே ஓயா திருந்த
சலசலப் பென்னைச் சலித்து வாட்ட
அமைதியை நேடி அயர்ந்த போது
பகலவன் வீயும் பக்குவங் கண்டேன்;

செங்கதிர்ச் செல்வன் சென்றது கண்டதும்
நகரைக் கடந்து நடந்து சென்றேன்;
பசுமையைக் கொட்டிப் பரப்பின போலக்
காட்சி வழங்கும் மாட்சியின் வயலிற்
சிறுகாற் செல்வன் செல்வது நாணிப்
பைங்கூழ்ப் பெண்கள் பைய வசைந்த
சூழ்ச்சியைக் கண்டு சுரும்பு சிரித்த
எல்லையைத் தாண்டி எட்டி நடந்து
கல்லொடு பேசிப் புல்லொடு பாய்ந்த
தெண்ணீ ரோடைத் தேவியைக் கண்டு
நயந்து நின்று நடந்து சென்றேன்;
சென்றவன் ஆங்கொரு சிறுமலை யிவர்ந்தேன்;
இருண்ட மாலை இரவினைத் தழுவ
எழுந்தது கண்டு இன்னிசைப் பறவை
கொஞ்சிப் பேசிக் கூடு சேர்ந்த;
தங்குறை தீரார் தளர்ந்து பிறர்க்கே
உற்றது தீர்க்கும் உத்தமர் போலக்
கறைகொள் சந்திரன் ககனத் தெழுந்தனன்;
யாண்டோ இருந்து மீண்டும் மீண்டும்
வீசிய காற்று பேசிய மொழியால்
கன்மீ தமர்ந்து கண்களை மூடிக்
கருத்தைத் திறந்தேன்; கண்டனன் என்னே!

*

அழகும் அன்பும் அறனும் அருமையும்
தவமே கிடந்து தமக்கொரு வடிவம்
பெற்றவோ என்று பேசுதற் கிடமாய்,
நிலவைப் பிழிந்து நிழலிற் செய்த
மேனி விளங்க, மெல்லிய தூய
ஆடை யசைய, அருணடை இட்டே
அண்ணல் ஒருவன் அருகே வந்தான்;
மலரடி யிணையைப் பார்க்கிடச் சொன்னான்;

ஆணி நுழைந்த ஆழ்வடு கண்டேன்!
பதுமக் கரத்தைப் பார்த்திடச் சொன்னான்;
இரும்பு கடைந்த இணைவடு கண்டேன்!
விலாப்புறங் காட்டி விரலிடச் சொன்னான்;
வேல்வடு ஒன்றன் வெம்மையைக் கண்டேன்!
பூங்கரந் தூக்கிப் பொன்மயிர் விலக்கிச்
சென்னியைப் பார்க்கச் சாய்ந்து கொடுத்தான்;
முள்ளடை பாய்ந்த முரியினைக் கண்டேன்!
முதுகுப் புறத்தை முன்னி விலக்கச்
சவுக்கடி சென்ற சாயலைக் கண்டேன்!
பொன்வாய் திறந்து பூவித முசைய,
'மானிட, கேணீ, மருவிய காயம்
வந்ததுஞ் சொல்வேன் நொந்ததுஞ் சொல்வேன்;
விரும்பாப் பெண்ணை விரும்பி மணக்க
மடலூர் மகன்போல், மானிலந் தன்னில்
வலிய இறங்கி வலிய மொழிந்து
சிலுவை மடன்மேல் செந்நீர் சிந்தி
இவ்வடு பெற்றேன்; இத்தனைப் பெற்றும்
எவர்க்காய் உழந்தேன் அவர்பெற் றிலனே,'
என்றனன் ஏங்கி ஏதமுற் றிருப்ப,
விழிமணி யிருந்து விழுந்த சிறுதுளி
என்கரம் நனைப்ப இரங்கித் துடித்து,
'ஐயகோ, ஐயனே, ஆரா வமுதே,
எவர்க்கா யூர்ந்தீர்? எனவர் அன்பிலர்?
யாரவர் கொல்லோ? யாரவர் கொல்லோ?'
என்றனென் என்னை இரங்கி நோக்கி
'நீதான்' என்று நேர்படச் சொல்லி
மறைந்தனன் அந்தோ! மற்றவன் காண்கிலேன்;
நெஞ்சினை அவன்றன் நேசத் திருவடிக்
கந்திலே கட்டிய காரியம் செய்து,
இளநிலா வெறிப்ப இறங்கிச் சென்றனென்.

—பொன்னு. ஆ. சத்தியசாட்சி.

குறிப்புரை

1. முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்:

செங்கீரை: கிண்கிணியும் சிலம்பும் பாதங்களில் அணியப்படுவன. அரைமணி – அரையில் அணியும் ஓராபரணம். அசும்புதல் – ஒளிபொழுகுதல். பண்டி – வயிறு. பட்டம் – வாள். சுட்டி – நெற்றி யணி. குழைகாது – வடிந்த காது. சூழி – ஒருவகைக் கொண்டை. முச்சி – உச்சிக் கொண்டை. குண்டலம் – ஆடவர் காதணி. 'பவழத் திருமேனி': கடவுள் வாழ்த்துப் பகுதியில் பெருந்தேவனார் பாடலைக் காண்க.

அரை: ஆகுபெயர். குழைகாது: வினைத்தொகை.

செங்கீரை: ஒருவன் – உருத்திரன், சிவன். இருவர் – பிரமனும் விட்டுணுவும். உபய சரணன் – இரண்டு திருவடிகளை யுடையவன். விளரி – ஒரு பண்வகை. அளி, ஞிமிறு – தேன் வண்டுகள். குரவன் – குரா மாலை யணிந்தவன். பருதிபுரி – புள்ளிருக்கு வேளூர். பருதி (சூரியன்) அவ்விடத்தே வழிபட்டமையால் 'பருதிபுரி' எனப்பட்டது.

2. திருவேங்கடத்தந்தாதி:

வேங்கட மாலை – திருவேங்கடத்துத் திருமாலை. மதி விளக்கு – அறிவுச் சுடர். அங்கம் ஆம் கடம் ஆலயம் – அங்கமாகிய மெய்க் கோயில். கடம் – உடல். தீங்கு அட – தீமையை ஒழிக்க. ஈற்றடி 'ஆம்' அசைநிலை. கடம் பால் அயிராவதம் – மதங்கொண்ட பெரிய அயிராவதம் என்னும் யானை. இச்செய்யுளுள் முதலடி உருவகம் ஆம். ஆலயம் எனற்பாலது எதுகை நோக்கி ஆலயம் ஆயிற்று.

ஆரணம் – வேதம். கரு காரணம் – மூலகாரணம். கஞ்சம் – தாமரை. ஆரணங்கு – இலக்குமி. கார் அணவும் மரு பொழில் – மேகங்கள் தங்கும் மணமுடைய சோலை.

தாயவன் – தாவி அளந்தவன். 'தன் கன்கமலம் ஒப்பான்' என்க. சரம் – அம்பு. தீய வன்கண்ணன் – இராவணன். 'தூயவன்கண் அன்புடையார்க்கு' என்க.

3. முத்தொள்ளாயிரம்:

கந்து – சங்கு. கந்தின் சினை என்றது குழவியாகிய சிறு சங்கினை. பாளை – பாளையிலிருந்து சிந்தும் பூக்கள். முத்தம் – முத்து. செம்மற்று – வளமுடையது. தென்னன் – பாண்டியன். நகை – ஒளி.

இளஞ்சினை: பண்புத்தொகை. குவிமொட்டு, நிகழ்முத்தம்: வினைத் தொகைகள்.

4. சிலேடை:

நிலவாய் – ஒளியாய், நிரந்தரமாய். வான் – வானத்தில், மேகம்.

ஓடும் இருக்கும் – (காய்) ஓடுதல் செய்யும், நிற்கும், (தேங்காய்) ஓடு கொண்டிருக்கும்.

5. ஒருநாள் மாலை:

(9, 10) சிறுகாற் செல்வன் – மெல்லிய காற்றாகிய செல்வன். பைங்கூழ்ப் பெண்கள் – இளம் பயிர்களாகிய பெண்கள். இவை யிரண்டு வரிகளும் உருவக அணி. (11) சுரும்பு – ஆண் வண்டு. (16) இவர்ந்தேன் – ஏறினேன். 20, 21, 22 – இவ்வரிகளுடன் 'தம்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம் வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்' என்று வரும் செய்யுளை ஒப்பிடுக. (32) அருள் + நடை = அருணடை. (35) ஆழ் வடு – ஆழமாகச் சென்றுள்ள வடு; (வினைத்தொகை). (39) வேல் வடு – வேலாயுதத்தால் ஏற்பட்ட வடு. (41) சென்னி – தலை. (42) முரி – சிதைவு. (46) கேள் + நீ = கேணீ. (49) மடல் – பனங் கருக்கினால் செய்த குதிரை. (53) யாருக்காக இத்துணைப் பாடுபட்டேனோ அவருடைய அன்பைப் பெற்றேனிலேன். (54) ஏதம் – துன்பம். (55) துளி – கண்ணீர்த் துளி. (58) ஊர்ந்தீர்? – மடலூர்ந்தீர்? (62) மற்று: அசைநிலை. (64) திருவடிக்கந்து – திருவடிகளாகிய தறி. கந்து என்பது யானை கட்டும் தறி. இஃது ஏகதேச உருவகம்.

மடலூர்தல்: இது பழந் தமிழகத்து மணங்கொள்ளும் முறைகளுள் ஒன்று. தான் விரும்பிய தலைவி மணஞ் செய்ய இசையாளாயின் தலைவன் பனங் கருக்கினால் (மடல்) குதிரை யொன்று செய்து, தலைவியின் உருவம் எழுதிய கிழி யொன்றனை அதன்மீது காட்டி, அதனை யூர்ந்து தெருவெலாஞ் செல்லுவன். பனங் கருக்கினால் இவன் தசை யறுபட்டு இரத்தம் சொரியும். தலைவி மனமுருகி அவனை மணந்துகொள்ளுவள்.

இங்ஙனமே கிறிஸ்து பெருமானும் சிலுவை என்று சொல்லும்படியான 'மடலூர்ந்து' மிக வேதனை யுற்றுக் குருதி சிந்தினார் என்க. அவர் விரும்பியது மக்களின் மெய் யன்பினை. இக்கருத்தினையே கடவுட் கவிஞர் கிருட்டினப்பிள்ளை யவர்கள் 'இரட்சணிய மனோகரத்தில்' ஒரு செய்யுளில் அருளினார்கள்.

வினாக்கள்

முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்:

1. பிள்ளைத் தமிழ் என்றால் என்ன?

2. செங்கீரைப் பருவத்தில் முருகன் விளங்கிய பொலிவினை நும் சொந்தச் சொற்களில் வரைக.

3. வருகைப் பருவத் தோற்றத்தினை வரைக.

4. இவை யாவை? – கிண்கிணி, சுட்டி, குண்டலம், விளரி, மழலை.

திருவேங்கடத் தந்தாதி:

5. அந்தாதி என்றால் என்ன?

6. 'வேங்கட மாலை' என்ற செய்யுட்குப் பதவுரை தருக.

7. மாயவனின் சிறப்பினைக் கூறுக.

8. 'மாயவன் கண்ணன்' என்று தொடங்கும் செய்யுளைப் பாராட்டுக.

முத்தொள்ளாயிரம்:

9. முத்தொள்ளாயிரம்: குறிப்பு வரைக.

10. பாண்டி நாட்டுச் சிறப்பினை இங்குக் கூறியுள்ளவாறு நும் சொந்த சொற்களில் எழுதுக.

சிலேடை:

11. சிலேடை என்பதென்ன?

12. சந்திரனுக்கும் மலைக்கும் எவ்வாறு சிலேடை அமைந்தது?

13. திருமலைராயன் வரையில் தேங்காயும் நாயும் எவ்வா றொத்தன என்பதனைச் சிலேடையில் அமைத்துக் காட்டுக.

ஒருநாள் மாலை:

14. கரும்பு சிரித்த தேன்?

15. இங்குச் சொல்லப்படும் இயற்கைக் காட்சியினை நும் சொந்த நடையில் எழுதுக.

16. சந்திரன் வானத் தெழுந்த காட்சிக்குக் காட்டப்பட்ட உவமை என்ன?

17. மலைமீது வந்தவர் யாவர்? அவர் தோற்றப் பொலிவினைப் புலப் படுத்துக.

18. அன்னையின் திருவுடலிற் காணப்பட்ட வடுக்கள் யாவை? அவை எங்ஙனம் உற்றன?

19. மடலூர்தல் என்றால் என்ன?

20. 'சிறுவை மடன்மேல் செந்நீர் சிந்தி இவ்வடு பெற்றேன்' – விளக்க வுரை தருக.

21. 'ஏகதேச உருவகம்' என்றால் என்ன? உதாரணம் காட்டுக.

'உரைநடை : சிறப்புப் பகுதி

பண்டை உரைநடை

1. இறையனார் அகப்பொருள் உரை

நக்கீரர்

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடம் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாம் கூவி, 'வம்மின்; யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்து கின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடா யின ஞான்று என்னை உள்ளி வம்மின்,' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக் கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை, அரசன், 'இனி நாடு நாடாயிற்று. ஆகலின், நூல் வல்லாரைக் கொணர்க,' என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப் பட்டுக்கொணர்ந்து,'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்,' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை! எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்!' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவா யில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்: 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத் திடையது . ஆகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்,' என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிழ் தழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிபடு வான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர்

தெளித்து, பூவிட்டு, பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினன், 'அலகிடுவன்,' என்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்ட, பார்ப்பான் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையின் கவல்கின்றான் என்பது பட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானாகும்' என்று, தன் அகம் புகாதே கோயிற்றலைக்கடைச் சென்று நின்று, கடை காப்பார்க் குணர்த்த, கடை காப்பார் அரசற் குணர்த்த, அரசன், 'புகுதருக,' என்று பார்ப்பானைக்கூவ, சென்று புக்குக் காட்டக் கொண்டு நோக்கி, 'இது பொருளதிகாரம்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்தானாகற்பாலது!' என்று, அத்திசை நோக்கித்தொழுது கொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டு போய்ப் பொருள் காண்மின்,' என, 'அவர்கள் அதனைக்கொண்டு போந்து, கன்மாப்பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாம் தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாம் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும் என்று கொண்டு போந்து, அவனால் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாயொழியக் காண்டும்,' என, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல, அரசனும் எதிர் எழுந்து சென்று, 'என்னை நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்,' என, 'போமின்! நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையி னின்றே!' என்று அரசன் சொல்லப் போந்து, பின்னையும் கன்மாப்பலகை ஏறி

ருந்து, 'அரசனும் இது சொல்லினன்; யாம் காரணி கனைப்பெறுமாறு என்னைகொல்!' என்று சிந்தித்திருப்புழி, 'சூத்திரம் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுள் அன்றே! அவனையே, காரணிகனையும் தரல்வேண்டும் என்று சென்று வரங்கிடத்தும்,' என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரி குடி கிழார் மகனுவான் உருத்திர சன்மன் என்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டு போந்து, ஆசன மேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து; மெய்யல்லா உரை கேட்ட விடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினல் தோன்றினன்,' என மூக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்க மெல்லாம் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, 'ஐயனுவான் உருத்திர சன்மனைத்தரல் வேண்டும்,' என்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந்தணிந்து, கன்மாப் பலகை யேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனர் உரைத்த இடத்து ஒரோவழிக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனர் மகனர் நக்கீரனர் உரைத்த இடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்ரும் இந்நூற்கு!' என்ருர்.

அதனல், 'உப்பூரி குடி கிழார் மகனுவான் உருத்திர சன்மனுவான் செய்தது இந்நூற்குரை, என்பாருமுளர்; அவன் செய்திலன்; மெய்யுரை கேட்டானென்க. மதுரை ஆலவாயில் பெருமானடிகளால் செய்யப்

பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு, குமார சுவாமி யால் கேட்கப்பட்டது என்க.

வினாக்கள்

1. அரசற்கு ஏற்பட்ட கவற்சி யாது?
2. பார்ப்பாற்குச் செப்பிதழ் எவ்வாறு கிடைத்தது?
3. புலவர் ஒரு காரணிகனைப் பெற்ற வரலாற்றினைக் கூறுக.
4. நக்கீரர் உரை அமைத்தது எங்ஙனம்?
5. இடம் சுட்டுக:
   அ. நாடு நாடாயின ஞான்று என்னை உள்ளி வம்மின்.
   ஆ. நமக்கோர் காரணிகனை எங்ஙனம் காண்டுமேன்?

பயிற்சி

இவ்வுரையை நும் சொந்த நடையில் ஒரு கட்டுரையாக வரைக.

---

2. அழகு*

திருவாரூர் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு என்னும் நான்கு பொருளில் அழகு என்பதை மட்டும் யான் ஈண்டுச் சிறப்பாக எடுத்துக்கொள்கிறேன். என்னை? அழகு உள்ள இடத்தில் ஏனைய மூன்றும் விரவி நிற்ற லின் என்க. அழியா அழகில் மணமும் இளமையும் இறைமையும் கலந்து நிற்றல் இயல்பு.

அழியா அழகு என்று ஈண்டுக் குறிப்பிட்டது உன்னற்பாலது. அழியா அழகெனில் அழியும் அழ கென்று ஒன்றுண்டோ என்னும் ஐயம் சிலருளத்திலா தல் பிறக்கலாம். அழகின் அழியாமை நோக்கி, ஈண்டு 'அழியா' என்னும் அடையால் அழகைச் சிறப்பித்த தன்றி, அழியும் அழகுக்கு எதிர்மறையாக

---

* இக் கட்டுரை ஆசிரியரவர்களின் 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலிலிருந்து உரிமையாளர் இசைவுடன் கொள்ளப்பட்டது.

'அழியா' என்று அழகைச் சிறப்பிக்க வில்லை யென்றுணர்க.

உலகில் ஒவ்வோருண்மைக்கும் மாறுபட்ட போலி யுண்டு. போலிக்கண் உண்மை யின்மையான், அஃது அழிந்துபடுகிறது. இம்முறையில் அழியா உண்மை யழகிற்கும் மாறுபட்ட அழியும் போலியழ கென்று ஒன்றிருக்கு மன்றே? அப்போலி அழகை அழியும் அழகு என்று அழைக்கலா மன்றே?

இதனால் அழகை இரு கூறுபடுத்தி அழியா அழகு, அழியும் அழகு என்று சொல்ல வேண்டுவ தில்லை. அழிவதை அழகென்றுங் கொள்ள வேண்டுவ தில்லை. இதுபற்றியே 'அழியா' என்று அழகைச் சிறப்பித்தவாறு காண்க. அழகுப் போலியை அழியும் "அழகு" என்றதும் முகமன் என்க.

இயற்கையோடு வாழ்ந்து, இயற்கையோடு படிந்து, இயற்கைகையை ஆய்ந்து, இயற்கையி லுறையும் அழகேனும் முருகைக் கண்ட டழர் தமிழ்ப் புலவர்கள் அழகின் இயல்பைப் பற்றி என்ன கூறியுள்ளார்கள்? அதைச் சற்று நோக்குவோம்.

பழந்தமிழ்ப் புலவர்களுள் ஈண்டு நக்கீரனர் ஒருவரைக் கோடல் சால்பு. நக்கீரனரின் புலமை கருதி மட்டும் அவரை ஈண்டுக் கொள்ள வேண்டுவ தில்லை. அவர் இயற்கையில் முருகை யுணர்ந்து, முருகாற்றுப் படை பாடியதில் தமது புலமை செலுத்தியவர் என்னுந் தொடர்புரிமை கொண்டு, அவரை ஈண்டுக் கோடலே ஏற்புடைத்து. நக்கீரனர் தாமுணர்ந்த அழகைப் பொதுமுறையில் திருமுருகாற்றுப்படை யாகப் பாடி மகிழ்ந்தார். அவ்வாற்றுப் படைக்கண் ஓரிடத்தில் அழகின் இயல்பு இத்தகைத் தெனச் சிறப்பு முறையில் அவர் அறிவுறுத்தி யிருக்கிறார். "கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு" என்று அப்புலவர் அழகியல் தெரித்தவாறு காண்க.

கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மை யூட்டினவர் யாவர்? இயல்பாக அரும்பிய இவைகளின் அழகே கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி.

கைபுனைந்தியற்றா இவ்வழகு அழியாத்தன்மையது என்று மேலே தொகையாகச் சொல்லப்பட்டது. அதை ஈண்டு வகைப்படுத்திச் சில உரை பகர்தல் நலனெனத் தோன்றுகிறது. அழகு உள்பொருளா அல்லது மக்கள் உள்ளம் இயற்கையில் படியும்போது அங்கே உருவெளி யாய்த் தோன்றும் இல்பொருளா என்பது ஆராயத் தக்கது.

அழகைப்பற்றி எண்ணாத இடமில்லை; பேசாத இடமில்லை; போற்றாத இடமில்லை; அழகின்மாட்டு உலகங் கொண்டுள்ள பற்றுப்போல வேறொன் மாட்டும் அஃது அப்பற்றுக் கொண்டில்லை. 'அழகு அழகு' என்றே உலகம் அழகில் உறைந்து நிற்கிறது. இவ்வாறு அழகுடன் வாழும் உலகை நோக்கி, "அழகு எப்படி இருக்கிறது" என்று வினவின், அதைச் சொல்லால் சொல்ல இயலாது அது விழிக்கிறது. புலன்களுக்குப் பொருளாகாத ஒன்றைப் பற்றி என்ன சொல்வது? என்னே அழகின் நுட்பம்!

"புலன்கட்குப் பொருளாகாமை" என்னும் ஒன்று கொண்டு, அழகிற் கின்மை கூறலாமோ எனின், அஃதும் அறமாகத் தோன்ற வில்லை. என்னை? உணர்வி லுறுத்தல், வினையாற்றல், துன்ப நீக்கி இன்ப மாக்கல் முதலியன அழகால் பெறுகிறோம். இத்தகைய நிகழ் வுடைய ஒன்றன் இருப்பை எங்ஙனம் மறுத்தல் கூடும்?

உலகில் புலன்களுக்குப் பொருளாகும் பொருள் களு முண்டு; பொருளாகாப் பொருள்களு முண்டு. இவை

கலை முறையே பருமை[1] என்றும், நுண்மை[2] என்றும் உலகங் கொண்டிருக்கிறது. பருமைக்கு உண்மை கூறலும், நுண்மைக்கு இன்மை கூறலும் அறிவுடைமை யல்ல. என்னை?

ஊனப் புலன்களுக்குப் பொருளாகாது, உணர்வில் நிகழ்ச்சி யளவில் உறுத்தும் பொருள்களு முண்டு. அறிவு அறம் அன்பு நீதி முதலியன புலன்களுக்கு வடிவால் காட்சி வழங்கும் பருப்பொருட்க ளல்ல. இவைகள் காட்சி வழங்காமையான், இவைகளின் உண்மைக்கும் மறுப்புக் கூறலாம் போலும்! இவைகள் உள்ளனவே யன்றி இல்லன வல்ல. இவைகளின் உண்மை, இவைகளையுடைய பருப் பொருள் வாயிலாக உணரக் கிடக்கிறது. அறிஞன் வழி அறிவும், அறவோன் வழி அறமும், அன்பன் வழி அன்பும், நீதிமான் வழி நீதியும் உணர்விற்படுதல் ஓரற்பாற்று. இவை போன்ற பல நுண்மைக ளிருக்கின்றன. இவைகளுள் அழகு மொன்று. அழகுடைப் பொருள் கொண்டு அழகை யுணர்கிறோம். ஆகவே, அழகென்பது பருப் புலன் களுக்கு வடிவாகத் தோன்றாத நுண்ணிய உள்பொருளெனக் கொள்க. அஃது உருவெளி யன்றெனத் தெளிக.

அந்நுண்மைப் பொருள் யாண்டும் நீக்கமற நிற்பது. யாண்டும் நிறைந்துள்ள அந்நுண்பொருள் சில வேளைகளில் சில விடங்களில் தனதிருப்பை உயிர்கட்கு அறிவுறுத்தவோ என்னவோ மின்னொளிபோல் தன் (நுண்ணிய) தோற்றத்தைப் புலப்படுத்துகிறது. இளஞாயிறு தனது செங்கதிரை நீலக்கடலில் பரப்பும் போது அப்பரவையிடை அழகு ஒளிர்கிறது. அஞ்ஞாயிறு தனது இளவெயிலை, பசுங்கடல் பொங்கி யெழுந்தாலென உருண்டு திரண்டு பரந்து ஒளி நுழைவதற்கு மிடமின்றிச் செறிந்து மிடைந்து சரிந்து சாய்ந்து நிற்குங் குறிஞ்சிக் காடுகளின் பச்சை மேனியில் உமிழும்போது அவ்விடை அழகு அரும்புகிறது. திங்கள் தன் பால்

[1] Concrete. [2] Abstract.

நிலவை, வெள்ளை வெளேலென வெள்ளி அறல் படர்ந்தாலென மிளிரும் வெள்ளிய மணல்மீது காலும்போது அங்கே அழகு ஒழுகுகிறது. இவ்வாறு சில வேளைகளில் சில விடங்களில் அழகு தனது நுண்ணிய காட்சி வழங்குதல் உணர்க.

அழகு எதன் வாயிலாக உணரக் கிடக்கிறது? அழகு தன்னுடைய இயற்கை வாயிலாக உணரக்கிடக்கிறது. அதற்கும் இதற்குமுள்ள தொடர் பென்னை? அழகுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பை என்னென்று கூறுவது? அழகின் உடல் இயற்கை. இயற்கையினூடே அழகு நீக்கமின்றி விராவி நிற்கிறது. இயற்கையை விடுத்து அழகை ஆராய்ந்துணரல் அரிது. அழகின் இருப்புணர்தற்குக் கருவியாயுள்ள இயற்கையும் அழகைப்போல உள்பொருளேயாம். இயற்கை, பலப்பல வடிவங்களாகத் தோன்றித் தோன்றி மறையினும், அதன் முதல் கேடுறுவ தில்லை. உள்ளதற்குத் தோற்றமே யன்றி இல்லதற்குத் தோற்ற மில்லை என்பது அளவை. அழியாது கிடக்கும் இயற்கை முதலுக்கு அடிப்படையாக நிலவுவது அழகாகும். அழகினின்றும் அரும்பி மலர்ந்து காட்சியளிப்பது இயற்கை என்று சுருங்கச் சொல்லலாம். அழகுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பு நோக்கி, அஃதே இஃது, இஃதே அஃது என்றுங் கொள்ளலாம்.

தனக்கு அடிப்படையாக நிற்கும் அழகைப் பலப்பல வடிவங்களாக இயற்கை காட்டிக் காட்டி, உலகைக் கவர்ந்து மகிழ்ச்சி யூட்டுகிறது. ஒவ்வோர் இயற்கைப் பொருட்கண் கருத்தை ஒற்றி ஒற்றி, உன்ன உன்ன, அதனதன் அழகு தனித்தனியே உணர்வில் உறுதல் பெறலாம். இப்பயிற்சி முதிர முதிர எல்லா இயற்கைப் பொருட்கும் அடிப்படையாக ஒரே அழகு நிலவல் உணரலாம். எனவே அழகு தனித்தனிப் பன்மையாகவும், பரந்த, ஒருமையாகவும் உயிர்கட்கு உறுதுணை செய்தல் ஓர்க.

அழகு உயிர்கட்குப் புரிந்து வரூஉம் உறுதுணையை என்னென் றுரைப்பது? அழகோ, புலன்கட்குப் பொருளாகாதது. அஃது உயிர்கட்குப் புரிந்து வரூஉந் துணையோ, அளவில் அடங்காதது. அழகு புலன் கட்குப் பொருளாகிற தில்லை. ஆனால் அது புலன்கட்கு விருந்தாகிறது. அழகில் தோயாத புலன்கள் உரமிழந்து உலர்ந்துபோகும். புலன் கெட்ட உயிர்கட்கு வாழ்வேது? வளர்ச்சியேது? இன்பமேது? இன்ப நுகர்ச்சிக்கு வாயாக வுள்ள புலன்கள் அழகில் படிந்த வண்ண மிருத்தல் வேண்டும். அப்படிப் புலன்கள் பருகும் விருந்தமிழ்தம் உடலையும் உயிரையும் ஓம்புவ தாகும்.

அழகு புறத்தே நிற்பதுபோல அகத்தேயும் நிற்கிறது. புறமும் அகமும் ஒன்றும்போது அழகுணர்வு புலனாகும். அதற்குக் கருவிகளாக இருப்பனவே புலன்கள். அப்புலன்கள் அழகில் தோய்ந்ததும், ஆங்காங்குள்ள அழகு, மலரினின்றும் மணம் வீசுவது போலத், தன்னினின்றும் தன் ஒளி பொழியத் தொடங்கு கிறது. அதனால் உடலும் உயிரும் ஆக்கமுறும். அழகு புலனாகாத நுண்மையதாய் உலகிற்குப் புரிந்து வரூஉம் உதவி உணர்வால் உணரத் தக்கது.

உலகிற்கு அடிப்படையாய் நின்று துணைபுரியும் அழகு, தோற்றவொடுக்க முடையதாயின், அதை அழகு என்று அழைத்தல் பொருந்தாது. தோற்ற ஒடுக்க முடைய மாறுதலை (விகாரத்தை) அழகு என்று எங்ஙனம் அழைப்பது? தோற்றவொடுக்கமிலா ஒன்றே அழகாகும். அத்தகைய ஒன்றைப் படைப்பவர் யாவர்? வளர்ப்பவர் யாவர்? இக்கருத்துப் பற்றியே அழகை அழியா இயற்கை அழகு என்று ஆன்றோர் ஆண்டு வருகின்றார். அவ்வழகில் தோய்ந்து அழகராய நக்கீரனார், அழகைக் "கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு" என்று கூறிப் போந்தார். இவ்வழகே பழந் தமிழர் போற்றிய முருகு முருகாகும்.

வினாக்கள்

1. 'அழியா அழகு' என ஆசிரியர் ஆண்டமைக்குக் காரண மென்ன?
2. ஆசிரியர் நக்கீரரை இங்குக் கூறக் காரணம் யாது?
3. 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' — விளக்கம் தருக.
4. அழகிற்கு இன்மை கூறல் ஆகாது என்பதனை எவ்வாறு வலியுறுத்துகிறார்?
5. அழகு நமக்கு வழங்கும் சில காட்சிகளை எழுதுக.
6. அழகுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துக.
7. அழகுக்கும் புலன்களுக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துக.

பயிற்சி

'இயற்கை யழகும் செயற்கை யழகும்' என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை வரைக.

---

3. தமிழர் போர்முறை*

வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., B.L.

தமிழில் 'போர்' என்னும் பெயர்ச்சொல் காரண இடுகுறிப் பெயராக வழங்கப்படுகிறது. பிற மொழிகளிற் போரைக் குறிக்கும் பெயர்களுக்குச் சிறப்பாக வேறு ஒரு பொருளும் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. தமிழில் 'போர்' என்னும் சொல் 'பொரு' என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். "பொரு" அல்லது 'பொருவுதல்' என்பதற்கு, ஒப்ப, ஒத்திருத்தல் என்று பொருள். அதனால் "பொருநன்" என்பதற்கு, "தனக்குப் பிறர் உவமமாவதன்றித் தான் பிறர்க்கு உவமிக்கப்படுவான்", என்று நச்சினார்க்கினியர் உரை எழுதியிருக்கிறார். ஆகவே, 'போர்' என்னும் சொல் ஒத்திருத்தல் என்னும் பொருளைத் தன் அகத்தடக்கி நிற்கிறது. இதிலிருந்து தமிழர்களுடைய போர்முறையைப் பற்றிய ஓர் அரிய செய்தி வெளியாகலாம்.

---

* இக்கட்டுரை ஆசிரியவர்களின் இசைவுடன் 'தமிழ் உள்ளம்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

தமிழ் மக்கள் ஒத்த திறலுடையாரையும், ஒத்த படையுடையாரையும் எதிர்த்துப் பொருவதே போராகும் என்ற கொள்கையை உடையர். மெலியாரிடை வலியார் வலி என்னுகுவ தென்று கடிந்தொதுக்கினுர்கள். ஒரு வீரன் போர்க்களத்திற் படைதாங்கிப் போர்த்தின வெடுத்து நின்ருன். ஒரு யானை தன்னைச் செலுத்துவோனை இழந்து தனியே நின்றது. யானையைக் கண்டவுடன் வீரனுக்கு அதனேடு போர்புரிய எண்ணம் உண்டாயிற்று. சற்றுத் தீர ஆராயலுற்ருன். யானை தன்னந் தனியே உதவி புரிவோரின்றி நின்றது. அதனை ஏறி நடத்தும் மேலாளும் இறந்துபட்டான். தானுகப் போர் புரியும் நினைவின்றிப் பிறனுடைய கட்டுக்கு அடங்கி நிற்பதாகத் தோன்றிற்று. இவ்விதக் காரணங்களால் அவ்வியானையைக் கொல்வது இளிவு என்று அவ்வீரன் கருதினுன். இதைத் தவிர, இன்னுமொரு காரணம் அவன் கற்பித்துக் கூறியது விந்தையே. யானைக்குத் துதிக்கை ஒன்றுதானுண்டு அதனுல் அது ஒரு கையையுடையது. மனிதனுக்கோ இரண்டு கைகள் உள்ளன. ஒரு கையையுடைய விலங்கோடு இரு கைகளையுடைய மனிதன் போர் தொடுக்கலாமா? அதனுல், அவ்வீரன் யானையை எறியாது பிழைத்துப் போக விடுகிருன்:—

"தானுல் விலங்கால் தனித்தாற் பிறன்வரைத்தால்
யானை யெறிதல் இளிவரவால்—யானை
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்."

இதனுல் பொருதற்குரியாரிடமல்லாமல் ஒவ்வாதவரோடு பொருவது அறமன்று என்று தமிழர் கண்டிருந்தனர் எனலாம்.

போர்க்க்ளத்தில் வீரர் தம் முகத்தினும் மார்பினும் கொள்ளும் புண்களை 'விழுப்புண்' என்று ஆன்ரோர் வழங்குவர். அவ்விதம் விழுப்புண் படாத நாளைப் பிறவாத நாளாகக்கொண்டு தமிழ் வீரர்கள் பேதுறுவர். அரசன் தன் வீரர்களுக்குப் பகைவர்களைக் குறித்துக்

காட்டிப் போருக்கு ஏவாமல், காலம் வாய்க்க வில்லை யென்று மடிந்திருப்பானுகில், வீரர்கள் தம்மிற் பொரு தாயினும் சாகலாமென்று ஆர்ப்பரித்துத் தம்முடைய பூரித்த தோள்களைத் தட்டி உடற் கரிப்பர்.

தோயன்மாறன் என்னும் சிற்றரசன் ஈர்ந்தூரை ஆண்டுவந்தான். போரில் அஞ்சாது முனைந்து சென்று பொருபவனுகையால் அவன் மேனியிற் பல இடத்தும் வாளால் அறுக்கப்பட்டுப் புண் ஆறித் தழும்புகள் நிறைந்து மருந்து வாங்கிக் கொள்ளப்பட்ட மரம் போலக் காணப்படும். அவ்வடுக்களே உடம்பிற்கு அழகு கொடுத்து நின்றன. அவ்வழகும் குற்ற மற்ற ஆண்மை நிறைந்த அழகு.

> *“இறையுறு விழுமந் தாங்கி யமரகத்
> திரும்பு சுவைக்கொண்ட விழுப்புணோய் தீர்ந்து
> மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
> வடுவின்று வடிந்த யாக்கையன்.”
>
> (புறநானூறு—180)

இதனுல், விழுப்புண்படாத உடம்பைக் குற்றமுடைய தாய், அழகொழிந்த உடம்பென்றே தமிழர் கருதினுர் என்பது நன்கு பெறப்படும்.

திருக்கிள்ளி என்பவன் ஒரு சிற்றரசன். போரிற் புறங்கொடாப் பெருந்தகையாளன். அவன் உடம்பு முழுவதும் போரிற் புண்பட்டு ஆறிய தழும்புகள் நிறைந்து அருவருக்கத்தக்க தோற்றமுடையன். ஆனுல் தமிழ்மக்கள் அவனைப் பன்மடங்கு புகழ்ந்து போற்றி னர். மாடலன் மதுரைக் குமரனுர் என்னும் புலவர், ஆசியச் சுவை ததும்ப அவன் புகழைத் தோற்று விப்பது மிக்க இன்பம் விளைப்பதாகும். அவர் அவ்

* “தன் அரசுக்கு வந்துற்ற போரான் அமைந்த இடைபைகளைத் தான் பொறுத்து அந்தப் போரின்கண் படைக் கலங்கள் சுவைக்கொண்ட சிறந்த புண்ணுகிய நோய் தீர்ந்து, மருந்து வாங்கிக் கொள்ளப்பட்ட மரம்போல வாளுற்ற வடு ஒன்றோடொன்று விரவி, ஆண்மைக் குறைபாடின்மையின், வசை யின்றி அழகுபெற்ற உடம்புடையன்.”

வீரனைப் பார்த்து, 'நீ பகைவரை எதிர்த்து அஞ்சாது முன் நிற்பதனால் உடல் எங்கும் படையறுத்த புண்கள் தாங்கிக் கோர உருவத்தனாய் இருக்கிறாய். உனது காட்சி எங்கள் கண்ணுக்கு இனிமை அளிப்ப தில்லை. ஆனால் உனது புகழைக் கேட்க எங்கள் காதுக்கு இனிமையாய் இருக்கிறது. உன்னுடைய பகைவர் உன் எதிர் நிற்றற்கு அஞ்சிப் போரில் முதுகு காட்டி ஓடிப் பிழைக்கின்றனர். அதனால் அவர்களது யாசற்ற மேனி வழுவழு வென்று வடுவொன்று மில்லாது கண்ணுக்குப் பார்க்க அழகாயிருக்கின்றது. எங்கள் காதாலேதான் அவர்கள் வசையைக் கேட்க முடிவ தில்லை. ஆனால், உன் பகைவரை எல்லாரும் பழிக்கின்ற னர், உன்னைப் புகழ்கின்றனர். நீ கேள்விக் கினியை; அவர் காட்சிக் கினியர். ஆகையால் நீயும் ஒன்றில் இனியவனாயிருக்கிறாய், அவர்களும் ஒன்றில் இனிய வர்களாயிருக்கிறார்கள். இவ்வித ஒற்றுமை உங்களிடை இருக்கவும், உங்களிடை ஒவ்வாததுதான் எது! பின், எதற்காக மக்கள் உன்னை மட்டும் உயர்த்தி, மற்றும் உன் பகைவரை இழிக்கிறார்கள்?' என்று பழிப்பது போன்று புகழ்ந்து பாடியுள்ளார்.

"நீயே, அமர்காணின் அமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர் நிற்றலின்
வாஅள் வாழ்ந்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை, கட்கின் னாயே;
அவரே, நிற்காணூற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக்கினியர், செவிக்கின்னாரே;
அதனால், நீயுமொன் றினியை அவருமொன் றினியர்;
ஒவ்வா யாவுள? மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகம்! அஃது
என்னோ பெருமி? உரைத்திசி னெமக்கே."

(புறநானூறு—167)

இதனால் போர்வீரருக்குப் புண்ணே பூண்கலம் என்பதும், நம் முன்னோர் விழுப்புண்களை வீறுடன் தம் மேனியிற் புனைந்து வான்புக ழெய்தினர் என்பதும், அதை நம் நாட்டினர் போற்றிப் புகழ்ந்தனர் என்பதும் நன்கு விளங்கும்.

நமது எண்சாண் உடம்பிற்கும் மிகவும் சிறப்பாக விளங்கும் உறுப்பு கண்ணே யாகும் அதில் ஒரு தூசியோ, துரும்போ, துளியோ அல்லது காற்றில் அலைந்து வீசிவரும் மயிர் நுனியோ பட்டுவிட்டால் அக்கண் என்ன பாடுபடுகிறது! உடல் முழுதும் துடி துடித்துத் துன்புற்று நடுங்குவோம். அவ்வளவு நுண்ணியதாய் இருக்கும் அக்கண்ணை நோக்கி ஒரு வேலாயுதம் பாய்ந்து வந்தாலும் தன் கண்ணிமைகளைச் சற்றே அசைப்பதும் ஒரு வீரனுக்குக் குற்றமாகு மென்று நம் முன்னோர் கொண்டிருந்தனர்.

"விழித்தகண் வேல்கொண் டெறிய
விழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு"

என்பது பொய்யாமொழி யன்றோ!

வீரர்கள் களத்திற் போர் புரியும்பொழுது தமது நலத்தையும் கவனியாது தமது தோழர்களுக்கு வரும் இடுக்கணைத் தடுக்கவே முயன்று நிற்பர். ஒரு வீரன் போரில் நெருக்கமான இடமொன்றில் பொருது நின்றான். போர் முனையில் நின்ற அவனது தோழனைப் பகைவர் சூழ்ந்துகொண்டு பெரும் போர் புரிந்தனர். அவனுக்குத் தான் உடனே சென்று உதவி புரியாவிடில் தோழன் இறந்துவிடுவான் என்பதை வீரன் தெரிந்தான். தான் நின்றதோ போரில் நெருக்கடியான இடம். பகைவர் கூட்டமாய்ச் சூழ்ந்து நெருங்கிப் பொருதனர். அப்பொழுது ஒரு வேலும் தன் வயிற்றினுட் பாய்ந்து குடரும் சரிந்து காலிற்படும்படித் தொங்கிக் கிடந்தது. அவன் அடியெடுத்து நடக்கும்பொழுது சரிந்த குடர்

காலிற் பின்னிக்கொண்டு அவன் போக்கிற் கிடையூறு விளைத்தது. இரும்புச் சங்கிலி காலில் மாட்டிய யானை எவ்வாறு நடக்குமோ அதுபோல் நடந்து சென்றான். தன்னை எதிர்த்து மண்டிய பகைவர் பக்கம் நோக்கித் தன் கூரிய வேலை ஓச்சி, "ஒப்புமின்! ஒப்புமின்!" என்று கூவிக்கொண்டே, தன் உயிரை ஓம்பாது, பகைவர் அஞ்சி ஒதுங்கும்படி கூட்டத்தைப் பிளந்துகொண்டு, கன்றை நினைத்துக் கதறிவரும் பசுவினைப்போல், விரைவில் தன் தோழனுக்கு உதவியாய்ப் போர் முனைக்குச் சென்றான். எவ்வளவு அழகாக அவ்வீரனின் செயல் இக்கவியில் கூறப்பட்டிருக்கிறது!

".. செற்றிய
திணிநிலை[1] யலறக் கூவை போழ்ந்துதன்
வடிமா ணெஃகம் கடிமுகத் தேந்தி
ஓம்புமின் ஓம்புமின் இவணென ஓம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தெதிர்ந்ததன் தோழற்கு வருமே."

(புறநானூறு — 275)

இவ்வித வீரஞ் செறிந்த தமிழ் மறவர்கள் போரில் முதுகு காட்டி ஓடினோரையும், மயிர் குலைந்தோரையும், ஒத்த படை எடாதோரையும், பெண்பெயர் புனைந்தோரையும், பேடியரையும் எதிர்த்துச் சண்டை செய்யார். ஒரு நாட்டைத் தாக்கிப் போர் தொடுக்குமுன், அந்நாட்டில் வாழ்பவருக்கு, முன் எச்சரிக்கை கொடுத்து, போர்க்குரியரல்லாத அந்தணரையும், மாதரையும், குழந்தைகளையும், பிணியுடையோரையும், தங்களுக்கு ஈமக்கடன் கழிப்பதற்குப் பொன்போற் புதல்வர்ப் பெறாதோரையும் அந்நாட்டை விட்டு ஒதுங்கச் செய்வர். இவ்வித விளம்பரத்தை யறிந்து தாமாகத் தப்பிப் பிழைக்க இயலாத பசுத்திரளைக் களவாடிச் சென்று உயிர் காப்பர்.

[1] திணிநிலை = நெருங்கி இருந்த சேனையின் நிலை.

இச்செய்தி, "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் புறநானூற்று 9-வது பாடலால் நாம் அறியலாம். இதனால் தமிழர்க்கு மறத்தினிடையிலும் அறமே திகழ்ந்த தென்பது நன்கு விளங்கும். இத்தகைய அறப் பண்பும் மறப்பண்பும் வாய்ந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திகழ்ந்த தமிழ் மிலேச்சர்களோடு, இரவில் அறியாது இன்றுயில் கொள்ளும் பெண்டு பிள்ளைகளின் மேல், விசும்பி னிவர்ந்து குண்டுமாரி பொழியும் இருபதாம் நூற்றாண்டினராகிய நாகரிக மக்களை ஒப்பிட்டு, அறிவாளிகள் உண்மையை யோர்ந்து தெளிவார்களாக."

வினாக்கள்

1. 'போர்' என்னுஞ் சொல்லினை ஆய்க.

2. போர்த்தினவுடன் யானையைக் கண்ட வீரன் அதனுடன் போர் புரியா தொழிந்த தேன்?

3. 'மருந்துகொள் மரம் – குறிப்பு எழுதுக.

4. 'நீ கேள்விக் கினியை, அவர் காட்சிக் கினியர்' – இடஞ்சுட்டி விளக்குக.

5. கண்ணிமைகளை அசைப்பதுவும் குற்றமாவது எப்போது?

6. போர்முகத்தில் வீரனொருவன் தன் தோழற்கு உதவச் சென்ற காட்சியினை வரைக.

7. தமிழ் வீரரிடை மறத்தினிடையும் அறமே திகழ்ந்தது என்பதனைப் புலப்படுத்துக.

பயிற்சி

'தற்காலப் போர் முறையும் முற்காலப் போர் முறையும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

4. வாரணம் பொருத மார்பன்*

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், B.A., B.L.

வாசவன் முதலிய வானவரையும், காலகேயர் முதலிய தானவரையும், வென்று இலங்கை வேந்தன், மூவுலகமும் வணங்கும் முடிமன்னனாக அமைந்தான். எண்டிசைப் பாலரையும், தென்றிசைக் கோமானையும், வென்று வீரகேசரியாக விளங்கினான். இன்னும், உலகினைத் தாங்கும் உரம் வாய்ந்த வேழங்களை எதிர்த்து அவற்றின் வலிய கொம்புகளை உதிர்த்தான். வரையிறந்த வலிமை சான்ற இலங்கை வேந்தனும் வேழமும் வெம்போர் புரிந்த விதத்தினை, வியந்துரைக்கப்போந்த கம்பர்,

†"தோடுழுதண் தார்வண்டும் திசையானை
மதந்துதைந்த வண்டும் சுற்றி
மாடுழுத நறுங்கலவை வயக்களிற்றின்
சிந்துரத்தை மாறு கொள்ள
கோடுழுத மார்பானை கொலையுழுத
வடிவேலின் கொற்ற மஞ்சித்
தாள்தொழுத பகைவேந்தர் முடியுழுத
தழும்பிருந்த சரணத் தானை"

என்று நிறைந்த மொழிகளாற் புகழ்ந்துரைத்தனர். வேந்தனும் வேழமும் வெம்போர் புரிந்தபொழுது இலங்கை மன்னன் மார்பில் இலங்கிய மாலை மலர்களில் மதுவுண்டு களித்த வண்டுகள் வேழத்தின் மதமுண்டு இறுமாந்த வண்டுகளோடு இகல் விளைத்தன. இன்னும் வேழத்தின் மத்தகம் வேந்தன் மார்பில் தாக்கியபொழுது

---

* இக்கட்டுரை பேராசிரியர் அவர்களின் 'வீரமாநகர்' என்னும் நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

† தண் தார் தோடு உழு வண்டும் – குளிர்ச்சிபொருந்திய மாலையிலுள்ள மலரிதழ்களில் கிண்டி மொய்க்கும் வண்டுகளும். மாடு உழுத – (தன் மார்பாகிய) இடத்தே பூசிய. கொலை உழுத – கொலை செய்யும்படி பாய்ந்து செறிகின்ற.

அம்மார்பில் இலங்கிய கலவைச் சாந்தம் களிற்றின் நெற்றியிலும் மத்தகத்திலிட்ட சிந்துரத்திலகம் மன்னன் மார்பிலும் மாறிப் பதிந்தன. மன்னன் மார்பைப் பிளக்கக் கருதிய வேழத்தின் வலிய கொம்புகள், அரக்கர் கோன் உரத்த மார்பை ஊடுருவிச் செல்ல வலியற்று ஒடிந்து பொடியாக உதிர்ந்தன. வேழத்தின் கொம்பு பதிந்த வடுக்களில் பொன்னும் மணியும் இழைத்து இலங்கேசன் போற்றினன் என்று அவன் வரலாறு கூறுகின்றது.

இங்ஙனம் திசையானைக் கொம்பிறுத்த இலங்கேசன் புயவலியானும் மாண்புற்று விளங்கினன். விண்ணிலே வேகமாகச் சென்ற தன் விமானத்தைத் தடுத்த வெள்ளி மலையைக் கண்ட வேந்தன் வெகுண்டு, அஃது ஈசன் உறையும் எழிலார் குன்றம் என்றும் எண்ணாது, அம்மலையைத் தன் புயவலியாற் பெயர்த்தசைத்தான். அப்பொழுது அம்மலையில் வாழ்ந்த முனிவரும் சித்தரும் அசலம் தன் இயல்பழிந்து அசைதலைக் கண்டு அஞ்சினார்கள். இறைவன் பாகத்திலமர்ந்த மங்கையும் நடுங்கித் தலைவனைப் பற்றிக்கொண்டாள். இங்ஙனமாக மலையில் வாழும் மாதவத்தோரெல்லாம் மயங்கக் கண்ட மாதொருபாகன், தன் மாணடிக் கொழுந்தாலூன்றி மலையை மீண்டும் நிலைநிறுத்தினன். ஆயினும் வெள்ளி மாமலையைப் பெயர்த் தசைத்த வீரன் பெருமை மூவுலகினும் பரவிற்று. இராவணன் சபையி லமர்ந்த இசை வல்லார் வேழத்தின் மருப்பொசித்து வெள்ளிமாமலையெடுத்த வீரன் பெருமையை இசைக் கருவிகளில் அமைத்துப் பாடினார்கள்.

செயற்கரிய செய்த இலங்கேசன் பெருமையை நினைத்தும் பேசியும் அவன் உற்றார் உறவினரனைவரும் இறுமாப்புற்றனர். ஓவியத்தி லெழுத வொண்ணா உருவமைந்த இராமனைக் கண்டு காமுற்று, இயற்கையுருக் கரந்து இன்னுருவம் புனைந்து, அஞ்சொல் இளமஞ்ஞையென அன்னமென வந்த அரக்கியாய சூர்ப்ப

நகையை நோக்கி "மாதே! நீ யார்" என்று இராமன் வினவியபொழுது,

> "...... .... திக்கின்
> மாவெலாம் தொலைத்து
> வெள்ளிமாலை யெடுத்து உலகம் மூன்றும்
> காவலான் பின்னை, காமவல்லியாம் கன்னி"

என்று அம்மங்கை தன்னை அறிவிக்கும் திறம் அறிந்து மகிழத் தக்கதாகும். இன்னும் இளைய வீரன் வாளால் மூக்கிழந்து மானமழிந்த மங்கை, துயர் பொறுக்கலாற்ருது அலறும்பொழுது "அரனிருந்த மலையெடுத்த அண்ணுவோ! அண்ணுவோ!" என்றும்,

> "திசையானை விசைகலங்கச்
> செருச்செய்து மருப்பொசித்த
> இசையாலே நிறைந்தபுயத்
> திராவணவோ, இராவணவோ"

என்றும் தமையனது பெருமையைப் பன்னித் தன் குறையை முறையிடும் தன்மை அறியத் தக்கதாகும்.

இலங்கை மாநகரில் முதல்நாள் நிகழ்ந்த நெடும் போரில் அநுமனும் அரக்கர்கோனும் அரும்போர் விளைத்தார்கள். அடல் ஏறுபோன்ற அரக்கர் கோமானை நோக்கிய அநுமன், "ஐயனே! வில்லாயுத முதலாய வெம்படைக ளெல்லாம் பயின்ருய்; இருபது புயங்க ளோடியைந்தாய்; ஆயினும் உன் வாளாண்மையும் தோளாண்மையும் என் கையின் ஒரு குத்தால் துடைத்து ஒழிப்பேன்; பின்னும் நீ இறவாதிருப்பின் உன் இருபது கரங்களாலும் என்னைக் குத்துவாய்" என்று வீரமொழி பகர்ந்தான். இலங்கை வேந்தனும் குத்துப் போருக்கிசையவே, வலிமையின் வரம்பு கண்ட மாருதி தன் வயிரக் கரத்தால் அரக்கனது அகன்ற மார்பில் குத்தினன். அநுமன் குத்துக்கு ஆற்ருத அரக்கர் கோன் சண்டமாருதத் திலகப்பட்ட மரம்போற் சலித் தான். அது கண்ட வானவர் வியந்து அநுமன்மீது

மலர்மாரி சொரிந்து ஆர்த்தார்கள். தானவர் தம் தலைவன் நிலை கண்டு தளர்ந்து வேர்த்தார்கள். ஆயினும் சிறிதுபொழுதில் இலங்கை மன்னன் சிந்தை தெளிந்து அநுமனை அமர்ந்து நோக்கி "ஐயனே, வலிமை என்பதும் இவ்வுலகில் உளது. அது உன் பாலே அமைந்துளது. அடலமைந்த உனது ஆண்மையை நோக்க ஏனைய வீர ரெல்லாம் அலிகளே யாவர். மலரோனது சாப வலியாலும் சலியாத என்னை உன் கைவலியால் மெலிய வைத்தாய். நீயே என்னை வென்றாய்" என்று தனது எளிமையைக் கரவாது எடுத்துரைத்தான். ஆகவே மும்மத வேழத்திற்கும் இளையாத வேந்தன் மார்பு, அநுமன் கரத்திற்கு எளிதாயிற்று. வாரணத்தின் கொம்புகளுக் கிளையாத மார்பு வானவீரன் கரத்திற் கிளைத்துச் சலித்தது.

பின்னர் அமர்க்களத்தில் இலங்கை மன்னனும் இலக்குவனும் எதிர்ப்பட்டார்கள். வில்லெடுக்க உரியார் இருவரும் காலனும் கலங்குமாறு நெடும்பொழுது கடும்போர் விளைத்தார்கள். இளைய வீரனை வில்லினால் வெல்ல இயலா தென்றறிந்த இலங்கையர்கோன், மலரோன் அளித்த மந்திர வேலை வேகமாகச் சுழற்றி விடுத்தான். அவ்வேல் மாறாக வந்த அம்புகளை நீறாக்கி வெம்மையோடும் வேகத்தோடும் இளைய வீரன் மார்பிற் பாய்ந்தது. வேலின் வெம்மைக் காற்றாது இளைய வீரன் மயங்கிச் சாய்ந்தான். இளையான் இளைத்தானே யல்லால் இறத்தா னல்லன் என்றறிந்த இராவணன் அவனை இலங்கைக்கு எடுத்துச் செல்ல எண்ணி இருபது கரங்களாலும் அள்ளலுற்றான். ஆயினும் வெள்ளிமாமலை யெடுத்த வீரத்தோள்கள் பொன்மலைபோல் விளங்கிய இளைய வீரனை எடுக்க மிடுக்கிலாது மெலிவுற்றன. இவ்வாறு அரக்கர்கோன் எடுக்க முயன்றதை அறிந்த அநுமன் விரைந்து போந்து இலக்குவனை எடுத்தணைத்து மகவு கொண்டு மரம்புகும் மந்திபோல் இராமன்பால் விரைந்தோடினன். இறைவனது அரும்

பெரும் குன்றையும் அசைக்கவல்ல அரக்கர் கோமான், இளையோன் ஆக்கையை எடுக்க இயலாது நின்ற எளிமையையும், அவ்வுடலை எளிதாக எடுத்துச் சென்ற அநுமன் பெருமையையும்,

"எடுக்க லுற்றவன் மேனியை
ஏந்துதற் கேற்ற
மிடுக்கி லாமையின் இராவணன்
வெய்துயிர்ப் புற்றான்
இடுக்கி னின்ற அம்மாருதி
புகுந்தெடுத் தேந்தித்
தடுக்கி லாததோர் விசையினன்
எழுந்தயல் சார்ந்தான்"

என்னும் இன்கவியால் கவிஞர் நன்கெடுத் திசைத்தனர். ஆகவே வரையினை யெடுத்த வலிய தோளாண்மை முதல்நாள் நிகழ்ந்த அரும்போரில் எளிமை யெய்திப் பெருமை குன்றி நின்றது.

இங்ஙனம் வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும், மாற்றார் வீரத்திற் காற்றா தொழிந்த மானத்தால் கவிழ்ந்த தலையோடும் குவிந்த முகத்தோடும் இராவணன் இலங்கைமா நகரை நோக்கிச் சென்றான். எத்திசையும் நோக்காது எவருடனும் பேசாது மண் மகளையே நோக்கிச் சென்ற மன்னன் எளிமை,

"வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோ டிலங்கை புக்கான்"

என்னும் கவியால் இனிது விளங்குவதாகும். அன்று நிகழ்ந்த அரும்போரில் வேழத்தை வென்ற வீரமார்பம்

வானவீரன் கைவலிமைக் காற்றாது தளரவும் வலியுடைய எடுத்த வயிரத்தோள்கள் இளைய வீரன் உடம்பை எடுக்க வலியற்று வருந்தவும் கண்ட காவலன் கவன்று தன்னையே வெறுத்துச்சென்ற நிலையை இணையற்ற மொழிகளால் எழுதிக் காட்டும் கம்பர் கவிநலம் கண்டு மகிழ்தற்குரிய தாகும்.

வினாக்கள்

1. இலங்கை வேந்தனும் வேழமும் போர் புரிந்தபோது நிகழ்ந்த தென்னை?
2. வெள்ளிமா மலையை இராவணன் பெயர்த் தசைத்த வரலாறு யாது?
3. தமையனின் ஆற்றலில் பெருமை கொண்டவள் சூர்ப்பநகை என்பதைப் புலப்படுத்துக.
4. மதவேழத்துக்கும் இளையாத இலங்கை மன்னன் மார்பு அனுமன் கரத்திற்கு எளிதாயின வரலாற்றை வரைக.
5. மகவு கொண்டு மரம்புகு மந்திபோல் ஓடியவன் யாவன்? வரலாறு வரைக.
6. ‘வெறுங்கையோ டிலங்கை புக்கான்’—இடம் கூறுக.

---

5. வாட்போர்*

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள், பி.ஏ.

[இளவரசி இன்பவல்லியை மதிவாணன் மணங்கொள்ள ஒழுங்குகள் நடைபெற்றுவிட்டன. ஆனால் இன்பவல்லியின் இதயம் உணராத மாயவன் என்னும் கொடியன் அவளை மணப்பான் கருதினான். அவன் தலைமையில் கயவர் நால்வர் அரண்மனையுட் கரந்து புக்கு இரவு நேரத்தில் இன்பவல்லி தூங்கிக்கொண்டிருக்கும்போது அவளை எடுத்துச் செல்லுகின்றனர்.]

நம் மாதரசி இன்பவல்லியை யெடுத்துச் சென்ற கயவர் நால்வரும் அவர்தந் தலைவனிட்ட ஆணை தவறாது வெளியே சென்று அரண்மனை வாயில் கடந்து

---

* இப்பகுதி ‘மதிவாணன்’ என்னும் நவீனத்திலிருந்து எடுக்கப்பட்டது. சாஸ்திரியார் அவர்கள் மைந்தர் திரு. இ. எம். கோபாலகிருஷ்ணக்கோன் அவர்களால் வெளியிடப்பட்டது. (மதுரை)

லேழத் திசையின்கணுள்ள புதுவர் புகுவாயிலாற் புரி சையையுங் கடந்து போயினர். அங்ஙனம் போய்ச் சிறிது தூரங்கடந்த பின்னர்ப் போருடை தரித்தான் ஒரு வன் புரவி மீதேறிப் போந்து அவரைச் செல்லுமாறேயி னன். அவருங் கடுகி நடந்தனர். முன்னர் ஒருவன் தீப்பந்தம் பிடித்து வழிகாட்டிச் செல்லாநின்ருன். அவ் விரவில் அவர் சென்ற வழியிலுள்ள மரங்களிடை நிகழ்த்த சிற்ரெலியும், அடுத்த புதர்களிற் சர சரப்பொலி யும், காற்றினலைசையுஞ் சருகுகளின்ஞெலியும் அடிக்கடி யிவர்கள் பேசும் பேச்சொலியுமாகிய இவற்றைத் தவிர்த்து வேருே ரோதையுங் கேட்டற் கிடமில்லை.

• அங்ஙனஞ் செல்வுழி வன் காலொன்று முழங்கி யெழுந்தது. அவ்வளவில் துயிற்பெருந்தேவியின் திரு மடிக்கிடந்து கண்வளர்ந்திருந்த இன்பவல்லி துயி லொழிந் தெழுந்தனள்; எழுந்து தனது படுக்கை அசைந்து சேறல் கண்ணுற்று வெருண்டு ஒன்றுமுணர் கிலளாய்த் திகைத்துச் சிறிது நேரம் வாளாயிருந்தனள். பின்னர் அறிவுகூடி யுறுதிபூண்டு நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்துத் தன்னிலைமை யிற்றெனத் தெருண்டு தன் பினர்ப் போதருங் குதிரை வீரனை நோக்கி, "யாரை வீர' இஃதென்னை! எவ்வயிற் செல்லா நின்றனர் இக்கயவர்? இத்தீயர் என்னைச் சுமந்து சேறல் யாவர தாணை கொண் டோ? ஏனே இருளினேகுதல்? கரவுகொல் களவுகொல்? —ஐய, வீர! நீயுமேன் பேசுகின்றலை? என்னை யின்னண மெடுத்துச் சேறல் நிற்கு முடன்பாடுகொல்லோ? வாய் வாளாமை மேற்கொண்டதேன்? ஓ! என்னை நின் வீரம்! என்னை நின் ஆற்றல்!—தாதாய்! மாவீர வள்ளால்! நின் வயிற் பிறந்த வெற்கு இதுகொலோ போக்கு! ஐயகோ!' என்று கூவத்தலைப்பட்டனள்.

இஃதறிந்த அக்குதிரை வீரன் ஓடிப்போந்து இன்பவல்லியை அண்ணுந்து நோக்கி 'அம்மா! அஞ்சலை,, நினது மணவினை கருதியே இச்செயல்' என்றனன்.

இச்சொற்கள் தன் செவிப்படுதலும் இன்பவல்லி 'நன்றே இச்செயல், மிகவும் புதிதுகாண்! இது காறும் எவரும் புரிந்திடாச் செயல்!' என்று நகையாடி, 'யாரை நீ!' என்று வினவினள்.

அதுகேட்ட மாயவன் "இச்செயல் நன்றுமாறு பின்னர்க் காண்பை; ஆதலின் இதனை எள்ளற்பாலை யல்லை; என்னை யின்ன னென்று கடிதினிலுணர்வை' என்று விடுத்தனன்.

விடுத்தலும் இச்செயலினைக் குறித்துக் கருதுவான் புக்க இன்பவல்லி கவலையங் கடலுண் மூழ்கி அசை வற்றிருந்தனள். மாயவன் வஞ்சங்களுளொன்று முணராத அம்மடவரல் என்செய வல்லள்! சுவற் காவாளரும் துணைவிற் செல்லாநின்றனர். 'அந்தோ நம் முதவி கொண்டே நம்மினத்தினர்க்குத் தீங்கு புரிகின் றான்காண்; இனி யிப்பதகற்கு உதவுவே மல்லேம்' என்று கருதி நளிர் கங்குலாகிய நங்கையு மேகினள். இத்தீச் செயலுணர்ந்த உலகமாதேவியுங் கீழ்த்திசை யொண்முகஞ் சிவந்தனள். புள்ளெல்லாம் அரற்றின. மரங்களும் கண்ணீர் சொரிந்தழு தாங்கு பனித்துளி சொரிந்து காற்றினொலித்தன. திருப்பூவணமும் அணித் தாயிற்று.

அவ்வமயத்தில் இவுளிமேற் கொண்டானொ ரேந் தல் எதிரே போதரக்கண்ட மாயவன் கரவுநெறி யொன்று பற்றிக் கடுகத் தலைப்பட்டனன். எதிரே போந்த வீரனும் ஏதோ சிந்தித்துத் தோட்சுமையாளரை யேறட்டுப் பார்த்துப் 'பிணங்கொல்' என்றயிர்த்தனன். அது போழ்தின் இன்பவல்லியு மெழுந்தனள். உறவி னர்க் காண்பான் முதனாட் பூவணம் போந்து வழிநாட் காலைப் புரவி யிவர்ந்து உலவுறும் மதிவர்ணனும் அது கண்டு உடனே காலந்தாழ்க்கலன் அத்தீயர்பாற் சென்று "மேற்சேறலிர், நின்மின்" என்றனன்.

என்றது செவிப்பட்ட மாயவன் தன் குதிரையைத் தூண்டி விரைந்துபோந்து தனது வாளினையுறை

கழித்துக் கைப்பிடித்துக்கொண்டு "இவர்களைத் தகைத்து நிறுத்துவோன் நீகொலோ?" என்று சொல்லி மதிவாணன்மீது பாய்ந்தனன். அங்ஙனம் பாய்ந்த வளவில் அதனை யெதிர்பாராத மதிவாணன் சிறிது பின்னிடைந்து தனதுவாள் கைக்கொண்டு முனைந்து நின்றனன். பரியிவர்ந்த வீரர்களிருவர்க்கும் வாட்போர் நிகழத் தொடங்கிற்று.

இருவர் வாட்களும் ஞாயிற்றி னிளங்கதிரிற் சுழற் றப்படுந்தோறும் மின்னரி யொளிவீசின. இருவர் புரவிகளும் பின்னும் முன்னும் போவதும் வருவதுமா யிருந்தன; ஒருவரையொருவர் தாக்கினர்; இருவருங் குறிதவறுது வாளையோச்சி யெறிந்தனர்; இருவர் வாளெறியும் அவ்வவர் பகைவர் பரிசைகளிற் பட்ட னவேயன்றிப் பகைஞர் மேனியிற் பட்டில. இன்ன ணம் நெடுநேரம் வாட்போர் நடந்தது. இடையில் மாயவன் புரவி காவதத் தூரத்திற்குமேல் நடந்த இளைப் பினுற் சிறிது தளர்ந்தது. அதுகண்ட மாயவன் தனது பரியை விட்டிழிந்து மதிவாணன்மீது மீட்டும் பாய்ந்தனன். இதற்குள் மதிவாணனும் தான் புரவி மீதிருந்தே போர்புரிதல் நேரிதன்றெனக் கருதிப் பரியினின்றிழித்து நின்றனன். மீட்டுமொரு முறை இருபெரு வீரரும் வாட்போர் பிடித்தனர்.

இன்பவல்லிக்கோ மதிவாணன் குதிரையினின் றிழிந்து போர்புரிதல் அறிவுடைத் தன்றென்ப தெண் ணம். என் செய்வாள்? சிறிதுபொழுது வாளாவிருந் தனள். இதற்கிடையில் மாயவன் வெகுளி மீக்கூர்ந்து மதிவாணனுடைய தலை விலா தாள் கைகளி னெருங்கே இடையீடின்றிப் பன்முறை வாளெறிகண்டனன். அவ் வமயத்தில் அமைந்த சிந்தையனுகிய மதிவாணன் காலப்போக்கின்றித் தனது உடனலத்தாற் செவ்வி தோன்றத் தாவியும் விலகியும் எழும்பியுங் குதித்தும் கைத் தலங்காட்டித் தன்னைப் பாதுகாத்து நின்றனன்.

இவ்வாறு வெகுநேரமாகப் போர் நிகழ்தல் பொறுக்கலாற்றாத இன்பவல்லி யுற்ற மெய்ப்பாடுகட்கோ அளவில்லை. தலையையும், கைகளையும் ஏதோ வலிப்புடையாள்போல் அடிக்கடி சாய்த்தும் அசைத்தும் நின்றனள்; ஏதோ பேசினள்; முகஞ் சுளித்தனள்; யாக்கை குன்றினள்; தன் விருப்பத்திற்கெதிராக வாட்போர் முடியுங்கொலென் றையுற்றனள். இன்னும் என்னெல்லாமோ பாடுகள் பட்டனள். இவ்வாறு துயருழந்து அலம்வரும் இன்பவல்லி மதிவாணன் மிக்க அபாய நிலையிலுள னென்று கருதிப் பேதுற்றுத் தன் ஆருயிர்க் குரிசிலது புரவி மீதிருந்ததோர் குற்றுடைவாள் கைக்கொடு போந்து மாயவன் தாள்களு ளொன்றை நோக்கி விசையுட னெறிந்தனள். உடனே மாயவனும் இடைக் கால் துணிந்து ஓவென்றலறித் தரைமிசை வீழ்ந்தனன்.

வீழ்ந்த மாயவன் 'என்னை இக்கோலங் கண்டவர் யார்கொலோ?' என்று சொல்லி யெழுந்து திருமினன், திகைத்தனன், மீட்டும் வீழ்ந்தனன். 'ஐயகோ! யான் 'எனக்கு இன்னுயிரினு மினியள்' எனக்கருதி மகிழ்ந்திருந்த இன்பவல்லியா எனக்கிடரிழைத்தாள்! நன்று! நன்று!!—அந்தோ! இன்பவல்லீ! நீ என்னை நோக்கி 'மாயவ! யான் உன்னிடத் தன்பிலன்கண்டாய்' என்று கூறியிருப்பையேற் பேதையேன் இத்துணை இதன்கண் தலையிட்டிருக்கமாட்டேன்காண். என்னழிவிற்கு நீயே பெருங்கருவி. நீ யிப்போழ்தத்தில் எனது தாளைத் துணித்ததோரழி வன்று; மற்று இதனுடன் என் நெஞ்சையுந் துணித்தனை; உள்ளமுடைந்தேன்; அழிகின்றேன்—ஐய! மதிவாண! இவ்வாறு யான் காலொடிந்து வீழாதிருப்பினும் நின் வாளிற்கு இரையாயிருப்பேன்கண்டாய். நீ இன்பவல்லியுடன் கூடி மணந்து இன்புற்று வாழ்க. யான் சாகின்றேன். இறைவனே! கடவுளே! என் பெருமானே! கணக்கற்ற தீங்கிழைத்த க்யவனேற்கு முய்வுண்டோ?' என்று கூறி மூர்ச்சை போயினன். உழையிருந்தாரனைவரும்

ஓவென்று கூவி யழுதனர். நேரமாகவாக மக்கள் கூடினர். இடையிற் சுவற் காவாளரும் வழிகாட்டியும் யாண்டோ கரந்தோடிவிட்டனர்.

அதன்மேற் குதிரையேற்றங் கைவந்த இன்பவல்லி மதிவாணனது கலிமாவின் மேற்கொள்ளலும் மதிவாணன் மாயவன் புரவி மேற்கொண்டு இருவருமாகப் பூவணம் போயினர். பின்னர் மாலைப் போழ்தத்து வேறு பரிகள் புனையப் பெற்றுப் போதரலும் அவற்றின் மீதேறி நம்பியும் நங்கையும், பலர் புடைசூழ்ந்து ஓடிவர, மதுரையம்பதிக்குட் புகுந்தனர்.

வினாக்கள்

1. இன்பவல்லி எவ்வாறு கடத்திச் செல்லப்பட்டனள்?

2. மாயவனின் கொடுமைக்கும் இன்பவல்லியின் துயரத்துக்கும் ஆற்றாத இயற்கையின்கண் நிகழ்ந்த அவலச் செயல்கள் யாவை?

3. மதிவாணனுக்கும் மாயவனுக்கும் நடந்த வாட்போரினைப் பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

4. போரின் முடிவும் விளைவும் என்ன?

5. இடஞ் சுட்டுக:

அ. 'என் அழிவிற்கு நீயே பெருங்கருவி.'

இ. 'தீச் செயல் நன்றாமாறு பின்னர்க் காண்பை; ஆதலின் இதனை எண்ணற்பாலை யல்லை'

6. இன்பவல்லி, மாயவன், மதிவாணன்: இவர்களுள் ஒவ்வொருவரைப்பற்றியும் எட்டு வரிகட்கு மேற்படாமல் குணவிசேடம் வரைக.

பயிற்சி

வாட்போரில் மதிவாணன் தோற்றனன் எனக்கொண்டு இக்கதையினை வளர்த்துச் செல்லுக.

---

6. கிறிஸ்துபெருமான் உவமைத் திறம்

பேராசிரியர் ஆ. சத்தியசாட்சி

சொல்லேருழவர்

புலவரைச் சொல்லேருழவர் என்னும் பெயரால் போற்றுகின்றது தமிழகம். தம் தகைமை சான்ற சொற்களையே ஏராகக் கொண்டு மக்களின் மனங்களை உழுது அறப்பயிர் விளைவிக்கும் ஆற்றல் கருதி அவர் சொல்லேருழவ ராயினர். இவ்வகையில் கிறிஸ்து பெருமான் உழவருள் உழவராய் விளங்குகின்றார். 'மறம் வளர்க்கும் களருளத்தை வளம் மலி தண்பணையாக்கி அறம் வளர்க்கும்' அற்புத மொழிகள் நம்பெருமானின் நாநுனியில் முளைந்து நின்றனபோலும்! "சொல்லுக சொல்லிப் பயனுடைய" என்ற சீரிய இலக்கணத்திற்கு இவரை மீறிய இலக்கியம் இல்லை எனலாம். இருட் குழம்பில் மருண்டிருக்கும் உலகிற்கு ஒளி வழங்கும் அருமைத் திருமணிகள் அவர்பாலிருந்து சொரிந்தன. தூய நறுமணத்தினை அள்ளி வீசிய எழின் மலர்கள் அவர்தம் திருவாய்க்கண் மலர்ந்தன. அன்புத் தென்றலில் மிதந்து வந்த அருட்தெய்வத்தின் இதயகீதம் ஆகாயத்தில் அமுத அலைகளைப் படைத்துவிட்டது. அவர்தம் மல்லிகைச் சொல்லில் மாமலை மறைந்து கிடந்தது; அழகுச் சொல்லில் அலைகடல் அடங்கிக் கிடந்தது. எளிமையும் இனிமையும், தூய்மையும் வாய்மையும், அருளும் தெருளும் கடவுட் குமரனின் கன்னிச் சொல்லில் பின்னிக் கிடந்தன.

உவமை முறை

புலனுக்கு எட்டாப் பொருளாய கடவுட் பொருளினைப் புலனுக்கும் புந்திக்கும் எட்டும் வகை செய்வதற்கு, அறிவுக்கு எட்டாத அதீத தத்துவங்களை அறிஞர்க்கும் அல்லாதார்க்கும் எளிய முறையில்

தெருட்டுதற்கு, வீட்டுலகச் சிறப்பினை வீதியில் திரிவார்க்கும் விளக்குதற்குக் கிறிஸ்து மூர்த்தி எடுத்தாண்ட முறை உவமை முறையே யாகும். அன்றன்று நம் கண்முன் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகளையே உவமைகளாகச் சுட்டிக் காட்டி ஒப்பற்ற உண்மைகளை விளக்கி வைத்தார் நம் உவமை யரசர். மலரிலிருந்து கசிகின்ற தேனில் மகரந்தம் கலந்திருப்பதுபோல அவர்தம் சொற்களில் உவமைகள் கலந்திருந்தன. "ஏசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார், உவமைகளினாலே யன்றி, அவர்களோடே பேசவில்லை" என்று சாற்றுகின்றது சத்தியத்தைத் திருமறை.

உவமையும் உருவகமும்

உவமைகள் என்பன ஒப்பிட்டுக் காட்டப்படும் ஒப்பனைகளே ஆம். விளங்காத உண்மைகளை விளக்கிக் காட்ட ஒப்பனைகள் உறுதுணைகளா யமைகின்றன. அவைகள் பேச்சுக்கும் எழுத்துக்கும் அணி செய்தும் திகழ்கின்றன. அணங்குக்கு அணிகலன்களைப்போன்றன சொல்லுக்கு உவமைகள் என்க. அணிகளுட் சிறந்தது உவமையணியே யாகும். கிறிஸ்துபிரான் உமைகளின் அழகு அவற்றின் எளிமையிலேதான் கிடக்கின்றது. இனி, உருவகமும் உவமையின் பிறிதொரு உருவே ஆம். உவமை உவமேயம் ஆயனவற்றுள் வேற்றுமை தோன்றுமல் ஒன்றன் தன்மையினைப் பிறிதொன்றற்கு ஏற்றி அமைப்பதே உருவகம் என்க.

"உவ்மையும் பொருளும் வேற்றுமை யொழிவித்(து)
ஒன்றென மாட்டினஃ(து) உருவகம் ஆகும்,"

என்கின்றது தண்டியலங்காரம். இதனை மனத்துட்கொண்டு ஏசுபிரானுர் எடுத்தாண்ட உவமைகளுள் ஒன்றிரண்டனை நோக்குவாம்.

வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்

அக்காலத்தே யூதர்களுள் சமயக் காப்பாளர்களாக இருந்த பரிசேயர் வேதபாரகர் என்ற கூட்டத்தார்களின்

ஒழுக்கம் நம் தூயவர்க்குத் துயர் விளைத்தது. ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு உள்ளத்தில் கள்ள வொழுக்க முடையவர்களாய் வாழ்ந்தார்கள் அவர்கள். அவர்களை இடித்துரைக்க எண்ணிய இறைமகனுர், "அந்தோ! வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக் கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப் படும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினுலும் சகல அசுத்தத்திஞலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும், மனுஷருக்கு நீதிமான்களென்று புறம்பே காணப்படுகிறீர்கள். உள்ளத்திலோ மாயத்திஞலும் அக்கிரமத்திஞலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்று பொருந்தச் சொல்லிப் புதுமுறை தந்தார்.

தூலமும் துரும்பும்

பிறிதொரு சமயம் 'ஏதிலார் குற்றம்போற் தம் குற்றம்' காண்கிலாதார் கருத்தினைத்தெருட்டும்பொருட்டு நம் சொல்லின் செல்வர் ஒரு பொன்னுரை புகன்றனர். "உன் கண்ணில் பெருந்தூலம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி, நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று சொல்லுவது எப்படி?" என்று வினவிஞர். வித்தகரின் உவமை மத்தகரின் பண்பாட்டைப் படம்பிடித்துக் காட்டி விட்டது. பிறன் குற்றம் துரும்பின் அளவினது! அத்துரும்பை நீக்கத் துணிவான் குற்றம் தூலத்தின் அளவினது! நயந்துரைத்ததோ டல்லாமல் திருந்தா தாரை இங்ஙனம் இடித்துரைத்து நகைக்கு இரையாக் கிப் பிறர்க்கு எச்சரிக்கை நிறுத்தியிருக்கிருர் நம் சொல்லரசர்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

என்கின்றது திருக்குறள்.

கோழியும் குஞ்சுகளும்

இறைவன் தாயன்பு நிறைந்தவன் என்ற உண்மைக்குக் கிறிஸ்துபிரான் அருமை சான்ற ஒப்பனை ஒன்று காட்டினார். பறவைகளுள் கோழி தன் குஞ்சுகளைக் காக்கும் பான்மையினைக் கண்டிலாதார் யார்? தன் குஞ்சுகளைக் கொஞ்சிக் கூப்பிட்டு அவற்றிற்கு இரையைக் காட்டும் பேடையின் அன்பு, நெஞ்சையெலாம் வாரிக் கொள்ளும். கலுழனின் நிழல் தெரிந்தால் போதும்! தன் செல்லக் குழந்தைகளை கதறிக் கூப்பிட்டுத் தன் செட்டைகளின் கீழ் காவல் அளித்துக் காக்கும். வேறு பறவையாலோ பிறவற்றாலோ குஞ்சுகளுக்குக் கேடு நெருங்குகிறது என்று கண்டால் அரவுபோல் சீறி அயலுக்குச் செல்லும். உண்டியும் உறையுளும் காவலும் அருளி மாற்றானை மடக்கி மக்களைக் காக்கும் கடவுட் செயலும் இத்தகைத்ததே, என்பதை எளிய முறையில் எடுத்துக்காட்டினார் ஏசு மூர்த்தி. அன்று அவர் எருசலே நகரை நோக்கிச் சொன்ன பொன்னுரையை இன்று உலகம் தனக்கே பொருத்திப் பார்ப்பதாக. "எருசலேமே, எருசலேமே........... கோழி தன் குஞ்சுகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைத் தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று."

நிற்க. கிறிஸ்தரசின் உவமைகள் பெரும்பாலும் கதை வடிவாகவே அமைந்தன.

காணமற்போன ஆடு

நூறு ஆடுகளை உடையவனாக இருந்தனன் ஒரு மேய்ப்பன். ஒரு நாள் ஓர் ஆடு காணமற்போயிற்று. ஓராடுதானே என ஓய்ந்தானில்லன். உயிரனைய ஆட்டிற்கு உற்றது யாதோ எனத் துடித்தனன். காடுகளெங்கும் கடுகி நடந்தான். மலைகள் மருங்கில் தேடி யலைந்தான். ஆட்டினைக் கண்டான், அணைத்து வந்தான். அயலகத்

தார்க்கும் அறிந்தவர்க்கும் நடந்ததைச் சொல்லி நனி மகிழ் கொண்டான். இதுதான் அவர் சொன்ன கதை. கதையா இது! மிகச் சாதாரண நிகழ்ச்சி. ஆயினும் மாபெரும் உண்மையை மனிதர்க்குச் சொல்லும் பெரிய சின்ன கதை இது! காணாத ஆட்டைத் தேடித்தேடிக் காடும் மலையும் கடந்து சென்றனன் இடையன். அவனைப்போலவே அன்புச் செயலில் ஈடுபட்டான் ஆண்டவன். நல்லன விலக்கி அல்லன செய்து, அதனால் தன்னை விட்டுப் பிரிந்த மனுக்குலத்தையே நாடி வந்தனன் நாயகன். தன்னுடல் பேணாது, முள்ளும் கல்லும் வருத்துவதுந் தோன்றாது தன் ஆட்டைக் கண்டு எட்டிப் பிடித்துத் தட்டிக்கொடுத்துக் கட்டி யெடுத்து மனையகம் போந்து மகிழ்ச்சி கொண்டனன் இடைக்குல மகன். "நானே நல்ல மேய்ப்பன்" என்றார் கிறிஸ்து. இந்த மேய்ப்பன் செய்தது என்ன? 'கைய யர்ந்து வாய் புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து வெய்ய சிலுவை சுமந்தலசி மெய் வருந்தித் துய்ய திருவடிகள் சோர்ந்து நடை தள்ளாடிக்' கொலைமலைக்கு நடந்து சென்று, தன்னரிய திருமேனி பன்னரிய பாடுபட, இருப்புமுளை உடலைக் கிழித்து உருவ வதைப் புண்டு, உயிரையும் கொடுத்து நந்தமைத் தூக்கி அணைத்து வீடு செலுத்தும் பீடு கொடுத்துக் காத்த கருணை வள்ளலின் செயலினை என்னென்பது! ஓடிய நம்மைத் தேடிய பெம்மானின் அன்பே அன்பு!

கெட்டுமீண்ட மைந்தன்

உலகில் சொல்லப்பட்ட கதைகளுள் உருக்கமான கதை என இதனைச் சொல்லுவர். செல்வன் ஒரு வனுக்கு மைந்தர் இருவர் இருந்தனர். அவ்விருவருள் இளையவனைப்பற்றிய செய்தியினைமட்டும் இங்கு விரிவாகக் காண்பாம். அவ்விளவல் தீயன செய்து தகவிலனாகித் தந்தைபால் சென்று, "எனக்குச் சேரவேண்டிய செல்வத்தைப் பிரித்துத் தா" என இரைந்து கேட்டான். பிள்ளை மனம் கல்லெனிலும் பெற்ற மனம் பரிவுதானே

காட்டும்! நயமாகவும் பயமாகவும் சொன்ன நல்லுரைக ளெல்லாம் கமரிற் கவிழ்த்த பாலாயின. சொத்து பிரித் தாயிற்று. தந்தையின் கண்முன் இருக்க விரும்பாத சிறுவன் வளநிதிக் குவியலோடு சேய்மைக்கண் அமைந்த ஒரு தேசம் புகுந்து வாசம் செய்வானுயினன். அந்தோ! பொருந்தாச் சிறுவன் திருந்தா வாழ்வுக்கு இலக்காயினன். சிற்றினம் அஞ்சும் பெருமைதானின் றிச் சிறுமையைச் சுற்றமாக்கி, 'வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கி,' பிறன் மனை விழைந்து பேதுற்று மயங்கி,

'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு'

என்ற பொய்யாமொழிக்கு இலக்கிய மாயினன். செல்வம் சிறகடித்துச் சென்றுவிட்டது. நாட்டில் நுழைந்த பஞ்சம் இவனை வஞ்சம் தீர்த்துக்கொண்டது. மானம் இவனை விட்டுச் சென்றது; ஈனம் அணைத்துக்கொண் டது. 'அற்ற குளத்தின் அறு நீர்ப்பறவைபோல்' உற்றவரெல்லாம் ஓடி மறைந்தனர். உலைந்த சிறுவன் ஓட்டாண்டியாகி நாட்டில் திரிந்தான். இறுதியில் பன்றிகள் மேய்த்துப் பசிப்பிணி போக்க வாய்ப்பு கிடைத்தது. அந்தோ, கஞ்சிக்குப் பன்றி மேய்க்கும் பான்மைய ஞயினன். கட்டழகன்! அப்பன்றிகள் விட்ட மிச்சிலையும் இச்சிக்கும் கீழ்மகனுயினன்!

மலைமுகட்டில் தென்றலை நுகர்ந்தவன் நிலைதிரிந்து கீழ்மைக்குங் கீழாய சேற்றில் இறங்கி, நாற்றமடித்த போதுதான் "புத்தி தெளிந்தனன்." தந்தையை எண்ணி ஞன். தந்தைபால் செல்லத் துணிவு கொண்டான். இனித் தந்தைக்கு மைந்தனுக அல்ல, அவர் பணியாள ருள் ஒருவனுகவேனும் அமர்வேன் என்று சொல்லி எழுந்து நடந்தான்.

இப்பால், புத்திரசோகத்தால் நையலுற்ற தகப்பன் மைந்தன் சென்ற வழிமேல் விழி வைத்து, 'திரும் பானே என் செல்வன்' என்று ஏங்கிக் கிடந்தவன்,

ஒருநாள் சேய்மைக்கண் தன் செல்வனின் சாயல் தெரிவதைக் கூர்ந்து நோக்கினான். மாடியிலிருந்து இறங்கியோடி, "என் செல்வத் தோன்றல்! என் அன்புடைத் தோன்றல்", எனக் கதறி யணைத்து உச்சி மோந்து உள்ளங் குளிர்ந்து கண்ணீர் வார முத்தங்க ளிட்டான். "தந்தையே, தெய்வத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனி உம் மகன் என்ற சொல்லுக்கு உரியவனல்லன். நான் உம் முடைய வேலைக்காரருள் ஒருவன்," என்று அழுது சொன்னான் கெட்டு மீண்டவன். திரும்பிய மகனை விரும்பிய தந்தை அவனைப் பன்னீராட்டிப் பட்டுடை உடுத்து, பொன்னும் மணியும் பொருந்தப் புனைந்து, "இறந்த புதல்வன் மீண்டும் உயிர்பெற்றான்; காணாது போனவன் காணப்பட்டான்; நாட்டாரே வருக", வென ஒருமுகமாகத் திருமுகம் அனுப்பிப் பெருவிருந்து செய்தான்.

இவ்வற்புத உவமைக் கதையை எளிய சொல்லால் சுருங்கச் சொன்னார் ஏசுபிரானார். உலைந்த சிறுவனின் உண்மை நிலையினைக் காட்ட இங்கே சிறிது விரித்துக் கூறப்பட்டது.

அச்சிறுவனையே இவ்வுலகினராகக் கொள்ளுங் கள்; தந்தையைக் கடவுளாகக் கொள்ளுங்கள். இப் போது பொருத்திப் பாருங்கள்! ஆண்டவனை விடுத்து, அறநெறி விலக்கி மறநெறி பயின்று, கொலையும் பொய்யும் களவும் கள்ளும் சூதும் பிறவும் சுற்றமாய்க் கொண்டு மனுக்குலம் விழுந்தது. பன்றியின் மிச்சிலை நச்சுகின்ற இழிதகைமைக்கு ஒப்ப உலகம் இன்று பாவத்தை இச்சிக்கின்றது. 'புத்தி தெளிந்து' தந்தைபால் தன் முகத்தைத் திருப்புகின்றவன் எவனோ அவனை இறைவர் கட்டி யணைத்துக் கறையறக் கழுவித் தூய்மை யும் அன்பும் அருளும் பிறவுமாகிய கடவுட் குணங் களால் அலங்கரிக்கிறார்.

இத்தகைய உவமைகளும் உவமைக் கதைகளும் உருவகங்களும் பல ஏசு பிரானால் சொல்லப்பட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்து; முத்துக் குவியல். 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்',, 'உழுவார் உலகத் தார்க்கு ஆணி' என்று வயலேருழவர்க்குச் சொல்லப் பட்ட சீரிய மொழிகளை நம் சொல்லேருழவர்க்கும் பொருத்திப் பார்க்கலாமே!

வினாக்கள்

1. சொல்லேருழவர் என்னும் பெயர் கிறிஸ்துவுக்குப் பொருந்துமா றெங்ஙனம்?

2. கிறிஸ்துவானவர் உவமை முறையினைக் கையாண்டமைக்குக் காரண மென்னை?

3. 'உருவகம்' என்பது என்ன?

4. யூதர் சமயத் தலைவர்களின் மாயத்தை ஏசுபெருமான் எவ்வாறு இகழ்ந்தார்?

5. 'உன் கண்ணில் பெருந்துலம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி, நான் உன் கண்ணில் இருக்கும் துரும்பை எடுத்துப் போட்டும் என்று சொல்லுவது எப்படி'—இக்கருத்தினைத் தெளிவாக்குக.

6. கோழியும் குஞ்சுகளும் எதற்கு உவமை காட்டப்பட்டன?

7. 'நானே நல்ல மேய்ப்பன்' எனக் கிறிஸ்து சொன்ன தன் கருத்தினைப் புலப்படுத்துக.

8. 'கெட்டுமீண்ட மைந்த'னின் கதையைப் பதினைந்து வரிகளில் எழுதி முடிக்க.

பயிற்சி

'அன்பு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

---

7. ஆசிரியர் இரஸ்கின் கற்பித்த ஓர் அறிவுரை

ஜான் இரஸ்கின் வி. பி. சுப்பிரமணிய முதலியார்.

நமது தமிழ் மொழியில் பாட்டுக்களடங்கிய நூல்கள் மிகுந்தும் உரைநடை நூல்கள் மிகக்குறைந்துமிருக்கின்றன. பண்டை நாளில் சிறந்த உரை நடையெழுதியவர்கள் நச்சிஞர்க்கினியர், பரிமேலழகர் முதலிய பேர் பெற்ற உரையாசிரியர்களே யாவர். அவர்களுக்கு நெடுங்காலத்துக்குப்பின் திருவாவடுதுறை ஆதீனத்துப் புலவர் பெருமானுன சிவஞான யோகிகள் பலசிறந்த உரைநடை நூல்களெழுதினர். இக்காலத்தில் ஆங்கிலேய மொழியை நம்மவர்கள் பயின்றதனுல் உரைநடை நூல்களின் பயனைச் சிறப்பாகத் தெரிந்து பல உரைநடை நூல்க ளெழுதிவருகின்றனர். ஆனுல், பண்டைக்கால உரைநடை நூல்களோடு ஒரு சிறிது ஒப்பிடத்தக்க இக்காலத்து உரைநடை நூல்கள் மிகச் சிலவே யாகும். ஆங்கிலத்திலோ—இவ்வாறன்றி, முற்காலத்து நூல்களிலும் எவ்வகையிலும் மிகச்சிறந்த உரைநடை நூல்கள் இக்காலத்தில் அளவிலாது பெருகி வருகின்றன. ஆகவே, சில காலத்துக்கு முன் அடிசன்[1] மேக்காலே[2] என்பார் சிலருடைய பேர்களை எடுத்துச் சொல்லி உரைநடை நூலாசிரியர்களுட் சிறந்தவர்களின் அட்டவணையை எளிதாக முடித்து விடுவதுபோல, இப்போதைய ஆங்கில உரைநடை நூலாசிரியர்களுட் சிறந்தவர்கள் இன்னின்னுரென்று கணக்கெடுப்ப தருமை. இப்படிச் சிறந்த உரைநடை நூற்புலவர் மிகுந்த இக்காலத்தில் அவருள் தலைமையானவருள் முதன்மையாளரெனப் பேர் பெற்றவர் ஜான் இரஸ்கின்[3] என்னுந் துரைமகனுர் ஆவர்.

இவ்வுரையாடல் திருநெல்வேலி, "The Educational Society" என்ற அமைப்பின் செயலாளரிடமிருந்து இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

[1] Addison. [2] Macaulay. [3] John Ruskin.

அவர் இயற்றியிருக்கிற நூல்கள் ஆங்கிலத்திற் சிறந்த புலமை நிரம்பியவர்களே அரிதாக வுணருந்தன்மை யுடையவைகளாகவும் மிகச்சிறந்த பொருளழகு வாய்ந் தனவாகவு மிருக்கின்றன. அவருடைய நூல்களுள் அணு அறநூல்[1] என்பது ஒன்று. இஃது அவருடைய மற்ற நூல்கள் போலன்றி யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும்படி வினுவிடையாக எழுதப்பட்டது. இதில் அவர் ஒரு பெண் கல்விச் சாலையிலே[2] தமக்கும் அக் கல்விச் சாலைப் பெண்களுக்கும் நிகழ்ந்த உரையாடலைப் புத்தக வடிவில் எழுதுவதற் கின்றியமையாத சிற்சில வேறுபாடுகளுடன் எழுதியிருக்கின்றார். அதில் பின்வரு வது முதன்மையானதென்று நூலாசிரியரே கூறியிருக் கின்றார். அதில் அவர் குறித்தவர்களெல்லாம் "நாம் எல்லோரும் பாவிகள், நாம் எப்பொழுதுங் கெட்ட நெஞ்சம் உடையோம்" என்று கொண்டிருக்கும் கொள்கை தப்பென்று மெய்ப்பித்து அக்கொள்கையை விட்டுவிடுவதனு லுண்டாகின்ற பழக்க அறிவிற் கை கூடிய நன்மைகள் இப்படிப்பட்டவைகளென விளக்கு கின்றார்.

சொற்பொழிவாளர்: (ஆசிரியர் இரஸ்கின்): உன் னுடைய மனம் களங்கமற்றதாகவும் உண்மையுள்ளதாக வும் இருந்ததென்று சொல்ல அச்சுகின்றாய் அல்லவா?

லூஸில்லா[3]: [ஒரு பெண்] ஆம் ஐயா.

சொற்பொழிவாளர்: நீ அப்படிச் சொல்வதற்குக் காரணம் உன் நெஞ்சு கெட்டது என்றும், அது இடை விடாமல் கெட்டதாகவே இருக்கிற தென்றும் உனக்குக் கற்பிக்கப்பட்டிருப்பதுதான். மக்கள் தங்கள் நெஞ்சம் கெட்டதென்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுகின்றார் கள். ஆயினும், அவர்கள் சொல்வதை அவர்களே நம்பவில்லை யென்று எனக்கு எப்படியோ ஒரு வகையா கத் தோன்றுகின்றது. உண்மையாகவே உன்னெஞ்சு கெட்ட தென்று நீ நம்புகிறாயா?

[1] The Ethics of the Dust. [2] Girls' School. [3] Lucilla

லூஸில்லா : ஐயா, நான் நம்பவில்லை; ஆனாலும் நம்பவேண்டு மென்பது என் வேண்டுகோள்

சொற்பொழிவாளர் : நீ முழுதுங் கெட்ட நெஞ்சுடையவ ளென்றே நம்புகிறாயா?

லூஸில்லா : [கெட்ட நெஞ்சு என்பதற்குப் பதிலாக, முழுதுங் கெட்ட நெஞ்சு என்று சொன்னதைக் கேட்டுச் சிறிது கலக்கமுற்றும் தன் பழமையான சமயப்பற்றைக் கைவிடாமல் மறுமொழி கூறியதாவது:] ஆம், ஐயா.

சொற்பொழிவாளர் : [உரையாடலில் உன்னிப்பின்றிப் பராமுகமாயிருந்த வேறொரு பெண்ணைப் பார்த்து] பிளாரி,[1] நீ அலுத்துவிட்டாய். அலுத்த பின் நீ யிங்கிருக்க எனக்கு விருப்ப மில்லை. நாம் உரையாடும்போது நீ பூனைக்குட்டியோடு விளையாடக் கூடாதென்பது உனக்குத் தெரியுமே.

பிளாரி : நான் அலுக்க வில்லை அதனோடு விளையாடவு மில்லை. அதனைத் தூங்கச் செய்கின்றேன். அது விரைவில் என் மடியில் தூங்கிவிடும்.

சொற்பொழிவாளர் : நில். நான் வரிசையான மயிர்க்கூட்டம் போலிருக்கிற சில மூலப்பொருள்களை[2] உங்களுக்குக் காட்டுகிறேனென்று சொல்லி யிருந்தேனல்லவா? அஃது இப்போது இந்தப் பூனையைப் பார்க்கவே நினைவுக்கு வருகின்றது. இந்தப் பூனை வால் மயிரிலொன்று கொடு.

பிளாரி : [தனக்கு அருமையான பூனையின் மயிரைக் கேட்டதை மனம் பொறாதவளாய்க் களங்கமற்ற முகக் குறியுடன் சொன்னதாவது] பூனையின் மயிரா வேண்டும்!

சொற்பொழிவாளர் : ஆம், ஒரு செம்மயிர் வேண்டும், லூஸில்லா, அந்தப் பூனை பிளாரியின் கைக்கீழ்

[1] Florrie. [2] Minerals.

படுத்திருக்கிறபோது அதன் வால் நுனியிலிருந்து ஒரு மயிரைப் பறித்துக்கொடு.

ஹூஸில்லா : ஐயா! அஃது அதற்கு வருத்தஞ் செய்யுமே.

சொற்பொழிவாளர் : அதைப்பற்றி நீ கருத வேண்டா. அந்தப் பூனையைப் பிளாரி பிடித்துக் கொண்டிருக்கும்போது அஃது உன்னைப் புறண்ட மாட்டாது.

ஹூஸில்லா : அஃது என்னைப் புறண்டாவிட்டாலும் பிளாரியைப் புறண்டி அவளுக்குத் துன்பமுண்டு பண்ணுமே? தங்களுக்குச் செம்மயிர்தானே தேவை? என் தலைமயிர் உதவாதோ?

சொற்பொழிவாளர் : மெய்யாகவே பூனை மயிரைப் பறிப்பதைப் பார்க்கிலும் உன் தலைமயிரைப் பிடுங்க உனக்கு விருப்பந்தானா?

ஹூஸில்லா : என் தலைமயிர் உதவுமானால் ஐயமில்லாமல் விருப்பந்தான்.

சொற்பொழிவாளர் : நீ அப்படிச் சொல்வது ஒழுங்கன்று.

ஹூஸில்லா : ஒழுங்கற்றதா?

சொற்பொழிவாளர் : ஆம், நீ முன் சொல்லியபடி உன் மனங்கெட்டதாயிருந்தால் உன் மயிர் ஒன்றை இழப்பதைப் பார்க்கிலும் பூனைமயிர் முழுதும் வாங்கி விடுவா யன்றோ?

ஹூஸில்லா : ஓ! நான் அந்தக் கருத்தில் கெட்ட நெஞ்சென்று சொல்லவில்லையே.

சொற்பொழிவாளர் : உன் நெஞ்சிலிருக்கிற உண்மையைச் சொல்லுகிறேன் கேள்; அந்தப் பூனை வாலின் கண் ஒரு ஏனத்தைக் கட்டி அதனை ஓடச்செய்து அதன் பின்னே ஓடி வேட்டையாட நீ விரும்புகிறாய்?

ஹூஸில்லா : ஐயா, அப்படி நான். ஒருபோதுஞ் செய்யேன்.

சொற்பொழிவாளர்: நீ சொல்வது உண்மை யன்று. அஃது உண்மையாயிருத்தல் முடியாது.

லூஸில்லா: உண்மை யன்று!

சொற்பொழிவாளர்: உறுதியாக உண்மை யன்று. நீ முன்சொன்னபடி உண்மை யற்ற நெஞ்சிலிருந்து எப்படி உண்மை வெளிப்படக்கூடும்?

லூஸில்லா: ஐயா, நான் அவ்வாறெண்ணிப் பார்த்து என்னெஞ்சு பொய் நெஞ்சென்று சொல்லவில்லையே.

சொற்பொழிவாளர்: உன்னெஞ்சு கெட்டதாகவும் உண்மையற்றதாகவும் இருப்பதைப்பற்றி நீ கவலைப்படுகின்றாயா?

லூஸில்லா: ஆம். மெய்யாகவே கவலைப் படுகின்றேன்.

சொற்பொழிவாளர்: எங்கே கவலைப்படுகின்றாய்?

லூஸில்லா: எங்கேயா?

சொற்பொழிவாளர்: ஆம்; எங்கே கவலைப்படுகின்றாயென்று கேட்டேன். காலிலே கவலைப்படுகின்றாயா?

லூஸில்லா: [சிரித்துக்கொண்டு] இல்லை.

சொற்பொழிவாளர்: ஆனால், கையில் கவலைப்படுகின்றாயா?

லூஸில்லா: இல்லையையா, நெஞ்சிற் கவலையுறுகின்றேன்.

சொற்பொழிவாளர்: உன்னெஞ்சு ஒழுங்கற்றதாயிருப்பதாக உன்னெஞ்சு கவலைப்படுகின்றது. அப்படியானால் உனக்கு இரண்டு நெஞ்சுகள் இருக்க வேண்டும். அவற்றுள் ஒன்று குறும்பு மிக்கதாயிருக்கின்றது. அதற்காக மற்றொன்று வருத்தப்படுகின்றது. அல்லது உன்னெஞ்சு ஒன்றாயிருந்தால் ஒரு பக்கத்துக்காக மற்றொரு பக்கம் கவலையடைகின்றது.

லூஸில்லா : தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. தங்கள் கேள்விகளை வேறுயாரிடத்திலாவது கேளுங்கள்.

சொற்பொழிவாளர் : மறுமொழி கூறத்தக்க வேறு பெண்களிருந்தால் அவர்களிடத்திலேயே நான் கேட்டிருப்பேனே. உனக்காக உன் உணர்ச்சிகளை விளக்கிச் சொல்லட்டுமா?

லூஸில்லா : ஆ, அது மிகவும் நல்லது, அன்பு கூர்ந்து தாங்கள் அப்படியே செய்யுங்கள்.

சொற்பொழிவாளர் : நான் உணர்ச்சிகளை[1] விளக்குவதாகச் சொன்னேன்; உன் நம்பிக்கைகளை[2] விளக்குவதாகச் சொல்லவில்லை யென்பதை நீ நினைவில் வைத்துக்கொள். "நமக்கிருக்கிற நன்மை உள்ளீடல்லாத வெளிப்பகட்டான தன்மையே; அது பிணம் அடங்கிய கல்லறை போல வெளியே தூய்மையாகத் தோன்றி, உள்ளே தூய்மையற்று அழுக்கு நிறைந்திருக்கின்றது, அருமையானதும் நமக்குப் புலப்படாததுமான குற்றமுமிருக்கின்றது. அதனைக் கடவுளே அறியவல்லவர்" என்று நீயும் உன்போலக் கற்பிக்கப்பட்டவர்களும் நினைக்கின்றீர்கள். (இதைக் கேட்ட பெண்களெல்லாஞ் சரியென்று தலையசைக்க விரிவுரையாளர் திரும்பவும் பேசுவாராயினர்.)

சொற்பொழிவாளர் : இப்போது சொல்லியபடி உயிர்மட்டும் அன்று, உயிர்க்கு[3] அழகின்மையும் அழுக்குண்மையும் உள்ள உட்பக்கமும், அழகும் தூய்மையும் உள்ள வெளிப்பக்கமு மிருப்பதுபோல உடலுக்கும் அத்தன்மையான இருதன்மையும் இருக்கின்றன. அழகிய முகத்துக்குங் கூந்தலுக்கும் உள்ளேயுள்ள மண்டையோடு அழகற்றதென்று சொல்லவும் வேண்டுமோ?

"நலமாக விருக்கும்போதும் உடம்பின் உள்ளேயுள்ள உறுப்புக்களைப் பார்ப்பது இனிமையாயிராததி

[1] Feelings. [2] Beliefs. [3] Soul.

ஞல், அவ்வுறுப்புக்கள் நோய்ப்பட்டிருக்கும்போது எவர்தாம் அவைகளைப் பார்க்க விரும்புவார்கள்? அவை கள் நோயுற்ருல் நலப்படுத்த முயல்வது இயற்கை. அவ்வாறு முயன்று வேண்டும் பரிகாரஞ் செய்தபின் அவைகளைப்பற்றி நினைத்துக்கொண்டிராமல் மறக்கக் கூடுமாஞல் எவர்தாம் மறக்க விரும்புவார்கள்? நினைக்க நினைக்க மனத்துன்பமே யன்றிக் கிடைக்கும் பயன் யாது? ஆயினும், நோய் வந்தால் அதை மறைக்கவாவது நம்பாதிருக்கவாவது வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. வந்த நோய்க்கு வேண்டும் பரிகாரம் செய்து விட்டுப் பின்பு அதைப்பற்றி நினைத்துப் பாராட்டா திருப்பது நலம்.

"இப்போது உடல்நோய் சம்பந்தமாகக் கூறிய நன்மதியே உயிர் நோய்க்கும் உரியது ஆகும். உன் னுள்ளே தவறு இருந்தால் அஃது இன்னதென்று தெளிவாகத் தீர்மானிக்கவேண்டும். பின்பு, அறிந்த மட்டில் அதைச் சீர்திருத்தக்கூடிய சூழ்ச்சி ஏதாவதிருந் தால் அச்சூழ்ச்சியைப் பயன்படுத்த வேண்டும். உன் னைப்பற்றி நீ ஆழ்ந்து ஆராயும்போது நீ 'பாவி' என்று ஒருகாலும் கூறிக்கொள்ளாதே. அதுமிக எளிதாகவும் இகழ்ச்சியாகவும் முற்றும் பயனற்றதாகவுமிருக்கின்றது. உனக்கு அதில் படிப்படியாக விருப்பமிருந்து அதைப் பற்றி பெருமை பாராட்டுபவளும் ஆகலாம். ஆகையால் (பாவி என்று பொதுவாகச் சொல்வதைவிட்டு) உன் னைப் பொய் சொல்பவள், அச்சமுடைய நெஞ்சினள், சோம்பேறி என்று சொல்லும் அத்தீய இயல்புகள் உன் னிடத்தில் உண்மையாகக் காணப்பட்டால், அவ்வாறு நீ சொல்லிக்கொள். எந்தத் தீய இயல்பு உன்னிடத்தில் திட்டமாக இருப்பதாகக் கண்டுபிடித்து அதற்காக உன் மேல் முறையாகக் குற்றஞ் சுமத்திக்கொண்டாயோ, அத்தீய இயல்பு உன்னை விட்டகலும்படி தக்க முயற் சியை யுறுதியாகச் செய். இவ்வாறு ஒரு குற்றத்தை வரையறை செய்து அதை நீக்க நீ முழு மனதோடு சுருசுருப்பாக முயல்வாயாஞல், இன்னதென்று திட்ட

மாகத் தெரியாத ஏதோ ஒரு குற்றமிருப்பதாக நினைத்துப் 'பாவி பாவி' என்று வருந்திப் புலம்புதலினின்றும் நீங்கிவிடுவாய். குற்றங்களை வேரோடு பிடுங்கிக் களைந்துவிடுவது எளிது. நல்லொழுக்க மிகுதியால் அவைகளை அடக்கிவிடுவது அவ்வளவு எளிதன்று. உன் குற்றங்களைப்பற்றி நினையாதே. பிறர் குற்றங்களை கனவிலும் எண்ணாதே. நீ சந்திக்கும் ஒவ்வொருவரிடத்தும் எத்தகைய சிறந்த குணமிருக்கிறதென்று தெரிந்து அக்குணத்தை நன்கு மதித்து அதைப்பற்றி எண்ணிப் பார்த்து மகிழ்ந்து அதை நீயும் உடையவ னாக முயல்வாயாக. அவ்வாறு செய்துவந்தால் நாளாவட்டத்தில் உன் குற்றங்கள் பழுத்த இலைகள் இயல்பாகவே உதிர்தல் போல உதிர்ந்தொழிந்துவிடும். நீ உன் சென்ற வாழ்நாட்களைப் பின்னோக்காகப் பார்க்குங்கால், அவைகள் பனைமரம்போலக் குற்றங்களாகிய கரடுமுரடுடையன வாயிருந்தாலும், அவைகள் இப்போது நல்லொழுக்கத்தில் விருத்தியாகி நற்குண நற்செய்கைகளாகிய பயனுடையனவாயிருந்தால், அவ்வாழ்நாட்கள் கரடுமுரடாயிருந்ததைப்பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. உன்னிடத்தில் மகிழ்வடையக்கூடிய சிறப்புக்களில்லாவிட்டாலும் அவைகள் மற்றவர்களிடத்தில் இருப்பதைக் கண்டு களிப்படைவாயாக,"

என்று இவ்வாறு இரஸ்கின் ஆசிரியர் தங்களை எப்போதும் "பாவிகள், கெட்ட நெஞ்சுடையவர்கள்" என்று சொல்லிக்கொள்பவர்கள் தாங்கள் அவ்வாறிருப்பதாகத் தங்கள் குருக்கண்மார் கற்பித்ததை நம்புகின்றார்களே யன்றி உள்ளபடி உணர வில்லை யென்பதைத் திறமை மிக்க உரையாடல் முகமாக விளக்கிக் காட்டி, மக்கள் தங்களிடத்தில் இல்லாத குற்றங்கள் இருப்பதாக நினைத்து உண்மையாக இருக்கிற குற்றங்கள் இன்னின்னவையென்று கண்டு, அவைகளை நீக்க முயலாது, அறிவீனமாகச் சோம்பியிருப்பது கூடாதென்று வற்புறுத்திக் கூறி, எவரும் தங்களிடத்துள்ள தீய குணங்கள் யாவற்றையும் வேரறக்களைந்து நற்குணங்

களெல்லாந் தழைத்தோங்கி வளரச் செய்து நற்பயன் பெறுவதற்கு ஏற்ற வழிகள் இவையென்று மேற்கூறிய பழக்க அறிவிற் கைகூடிய நல்லறிவு கற்பித்திருக்கின் றார்.

ஆங்கிலேய பேரறிஞருட் சிறந்த ஒருவர் தமது நீதி நூலிற் சிறந்ததாகத் தாமே சிறப்பாகக் கூறியிருக் கிற இப்பகுதியை எவரும் நுனித்தறிந்துகொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

வினாக்கள்

1. *தமிழில் உரைநடை வளர்ச்சியைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.*

2. *'அறு அறநூல்' என்பதனைப் பற்றிக் குறிப்பு வரைக.*

3. *ஆசிரியர் தம் உரையாடலுள் பூனையைக் கொண்டுவந்த தேன்?*

4. *உடல் நோயை உயிர் நோய்க்கு இரஸ்கின் ஒப்பனை செய்து பேசு வதை நும் சொந்த சொற்களில் எழுதுக.*

5. *பழுத்த இலைகள் இயல்பாகவே உதிர்தல் எதற்கு உவமை காட்டப் பட்டதென விளக்குக.*

6. *இவ்வுரையாடல் வாயிலாக ஆசிரியர் இரஸ்கின் சொல்ல வந்த கருத்து யாது?*

பயிற்சி

1. *ஆசிரியர் இரஸ்கினை இப்போது நீ சந்திக்கின்றாய் என வைத்துக் கொள். அவரிடம் இவ்வுரையாடலை யொட்டி என்னென்ன வினவுவாய்?*

2. *'அருமையானதும் நமக்குப் புலப்படாததுமான குற்றமுமிருக் கின்றது. அதனைக் கடவுளே அறியவல்லவர்' என்று நீயும் உன்போலக் கற்பிக்கப்பட்டவர்களும் நினைக்கின்றீர்கள்.*

உன் குற்றங்களைப்பற்றி நினையாதே. பிறர் குற்றங்களைக் கனவிலும் நினையாதே.—இவ்வாறு ஆசிரியர் கூறும் கருத்துகளை நீ ஏற்கின்றாயா? விடு கின்றாயா? விளக்கம் தா.

3. *நாகரிகம், புத்தகக் கல்வி, தொழிற் கல்வி – இவற்றுள் ஏதேனும் ஒன்றனைப் பற்றி ஓர் உரையாடல் எழுது.*

---

8. தென்னிந்தியாவின் பழமைக் கான சான்றுகள்*

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள்,
எம்.ஏ., எல்.டி.

நிலநூல்களை[1] மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்குக் கூடச் செடி கொடி வகைகளிலும், உயிர்வகைகளிலும் செழித்து, மனித நாகரிகப் பழமை வகையிலும் மிகச் சிறந்து விளங்குவது நடுக்கோட்டுப்பகுதியே[2] என்பது விளங்கும். இதுவே உயிர்வகைகள் பெருகுதற்கேற்ற தட்பவெப்ப நிலைகளைச் சிறப்புவகையிற் பெற்றுள்ளது. இப்பகுதிக்கு வடக்கிலும் தெற்கிலும் செல்லச்செல்ல உயிர் வளர்ச்சிக்குப் பலவகைச் செயற்கைத் துணைகள் வேண்டியிருப்பது தெரியவரும். உயிர்த்திரளின் வகை மிகுதிக்கும், செழித்த வளர்ச்சிக்கும், அழகமைப்பிற்கும், எண்ணிக்கைப் பெருக்கிற்கும் நடுக்கோட்டுப் பகுதியே தலைசிறந்து நிற்கின்றது.

ஸ்விஸ்நாட்டு[3] அறிஞர் ஒருவர் நினைவூட்டுகிற படி, உலகில் மிக வடக்கில் உள்ள நாடுகளில் மரங்கள் ஐந்தடி உயரந்தானும் வளர்வது அரிது. துருவங்க ளண்டைப் பாசிகள்கூட மிக அருமையாகவே காணப் படுகின்றன. ஆனால் நம் தென் இந்தியா போன்ற நடுக் கோட்டுப்பகுதியிலோ நூறு, நூற்றிருபது அடி உயர முள்ள மூங்கில்கூடப் "புல்" எனப்படுகிறது. "புறக்கா ழனவே புல்லென மொழிப" என்னும் தொல்காப்பிய உரை காண்க. மற்றும் ஆலமரம் நமக்கு ஒரு மரமே; குளிர்ந்த வடநாட்டினர் அஃது ஒரு காடு எனக் கணிப்ப ராம்.

---

*இஃது ஆசிரியவர்களின் 'குமரிக் கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது. உரியோர் இசைவு பெற்றது. 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக' வெளியீடு.

[1] Geography. [2] Equatorial Regions. [3] Switzerland.

எனவே, உயிர்வகைகளின் பிறப்பிடம் தென் பகுதியாயிருப்பதே பொருத்த முடையது. நடு ஆசியா, தென் உருசியா, வடதுருவம் இவை ஒரே காலத்து உறைவிடங்களா யிருந்திருத்தல் கூடுமேயன்றி முத லிடங்களாக இருந்திருக்க முடியா.

மேலும் உலகின் தட்பவெப்ப நிலைகளைப் பார்த் தாலும் மனிதர் தோற்றம் முதலில் ஏற்பட்டது தென் இந்தியாவிலேயோ அல்லது அதன் அருகிலேயோ தான் என்பது போதரும்.

நிலநூல் கூறுகின்றபடி இம்மண்ணுலகம் ஞாயி றோடு ஞாயிறாய் அதன் பாரிய ஒளிப்பிழம்பின் ஒரு பகுதியாய் இருந்தது. ஞாயிறு தன்னைத்தானே சுற்றும் விரைவினால் அதனினின்றும் சிதறி வீழ்ந்த திவலை களே கோள்களும் துணைக்கோள்களும் ஆகும். நமது மண் உலகமாகிய கோளும் அத்தகைய ஒரு பிழம்புத் திவலையே யாம்.

முதலில் இதுவும் ஞாயிற்றைப்போன்ற ஆவிப் பிழம்பாகவே இருந்து படிப்படியாகக் கொதித்துருகி நிற்கும் குழம்பாகவும், அதன்பின் ஞாயிற்றைச் சுற்றும் விரைவினாலும், தன்னைத்தானே சுற்றும் விரைவினா லும் மேன்மேலுங் குளிர்ந்து திண்மையான மேல் தோட்டினை உடையதாகவும் மாறிவந்தது.

இங்ஙனம் மாறுவதில் நாம் உற்றுநோக்கத்தக்க உண்மை ஒன்றுண்டு. ஒரு பம்பரம் சுழலும்பொழுது அதில் அசையாத பகுதிகள் நடு அச்சு பம்பரத்தைத் துளைக்கும் இடமான உச்சியும் அடிப்பகுதியுமே யாகும். பம்பரத்தின் நடுவட்டமே மிக விரைவாகச் சுழலும். இதுபோலவே உலகிலும் வட தென் துருவப் பகுதிகள் பெரும்பாலும் அசையாமல் தம்மைத்தாமே சுற்றும். நடுக்கோட்டுப் பகுதியே மிக விரைவாகச் சுழலும் இடமாம்.

இக்காரணத்தால் மேல்தோடு குளிரும்போது பிற பகுதிகளைவிட இந்நடுக்கோட்டுப் பகுதியே முன்கூட்டிக்

குளிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். கொதிக்கின்ற பிழம்பில் உயிர்வகைகள் இருக்க முடியாதல்லவா? எனவே, முதன்முதல் குளிர்ந்து நேரிய தட்பவெப்ப நிலைகளை உடைய இப்பகுதியிலேயே உயிர் வாழ்க்கை தொடங்கி இருத்தல் வேண்டும் என்று உய்த்துணர்வதில் தவறென்ன?

இனித் தென் இந்திய மண் இயல்புபற்றி [1]ஞால நூலார் கூறுவதைப் பார்ப்போம். இவர்களது ஆராய்ச்சி யின்படி, தென் இந்தியா இலங்கை இவை பெரும் பாலும் கருங்கற் பாங்காகவே இருக்கின்றன. இவற்றின் பாறைகள் நெருப்பு வண்ணப்பாறை[2] என்ற வகை யைச் சேர்ந்தவை. இதுவே முதலில் கொதிக்கிற நெருப்புக் குழம்பாயிருந்து பின் இறுகிய பாறையாகும்; எனவே இதில் எத்தகைய உயிர்வகையும் இருப்பதற்கு இடமில்லை.

இதிலிருந்து உயிர் இனங்கள் தோன்றுவதற்கு முன்னைய காலந்தொட்டே, தென் இந்தியா நிலப்பகுதி யாக இருந்தது தெளிவாகின்றது.

இதற்கு நேர்மாறாக வட இந்தியா, இமாலயம், பிற ஆசியப் பகுதிகள் இவற்றின் மண் இயல்பையும் பாறை இயல்பையும் பார்த்தால், அவை மிகவும் பிற்பட்டவை என்பது தெளிவாக விளங்குகிறது.

வட இந்தியப் பகுதிகளின் நிலத்தில் எவ்வளவு ஆழந் தோண்டினும் கருங்கல் பாங்கான நிலம் காண்பதரிது. ஏனெனில், அப்பகுதி முழுமையும் உண்மையில் பல்லாயிர ஆண்டுகளாகச் சிந்து கங்கை ஆறுகள் அடித்துக் கொணர்ந்த வண்டல்களால் ஏற்பட்டதே யாகும் என்க. இதனிலும் சற்றுப் பழமை யான இமாலயமோ எனில் உலக வரலாற்றின் மிகப் பிந்திய நாள்வரையிற் கடலுள் அமிழ்ந்தே இருந்தது. அதில் இன்றும் காணப்படும் கடற்சிப்பிகளும், நண்டு

---

[1] Geologists. [2] Igneous Rocks.

முதலிய கடலுயிர்களின் எலும்புக் கூடுகளும், சுவடு களும் இவ்வுண்மைக்குச் சான்று பகர்வனவாம்.

மேலும், இவ்விடங்களின் நில அடுக்குகளில் செடி கொடிவகை உயிர்வகைகளின் சுவடுகள் காணப்படு கின்றன. அவையும் மிகப் பழைய உயிர்வகைகளாக இல்லை. இவற்றிற்கு மாறாகத் தென் இந்தியப் பாறை களின் அடிப் பகுதிகளில் உயிர்வகைக்கே இடமில்லாத கருங்கல் அல்லது நெருப்பு வண்ணக் கல்லே காணப் படுகிற தென்று முன் கூறினோம். அதன் மேற்பகுதி களில் மிகப் பழைய செடி கொடி வகைகள், உயிர்வகை கள் வளர்ச்சி முறைப்படி காணப்படுகின்றன.

மேலும், திருநெல்வேலிக் கோட்டத்தைச் சேர்ந்த ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் மிகப் பழமையான மனித எலும்புக் கூடுகளும், தலை ஓடுகளும் கண் டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை நுணுகி ஆராய்ந்த அறிஞர் இவையே உலகின் மற்றெந்தப் பகுதிகளில் எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளையும்விடப் பழமை வாய்ந்தவை என்றும், பெரும்பாலும் இவையே மனிதத் தோற்றத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தவையா யிருக்கக் கூடுமென்றும் அறிவிக்கின்றனர்.

நில இயல், [1]நிலத்தோற்ற இயல், [2]ஞால இயல், [3]ஆவிமண்டல நிலை இயல் இவற்றின் துணைகொண்டும் உய்த்துணர்வு கொண்டும் மிகப் பழமையான காலத்தின் உலகப் படத்தை அறிஞர்கள் பலர் வரைந்து காட்டி யுள்ளனர். அதில் சென்ற 150,000 அல்லது 200,000 ஆண்டுகளாகத் தென் இந்தியா, நிலப் பகுதியாக இருந்து வந்திருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

இன்னும் தமிழ் நாட்டின் பழமையைக் காட்ட வரலாற்றுச் சான்றுகளும் பல உள. ஆரியர் வட இந்தியா வந்தது கி. மு. 1500 என்றும், 2000 என்றும், 3000 என்றும் பலவாறாக வரலாற்றினர் உரைக்கின்ற

[1] Cosmology. [2] Geology. [3] Meteorology.

னர். எப்படியும் திராவிடர் நாகரிகம் இதனினும் பழமையானதாதலின், இது வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்ட தென்பதற்கு ஐயமில்லை. அதோடு ஆரியரின் மிகப் பழமையான நூலாகிய இருக்குவேதம் அவர்கள் இந்தியாவிற்கு வந்தபின், ஏற்பட்டதாதலால் அதற்கும் திராவிட நாகரிகம் முற்பட்டதென்பது சொல்லாமே அமையும்.

வரலாற்றறிஞர் பலர் இருக்குவேதமே உலகின் முதல் இலக்கியம் என்று கருதுகின்றனர். இவர்களுக்குத் தமிழிலக்கியத்தைப் பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் இருந்திருக்க இடமில்லை. தமிழ் நாட்டாரின் நான்கு ஊழிகளும் வட நாட்டார் பாகுபாடாகிய நான்கு யுகங்களும் ஒன்றே என்று கீழே காட்டுகிறோம்.* அதன்படி தமிழின் தலை இடைச் சங்கங்கள் முதல் மூன்று ஊழிளுக்குட்பட்டவை. வேதங்களோ பாரத காலமாகிய மூன்றாம் ஊழி இறுதியை ஒட்டி அப்பாரதக் கதையை எழுதிய வேதவியாசரால் ஏற்பட்டவை.

இதனைத் தொல்காப்பியம் நச்சினார்கினியர் உரையாலும் காணலாம். "நான்மறை" என்னும் சொற்றொடர்க்குப் பொருள் கூறுமிடத்து அவர், "நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமுடைமையால் நான்மறை என்றார்; அவை தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமும் ஆம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது. இவர் (தொல்காப்பியர்) இந்நூல் செய்த பின்னர், வேதவியாசர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்" என்று கூறுகிறார். இதனால் தமிழின் பழைய நூலாகிய தொல்காப்பியம், இருக்கு முதலிய வேத நூல்களுக்கு முந்திய தென்பது பெறப்படும்.

ஆரிய நாகரிகத்தினும் தமிழ் நாகரிகம் பன்னூறு மடங்கு பழமையுடையது என்பதைச் சேர சோழ

* 'காட்டுகிறோம்' என்றது அதே நூலுள் வேறொரு கட்டுரையுள்.

பாண்டியராகிய மூவேந்தரது தொடக்கற்ற பழம் பெருமையே காட்டும். திருக்குறளில் பழங்குடி என்னும் தொடரை விளக்குகையில் பரிமேலழகர், "சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டகுடி" என்று கூறுவது காண்க.

கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கூறப் படும் பாரதப்போரில் உதியஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன் இரு படைக்கும் சோறு வழங்கியதாகப் புறப்பாடல் ஒன்று கூறுகின்றது. இங்ஙனம் பெருஞ் சோறு வழங்கிய காரணத்தால் இவன் பெருஞ் சோற்றுதியன் சேரலாதன் என அழைக்கப்பட்டான். இவனைப் பாடிய புலவரான முரஞ்சியூர் முடிநாகராயரும் இவன் காலத்தவராதலின் பாரதகாலந்தொட்டே தமிழிற் சிறந்த பாக்கள் இருந்தமை மறுக்க முடியாத உண்மை யாகிறது.

பாரதக் கதையில் பாண்டியனது தலைநகர் மணலூர் என்று கூறப்படுவதனால் அஃது இடைச் சங்கத்தினும் பிந்தியது என்றும், வால்மீகியாரின் ராமாயணத்தில் கவடாபுரமே தலைநகராகக் கூறப்படுவதால் அஃது இடைச்சங்க காலத்தில் இருந்ததென்றும், தலைச்சங்கம் இராமாயணத்திற்கும், மாபாரதத்திற்கும் மிகப் பழமை யானது என்றும் ஏற்படுகின்றன.

தவிர, சூரவாதித்தன், சிபி, முசுகுந்தன், தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் முதலிய சோழ மன்னர், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டவர். இராமாயண பாரத காலங்களிலும், சிலப்பதிகார காலத்திலுங்கூட இவர்கள் மிகத் தொன்மையான புராணத் தலைவராகவே கருதப்பட்டனர். சோழரின் பழமையிதுவாயின் அவரினும் பழமையான பாண்டி யரைப்பற்றிக் கூறவேண்டுவ தில்லை.

வினாக்கள்

1. பூமியில் பிற பகுதிகளைக் காட்டிலும் நடுக்கோட்டுப் பகுதி எவ்வகையிற் சிறந்தது?

2. நிலநூல் கூறுகின்றபடி இவ்வுலகம் எவ்வாறு உண்டாயிற்றென எழுதுக.

3. நடுக்கோட்டுப் பகுதியிலேயே உயிர் வாழ்க்கை தொடங்கி யிருக்க வேண்டும் என்பதனை நிறுவுக.

4. தென் இந்திய வட இந்திய நிலப் பண்புகளை ஆய்க.

5. முதன்முதல் உயிர்த் தோற்றம் தென்னிந்தியாவிலேதான் இருந்திருத்தல் வேண்டு மென்பதற்குச் சான்றுகள் யாவை?

6. தொல்காப்பியத்தின் பழமையினை ஆசிரியர் எவ்வாறு உரைக்கின்றனர்?

7. தென்னிந்தியாவின் பழமைக்கான சான்றுகள் இவை என எழுதுக.

8. குறிப்பு வரைக: நெருப்பு வண்ணப்பாறை, ஆதிச்சநல்லூர், பெருஞ்சோற் றுதியன்.

அருஞ்சொல் அகராதி

அ

அடல்—வலிமை, கொல்லுதல்
அடல் ஏறு—வலிய சிங்கம்
அணங்கு—பெண்
அமர்—போர்
அமிழ்தம்—அமுதம்
அலகு—துடைப்பம்
அழல்—நெருப்பு
அழனிறக் கடவுள்—சிவன்
ஆக்கம்—உயர்வு, செல்வம்
ஆசியம்—சிரிப்பு, நகைச் சுவை
ஆற்றுப்படுத்தல்—வழிப்படுத்தல், வழியனுப்புதல்
ஆற்றுப்படை—ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல் வகை

இ

இரீஇ—இருத்தி
இவுளி—குதிரை
இளிவரவு—இழிவுச் சுவை
இளிவு—இகழ்ச்சி
இறுமாத்தல்—கருவமடைதல்
இறுமாப்பு—கருவம், செருக்கு
இறைமை—தெய்வத் தன்மை

உ

உடற்கரித்தல்—தோள் தட்டுதல்
உருவெளி—போலித் தோற்றம்
உழத்தல்—வருந்துதல்
உள்ளல்—நினைத்தல்
உறுதுணை—மிக்க துணை
உன்னுதல்—ஆழ்ந்து நினைத்தல்
ஊறு—இடையூறு

எ

எஃகம்—வேல்
எவ்வயின்—எவ்விடம், எப்பக்கம்

ஐ

ஐயாட்டை—ஐந்து ஆண்டுகளையுடைய

ஒ

ஒசித்தல்—முறித்தல், அசைத்தல்
ஒருப்படுதல்—சம்மதித்தல்
ஒரோவழி—சிறுபான்மை
ஒவ்வாதார்—ஒத்திராதார், பொருந்தாதார்

க

கரவு—வஞ்சனை, களவு
கலுழன்—கருடன்
கவறு—சூதாடு கருவி, சூது
கவற்சி—வருத்தம்
கவின்—அழகு
களம்—போர்க்களம்
களருளம்—பயனற்ற வுள்ளம்
களர்—உவர் நிலம், சேற்று நிலம்
கறவை—பாற்பசு
கன்மா—ஒரு மர வகை
கன்னி—புதுமை, அழிவின்மை, அழகு
காரணிகன்—நடுவன், மத்தியத்தன்
காலன்—இயமன்
காலுதல்—பொழிதல்
கிள்ளி—சோழர் சிறப்புப் பெயர்
குறிஞ்சிக் காடு—மலைக்காடு
குன்றம்—குன்று, சிறு மலை
கூவை—கூட்டம்
கை புனைதல்—அலங்கரித்தல்
கோடு—யானை பன்றிகளின் தந்தம்
கோட்டம்—கோயில்
கோயில்—அரண்மனை
கோள்—கிரகம்

ச

சண்டமாருதம்—பெருங்காற்று
சருகு—உலர்ந்த இலை
சாந்தம்—சந்தனம்
சிந்தூரம்—திலகம், செம்பொடி, யானை
சுவல்—குதிரை

செவ்வி—ஏற்ற சமயம், அழகு
சேறல்—செல்லுதல்

ஞ

ஞாயிறு—சூரியன்
ஞாலம்—பூமி
ஞான்று—நாள்

த

தகைத்தல்—தடுத்தல்
தண்பணை—தண்மையான வயல், மருத நிலம்
தலைக்கடை—முதல் வாசல்
தலைப்படுதல்—எதிர்ப்படுதல்
தானவர்—அசுரர்
திவலை—சிதறும் நீர்த்துளி
துனைவு—விரைவு
தெரித்தல்—விளக்குதல்
தெருண்டு—தெளிவுற்று
தேவர் குலம்—கோயில்
தோடு—பூவிதழ்

ந

நுண்மை—நுட்பம்

ப

பணை—மருத நிலம், வயல்
பரவை—பரப்பு, கடல்
பருவை—புலன்களுக்குப் பொருளாவது
பன்னுதல்—சொல்லுதல்
பிழம்பு—திரட்சி
பீடம்—இருக்கை
புரவி—குதிரை
புறக்காழ்—பனை முதலியவற்றின் வெளி வயிரம்.
புறந்தருதல்—பாதுகாத்தல்
புனல்—நீர்
பேடை—பெண் பறவை
பேதுறுதல்—மயங்குதல், மனங்குழம்புதல்
பேதை—பெண்
போலி—பொய், 'போல' இருப்பது
பொழ்தல்—பிளத்தல், ஊடுருவுதல்

ம

மத்தகம்—யானையின் தலை நெற்றி
மந்தி—பெண் குரங்கு
மருப்பு—யானைத் தந்தம்
மறம்—வீரம், பாவம்
மாதொரு பாகன்—சிவன்
மாருதி—அனுமன்
மிடுக்கு—வலிமை
மிலேச்சன்—அறிவீனன்
முருகு—இளமை, அழகு
மூங்கை—ஊமை
மெய்ப்பாடு—உள்ள நிகழ்ச்சி

ய

யாக்கை—உடல்

வ

வட்டு—சூதாடு கருவி
வயின்—பக்கம், இடம்
வரங்கிடத்தல்—வரம் வேண்டிப் படுத்துக் கிடத்தல்
வரை—மலை, எல்லை
வற்கடம்—வறட்சி, பஞ்சம்
வன்க(ண்)ணவர்—போர்வீரர்
வன்கால்—கொடிய காற்று
வாரணம்—யானை
வாளாமை—மௌனம்
வானவர்—தேவர்
விழுப்புண்—போரில் முகத்திலும் மார்பிலும் படும் காயம்
வெகுளி—கோபம்
வேழம்—யானை